# பக்தவசனம்

சைவ வைஷ்ணவ பக்தர்களின் திவ்ய சரித்திரங்களும்
தேவாரம் திருவாய்மொழி முதலிய திவ்யப்
பிரபந்தங்களிலிருந்து பாடல்களும்
அடங்கியுள்ளன

நாகைப்பட்டினம்
ஸ்ரீமதி வ. லலிதா தேவியால்
எழுதப்பட்டது

திருவாரூர்
ஸ்ரீமான் வ. நடராஜன் அவர்கள், B.A., L.T.
எழுதிய முகவுரை சேர்ந்துள்ளது

சென்னை
ஆக்ஸ்வர்ட் சர்வகலாசாலை ப்ரெஸ்
1923

எங்களுக்குப் பலவிதத்திலும் வெகுவாக நன்மைகள்
செய்து இப்புத்தகம் எழுதுவதற்கான அறிவும்
உத்சாகமும் ஏற்படுவதற்கு
உதவியாயிருந்த

**V. S. V.**

அவர்களுக்கு இச்சிறு புத்தகத்தை மிகவும்
அன்புடனும் வணக்கத்துடனும்
சமர்ப்பிக்கிறோம்.

வ. லலிதா தேவி
வ. நடராஜன்

Everymans Press, Madras.

# பொருளடக்கம்

முகவுரை — பக்கம்


A. சிவபக்தர்கள். முகவுரை .... 1

1. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் .... .... 3
2. கண்ணப்ப நாயனார் .... .... 9
3. நந்தனார் .... .... 14
4. திருநாவுக்கரசு ஸ்வாமிகள் .... .... 19
5. காரைக்காலம்மையார் .... .... 24
6. திருஞானசம்பந்த ஸ்வாமிகள் .... .... 28
7. திருமூல நாயனார் .... .... 32
8. குலோத்துங்க பாண்டியன் கதை .... .... 35
9. மாணிக்கவாசகர் .... .... 38

B. வைஷ்ணவ ஆழ்வார்கள். முகவுரை 44

10. பெரியாழ்வார் .... .... 46
10.(a) ஸ்ரீ ஆண்டாள் .... .... 51
11. குலசேகராழ்வார் .... .... 56
12. தொண்டரடிப்பொடியாழ்வார் .... .... 59
13. திருமங்கையாழ்வார் .... .... 62
14. நம்மாழ்வார் .... .... 69

C. விஷ்ணுபக்தர்கள். முகவுரை .... 74

15. புண்டரீகன் கதை. .... .... 76
16. நாம தேவர் .... .... 79
17. கபீர்தாஸர் .... .... 87
18. மீராபாய் .... .... 97
19. பானுதாஸர் .... .... 100
20. தாயுமான ஸ்வாமிகள் .... .... 105

# முகவுரை

மனவெழுச்சியும் உத்சாகமும் நமது தேசத்தில் அதிக மாயிருக்கும் இந்நாட்களில், தேசிய மதத்திற்கும் தேசிய பக்திக்கும் உரிய கல்வி நமது மக்களுக்குப் புகட்டவேண்டு மென்ற அவா அதிகரித்து வருகிறது. நமது தேசம் என்ற வாஞ்சையும், நமது தேசஜனங்கள் என்ற அன்பும், நமது வீரர்கள், நமது பக்தர்கள் என்ற பெருமையும், நம்தேச கௌரவம் என்பதும் பாலியத்திலிருந்தே நமது குழந்தைகளுக்கு ஊறிவரவேண்டு மென்பதே ஒவ்வொரு கல்வி யபிமானியின் ஆத்மார்த்த ஆசையாம். ஏதோ சொற்ப இங்கிலீஷ் கற்றுக்கொண்டவுடன், வயிற்றுக் கொடுமையினால் உடனே 10ரூபாய்க்கும் 20ரூபாய்க்குமாக எழுத்துக் கூலிவேலையைத் தேடி அலைவதனால் நமதுபிள்ளைகள் கல்வி கற்பதின் முக்கியநோக்கம் இது தான் என்று கருதிவிடக் கூடாது. தேசத்திற்காகப் பாடுபடுபவரெனப் பட்டம் பெற்று, மேடைகளிலும், சமாசாரப் பத்திரிகைகளிலும் ஆரவாரித்துக் கூக்குரலிட்டுக் கண்டோர் கேட்டோர் பிரமிக்கும்படி செய்பவர் போலன்றி, உண்மையான ஆசிரியன் தன்னிடம் படித்த பிள்ளைகளுக்கு நற்குணங்களும் நல்வழக்கங்களும் இயற்கையாய் உண்டாகும்படிச்செய்து, ஏதோ தன்னாலியன்ற வரையில் தேசமுன்னேற்றத்திற்குப் பாடு படுகிறான்.

நமது தேசம் விருத்தியாக வேண்டுமெனின், தேச ஜனங்கள் திடசரீரிகளாகவும் சந்தோஷ முடையார்களாயும் இருக்க வேண்டும். இது எவ்வாறு கிடைக்கும்? இத்தலைமுறை ஜனங்கள் அவ்வாறில்லாவிடினும் அடுத்த தலைமுறையினராவது அவ்வாறிருக்கும்படி நம்குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். இது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் விஷயம்.

ஆயினும் அந்த அரியவேலையில் தங்களுக்கு யாதொரு சம் பந்தமுமில்லையென்றெண்ணிக் கேவலம் பள்ளிக்கூட உபாத்தியாயர்களால்தான் தற்காலத்தில் கல்விமுறை அவகேடாய் இருக்கிறதென்று வாய் கூசாமல் கூறிவரும் பெற்றோர்களைப்பற்றி என் சொல்வது? உபாத்தியாயரது நிலைமையைப்பற்றி இங்கு எழுதப்புகின் அது பெரியதொரு புத்தகமாகும். தேசமுன்னேற்றத்திற்கும் தேசக்ஷேமத்திற்கும் அஸ்திவாரம் கட்டுபவர்போல, நந்தேசத்திய மக்களைக் கவனித்துவரும் உபாத்தியாயர்களின் கதி தேசத்திலுள்ள மரங்களையும், கற்றூண்களையும், மிருகங்களையும் கவனித்துவரும் உத்தியோகஸ்தரைவிட மிகக் கேவலமாயிருக்கிறது!

அப்படியிருக்க, தற்காலக்கல்விமுறைகளை நீக்கி, சீர்திருத்தங்களின்னவென்று தெளிவாகச்சொல்லி தேசாபிமானிகளெனப்பட்டம் பெற்று பிரசங்கிக்கும் பெரியோர்கள் உபாத்தியாயர்களுக்கு ஏதேனும் ஒருவித உதவி புரிந்தால் நலமாயிருக்கும். சன்மார்க்கபோதனையும் மதபோதனையும் பிள்ளைகளுக்குச் சரிவரக் கிடைப்பதில்லை என்ற பெருங்குற்றத்தை நாம் அடிக்கடி கேட்டு வருகிறோம். ஹிந்து, முகம்மதிய, கிறிஸ்தவ முதலிய பல மதஸ்தினரான பிள்ளைகள் உள்ள பள்ளிக்கூடங்களில் மதபோதனை எவ்விதம் சாத்தியமாகும்? ஆயினும் எந்தமதத்தினராயினும் பொதுவாகச் சன்மார்க்கபோதனை சாதாரணமாக நடந்தே வருகிறது. நானாவித மதங்களும் நானாவித ஜாதிகளும் உள்ள நம் தேசத்தில் ஒற்றுமை உண்டாவதற்கு, முக்கியமாக மதத்வேஷமும் ஜாதித்வேஷமும் குறைந்து, தன்னைப்போல பிறனையும் நினைத்து அவனிடம் அன்பும் ஆதரவும் காட்டும் உயர்குணம் நமது மக்களுக்கு முதன் முதலாகப் படியவேண்டும். ஆனது பற்றி நானாவித மதங்களிலும் பெரியோர் எனப் பெயர் பெற்றுக் கீர்த்தி வாய்ந்த சன்மார்க்கர்களையும் பக்தர்களையும்

பற்றி, நமது பிள்ளைகள் தெரிந்துகொள்ளவேண்டியது அவச்யம். இதை உத்தேசித்தே இப்புத்தகம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகளுக்கு உபயோகமாகும் பொருட்டு வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தில் சைவ வைஷ்ணவ பக்தர்களது சரித்திரங்கள் மாத்திரம் சிறுவர் சிறுமிகளின் பொருட்டு சுருக்கி எளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. முகம்மதிய கிறிஸ்தவ பக்தர்கள் சரித்திரங்களும் இதில் சேர்த்திருந்தால் மிகவும் நலமாயிருக்கும். கூடிய சீக்கிரத்தில் அவர்களது சரித்திரங்களையும் சேர்த்து வெளியிடுவதாக இப்புத்தக ஆசிரியர் எண்ணியிருக்கிறார்.

பகவத்பக்தர்களில் சாதிபேதமென்பது கிடையாது. உயர்ந்த ஜாதியிற் பிறந்ததனால்மாத்திரம் ஒருவன் உயர்ந்தவனாய்விட மாட்டான். தெய்வபக்தியும் மனித விசுவாசமும் பொருந்திய எவனும் உயர்ந்தவனெனக் கொள்ளவேண்டும். இச்சரித்திரங்களில் ஆங்காங்கு பகவானே இக்கருத்தை வெளியிட்டு ஜனங்களுக்கு அறிவு உண்டாகச் செய்திருக்கிறார். ஒருவனது குணத்தினாலும் யோக்யதையினாலும் மாத்திரம் உயர்வு தாழ்வு ஏற்படுகிறது. மேலும் ஒருவன் கோவிலுக்குச் செல்வதில்லை என்றும், ஒருவன் கடவுளை ஒருவித நாமங்கொண்டு பூஜிக்கிறான் என்றும் அவனைக் கேவலமாக நினைத்துவிடல் மகா பாபமாகும். சாதாரணமாக சைவநூல்களில் சிவனை விஷ்ணு பூசித்தான் என்றும் விஷ்ணுவை இரண்டாவது கடவுளாகவும் விவரித்திருக்கக் கேட்பதால் சைவ வைராக்யர்கள் விஷ்ணுபக்தர்களை இளப்பமாக எண்ணியிருக்கலாம். இதே மாதிரியாக வைஷ்ணவ புத்தகங்களில் சிவன் இரண்டாவது கடவுள் என்றும், அவனை பூஜிப்பதால் மோக்ஷசாதனம் கிட்டாது என்றும் விவரித்திருக்கக் கேட்பதால் வைஷ்ணவபக்தர்கள் சிவபக்தர்களைப்பற்

றிக் கேவலமாக எண்ணலாகும். இதுபற்றி ஒருவருக்கொரு வர் அசூயையும் த்வேஷமும் ஏற்பட்டு நமது ஹிந்து மதத்தினருக்குள்ளேயே ஒற்றுமை நசித்துப் போய்விடுகிறது. இதைப்பற்றி நாம் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்து கொண்டு, அந்த நூலிலிருந்தும் இந்த சாஸ்திரத்திலிருந்தும் ஆதாரங்கள் காட்டி விவாதம் செய்து த்வேஷத்தை அதிகப்படுத்தி வருவதைவிட், சமரஸமாக எல்லாவித பக்தர்களும் ஜனங்களுக்குத் தெய்வபக்தியும் சன்மார்க்கமும் காட்டி வசித்து இருந்தார்கள் என்ற பொது விஷயத்தைப் பிள்ளைகளுக்கு வற்புறுத்தி, நமது தேச ஜனங்களெல்லோரிடத்தும் வாஞ்சையும் அன்பும் அவர்களுக்கு நிலையாக ஏற்படும் விதம் பெற்றோர்களு ம்உபாத்தியாயர்களும் பாடுபடுதல் அவர்களது கடமையாகும்.

தேசத்தில் தர்மம் குறைந்து த்வேஷமும் அசூயையும் விருத்தியாகிக் கேவலமாயிருக்கிற சமயம் பகவத்பக்தர்கள் திவ்யக்ஷேத்திரங்களில் அவதரித்து ஜனங்களுடன் பகவந் நாம சங்கீர்த்தனம் செய்து பக்திமார்க்கத்தைப் புகட்டி ஜனங்களைக் கைதூக்கி விட்டிருக்கின்றனர். பரமபக்தனிடம் த்வேஷ மென்பது ஒருதுளியேனும் இல்லை. எல்லாம் பகவான் செயலாதலின் இது நல்லது இது கெடுதல் என்று எண்ணி பக்தனொருவன் சந்தோஷிப்பதோ வருந்துவதோ இல்லை. இவ்விதமான பக்தன் தனக்கென்று ஒருகாரியமும் செய்வதில்லை யாதலின் பகவான் அவனுக்கு ஸ்வாதீனன். அவனுக்கு ஆபத்து வந்தகாலையில் தனக்கே ஆபத்துவந்தது என பகவான் ஓடோடியும் வந்து உதவி செய்வார். இவ்விதமாகப் பக்தர்களுக்குப் பகவான் பலவிதங்களில் வேலை செய்தன ரென்று இக்கதைகளில் வாசிக்கலாம். பக்தர்களும் பகவானிடமே மனத்தை லயித்திருக்கச் செய்து, அவருடன்

கலந்து இவ்வுலக வியவகாரங்களை மறந்து ஆனந்தத்தை அனுபவிப்பார்கள். பகவானே பக்தன், பக்தனே பகவான் ஆதலின், பகவத்பக்தர்களை உபசரித்து ஆராதனை செய்து அவர்களுக்குத் தொண்டுசெய்வது மிக உத்தமமான காரியம். இதைக்கருதியே தொண்டரடிப்பொடியென்றும், அடியார்க்கு மடியவன் என்றும் பரமபக்தர்கள் தம்மையே தாழ்மையாக சொல்லிக்கொண்டு மற்ற பக்தர்களுக்குத் தொண்டுச் செய்வார்கள். அவர்களே அப்படிச் செய்தார்களெனின் கேவலம் நம்போன்றவர்கள் என்ன செய்வது? அந்த பக்தர் களது திவ்விய சரித்திரங்களை வாசிக்கக் கிடைத்த பாக்யத் தை நினைத்து ஆனந்திப்போம். அந்தபக்தர்கள் வசித்த காலத்தில் நாமும் வசித்திராமற் போனேமே என்று வருந்த வேண்டியதில்லை. இக்காலத்திலேயே பல பரம பக்தர்களைப் பார்த்துப் பழகியும் அவர்களைப் பற்றிக் கேள்வியினுல் அறிந்தும் வருகிறோம். பிறருக்கே சதாகாலமும் நன்மை செய்யும் நிமித்தம் உழைப்பவரும், தன்னலம் கருதாது யாதொருவிதப் பற்றுமின்றி பரமபக்தராயிருப்பவர் பலர் இக் காலத்திலும் இருக்கின்றனர். தந்நாட்டு ஜனங்களுக்கு நன் மை செய்வதன்பொருட்டே தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம்செய்து உழைப்போர் பலர். தாம் மேற் கொண்ட நற்காரியத்தை எவ்வித இடையூறு வரினும் விடா மற் கடைப்பிடித்து நிற்போர் பலர். துன்பங்களென நாம் கருதும் பலவிதக் கஷ்டங்களை அந் நற்காரிய நிமித்தம் சுகமே என்று அனுபவித்து ஆனந்தித்திருப்போர் பலர். இவ்வித மான பக்தர்களையும் தொண்டர்களையும் பற்றி நாம் வாசிப்ப தும் அவச்யம். மேலும் தேசம் முழுதும் இவ்வித கியாதி ஏற் படாமல், தம் ஒளி பலருக்குந் தெரியும்படி பிரகாசியாமல் மண்ணுள் மறைந்திருக்கும் மாணிக்கம்போல, பலபக்தர்கள் நமது வீட்டிலும் நமது அண்டை வீட்டிலுமே இருக்கிறார்

கள், இருப்பார்கள். இவர்களை நாம் அனுபவத்தில் அறிந்து ஆராதித்து, ஆனந்திக்க வேண்டும்.

இம்மாதிரியான புத்தகம் யாவராலும் விரும்பப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் என்ற முழு நம்பிக்கையுடன், அச்சிடப்பட்டது. ஆங்காங்கு தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய திவ்யப் பிரபந்தங்களிலிருந்து சில பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்களுக்கு மாத்திரமின்றிப் பெரியோர்களுக்கும் இப்புத்தகம் உபயோகமாகுமென்று நம்புகிறேன்.

இப்புத்தகத்தில் நிவர்த்தி செய்யக்கூடிய குறைகள் ஏதேனும் இருப்பின், அவைகளைத் தனக்குத் தெரிவிக்குமாறு இப்புத்தக ஆசிரியர் மிகவும் பிரார்த்திக்கின்றனர்.

V. நடராஜன்.

# சிவபக்தர்கள்

## (முகவுரை)

சிவபக்தர்களுக்குப் பொதுவாக அடியார்கள் என்று பெயர். அதாவது வணக்கமாயிருந்து தொண்டுசெய்து அடிபணிந்திருப்பவர் என்று பொருள். பக்தர்கள் அடியார்க்கு அடியான் என வணக்கமாய்த் தம்மைச் சொல்லிக் கொள்வது வழக்கம். சிவனடியார்களில் முக்கியமானவர் அறுபத்து மூன்று நாயன்மார்கள். நாயன்மார் என்றால் சிவ பக்தியில் சிறந்தவர் என்று பொருள். சிவம் என்றால் அன்பு என்றும், சைவம் என்பதற்கு அன்புமயம் என்றும் பெரியோர் பொருள் சொல்லுவர். ஆகவே அன்புமிகுந்திருக்கும் யாவரும் சிவபக்தரெனப்படுவர். இந்த அறுபத்து மூவரைத் தவிரப் பலசிவபக்தருமுளர். பக்தராய்ப்பணிந்திருப்பாரும், சித்தத்தை சதாசிவன்பாலே வைத்திருப்பாரும், பரமனையே பாடியிருப்பாரும், எல்லாரும் சிவனடியார்களே.

அறுபத்து மூவர் சரித்திரங்களை பெரியபுராணம் என்னும் நூலில் விவரமாக வாசிக்கலாம். இந்தத் திருத்தொண்டர் புராணத்தை சேக்கிழார் என்பவர் (இவருக்கு நம்பியாண்டாள் நம்பிஎன்றும் ஒரு பெயருண்டு) திருஆரூர் அரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி திரட்டித் தொகுத்துப் பாடல்களாகப் பாடிவைத்தார். உமாபதி சிவாசார்யார் என்னும் சிதம்பரவாசியொருவர் சேக்கிழார் சரித்திரத்தையும் எழுதி பெரியபுராணத்துடன் சேர்த்துவைத்தார். திருத்தொண்டரது எண்ணிக்கையும் வரிசைக்கிரமமும் சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய "தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்ற பாட்டிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது.

இந்த அறுபத்து மூவரைத் தவிர அநேக சிவபக்தர்கள் இருக்கிறார்கள் என்று முன்னமே சொல்லப்பட்டது. இப் புத்தகத்தில் கடைசியில் ஒருபாடமும், 8, 9 பாடங்களும் வேறு சிவபக்தர்களைப் பற்றியவையாகும். மதுரையில் பகவான் (சோமசுந்தரமூர்த்தி) தன்பக்தர்களுக்காக பலவிதமான வேஷம் பூண்டு அவர்களுக்கு உதவி செய்த விபரங்களைத் திருவிளையாடல் புராணம் என்னும் புத்தகத்தில் வாசிக்கலாம். அப்படி பகவான் திருவிளையாடல் புரிவதற்குக் காரணமாயிருந்த சில பக்தர்களின் சரித்திரங்களும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சிவபக்தர்கள் பகவானை பக்திசெய்து ஆனந்தித்துப் பாடியபாடல்கள் பலஉள. அவற்றுள் முக்கியமானவை தேவாரம், திருவாசகம் எனப்படும். இப்பாடல்களை சிவாலயங்களில் பகவானை தரிசிக்கும் சமயம் பக்தர்கள் பாடி மகிழ்வார்கள். சிலபாடல்கள் இந்தப்புத்தகத்தில் ஆங்காங்குகொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை வாசித்து, மனப்பாடம் பண்ணி, ராகத்துடன்பாடி அடையும் ஆனந்தம் மற்று உள்ள எல்லாப் பாடல்களையும் வாசிப்பதற்குத் தூண்டும் என்பது நிச்சயம்.

V. N.

## சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள்

ஆலால சுந்தரர் என்ற பக்தர் கைலாஸத்தில் பகவானுக்குத் தொண்டு செய்திருப்பவர். ஒருநாள் அவர் பூந்தோட்டத்தில் பார்வதி தேவியாரின் சேடிகளான அனிந்தை, கமலினி என்ற பெண்களிருவரையும் பார்த்து அவர்களைக் கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்பட்டார். அவர்களும் சம்மதப்படவே, மூவரையும் பூமியிற்சென்று வசித்து வரும்படி உமையும் பகவானும் உத்தரவு செய்தார்கள். பகவானை விட்டுப்பிரிய மனமில்லாதவராய் வருந்தி "என் ஐயனே நான் பூமியில் பிறந்தாலும் மயங்காமல் உன்மேலே சித்தத்தை நிறுத்தும்படியாக என்னை ஆட்கொள்ளவேண்டும்" என சுந்தரர் வேண்டிக் கொண்டார்.

திருநாவலூரில் சடையனார் என்ற பிராமணருக்கும் இசைஞானியார் என்ற அவர் மனைவியாருக்கும் குமாரனாக ஆலால சுந்தரர் பிறந்து நம்பியாரூரர் என்ற பெயருடன் வளர்ந்து வந்தார். பிறகு அவருக்குக் கலியாணம் நடக்கும் சமயம் பகவான் இவரைத் தடுத்தாட்கொள்ள நினைத்து, ஒரு பிராமணக் கிழவராய் அச்சபையில் வந்து, நம்பியூரார் மணத்தைத் தடுத்துச் சபையிலுள்ளவர்களை நோக்கி, இந்த நம்பியூரான் என்னுடைய அடிமை ஆகவே இவனை எனது அதிகாரப்படி நடத்துவேன் என்றார். நம்பியாரூரனும் இவன் என்ன பித்தன் போலும் என்றான். சபையோர் எல்லாரும் சிரித்து, "இதை நம்பத்தகுந்த ஆதாரம் என்ன?" என, கிழவர் தம்மிடமிருந்த அடிமை ஓலையை எடுத்துக்

காட்டினார். அதில் “திருநாவலூரிலிருக்கும் ஆதி சைவப் பிராமணராகிய ஆரூர னென்னும் பெயருள்ள நான் திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் பித்தனுக் கெழுதிக்கொடுத்த முறியோலையாவது, இத் தேதி முதல் நானும் எனது சந்ததியாரும் உமக்குக் கொத் தடிமை செய்ய மனம் வாக்கு ஒத்து எழுதிக்கொடுத் தேன். இதற்கு இதுவே என் கையெழுத்து” எனக் கண்டிருந்தது. நம்பியாரூருடைய பாட்டனாரது கை யெழுத்தையும் சாட்சிகளின் கையெழுத்துக்களையும் கண்ட எல்லாரும் ஓலையை ஒப்புக்கொண்டு, நம்பியா ரூரர் அடிமை செய்யவேண்டியதே எனத் தீர்மானித் தார்கள்.

நம்பியாரூரரும் ‘ஐயரே உமக்கு இவ்வூரில் விடுதி எங்கே’ எனப்பணிந்து கேட்க, பகவான் கோவிலுக்கு அவரைக் கூட்டிச்சென்று அங்கே தன் கிழவேஷத் தை மறைத்துக்கொண்டார். நம்பியாரூரன் கிழவரைத் தேடித் திகைத்து நிற்க, பகவான் இருடபாரூடராய் உமாதேவியாருடன் காட்சியளித்து, அவரது பூர் வோத்திரத்தைச் சொல்லித் தான் தடுத்தாட்கொண் டதைச் சொன்னார். பிறகு அவரை ஆசீர்வதித்து, பக வானைப் பாடிமகிழ்ந்திருக்கும்படி யருளினார். பித்தனே என்று பகவானைத்தான் அழைத்த காரணமாக, முத லில் அந்தப் பதத்தையே அமைத்து “பித்தா பிறை சூடி” எனத்துவக்கிப் பாடல்கள் பாடித் துதித்தார்.

கைலாஸத்தில் ஆலால சுந்தரராயிருந்த நம்பியா ரூரர் என்ற இவருக்கு இதன் பிறகு சுந்தரமூர்த்தி நாயனார் என்றபெயர் வழங்கலாயிற்று.

சுந்தரர் ஒரு நாள் திரு ஆரூரில் வந்து ஸ்வாமி தரிசனம் செய்து பாடிக்கொண்டிருந்தார். பார்வதி தேவியாரின் சேடிகளில் கமலினி என்பவள் திரு ஆரூரில் பிறந்து, பரவையார் என்ற பெயருடன் கோவில் பணி செய்து வந்தாள். முன்பே நேசித்திருந்தவர்களாதலின், அவர்கள் இருவருக்கும் விவாகம் நடந்தது. பின்பு ஒருநாள் கோவில் மண்டபத்தில் இருந்த சிவனடியார்கள் கூட்டத்தைக்கண்டு பக்தி பரவசராய் " தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" எனத்துவக்கிப் பாடல்கள் பாடி இத்தொண்டருக்கெல்லாம் நான் அடியவன் எனச் சொல்லித் துதித்தார்.

திருஆரூரில் தியாகராஜப்பெருமாள் அருள்பெற்று பகவானையே தன் தோழனாக அடைந்து ஆனந்தமாயிருந்தார். ஒரு சமயம் திருஆரூரில் பங்குனித் திருவிழாவில் சிவனடியார்களுக்கு சமாராதனைசெய்யப் பணம் இல்லாமல் வருந்தி செங்கல்லைத் தலைக்கு வைத்துத் தியாகராஜனை வேண்டிப்படுத்திருந்தார். பிறகு விழித்தெழுந்து பார்க்கும்போது செங்கல்லே தங்கக்கல்லாயிருக்க மகிழ்ந்து அதை விற்று சமாராதனை செய்தார்.

பிறகு சிவஸ்தலயாத்திரை செய்துவரும்பொழுது வேதாரணியத்தில் பகவான் பன்னீராயிரம் பொன்தர, அதைத் திருஆரூர் கமலாலயத்தில் தனக்குக் கிடைக்கும்படி வேண்டி மணிமுத்தாநதியில் போட்டு வந்தார். திரு ஆரூருக்கு வந்து கமலாலயத்திலிருந்து அப்பொன்னைப் பெற்றுக்கொண்டனர். இதைக்கண்ட எல்லாரும் அதிச்யித்தனர். மற்றுமோர்சமயம் சிவஸ்தல யாத்திரை

செய்து வந்த சுந்தரர் வழியில் களைத்து விழுந்து விட, பகவான் தமது பக்தனைக் காப்பாற்றும் பொருட்டு பிராமணவடிவம் கொண்டு அவருக்கு அன்னம் இட்டுக் களைதீர்த்து உபசரித்து மறைந்தார். இன்னொரு ஊரில் பகவான் பிராமணர்களின் விடுதிகளுக்குச் சென்று அன்னம் யாசித்து வந்து சுந்தரர் பசிக்குக் கொடுத்தார். தனது கஷ்டத்தை மதிக்காமல் தன்பக்தனுக்கிரங்கி பலவிதமாக பகவானாகிய பரமசிவன் இவ்விதம் உதவி செய்துவர, ஐயோ எம்பெருமானுக்கு இவ்வளவு சிரமம் கொடுத்தேனே என்ற வருத்தம் ஒருபுறமும், எனக்கு இந்த பாக்கியம் கிட்டிற்றே என்ற ஆனந்தம் ஒரு புறமுமாக சுந்தரர் சிவக்ஷேத்திரங்கள் தோறும் சென்று பகவானைத் தரிசித்துத் துதித்துப் பாடுவதே தொழிலாய்க் கொண்டார்.

இப்படியாகத் திருவொற்றியூர் செல்ல அங்கே பார்வதிதேவியாரின் சேடிகளில் இன்னொருவள் சங்கிலி யார் என்ற நாமதேயத்துடன் பிறந்து வளர்ந்துவர, பகவான் அருளால் (மறுபடி பரவையாரிடம் போக வில்லை என உறுதிமொழி கூறிய பிறகு) அவளையும் விவாகம் செய்துகொண்டார். கொஞ்சநாள் அவ்விடமே இருந்தார். பிறகு திருஆரூர் தியாகேசரை நினைத்துப் புறப்பட்டு வந்தார். சங்கிலியாரை மறந்து வந்தது பற்றி பகவான் கோபித்து, சுந்தரருக்கு இருகண்களும் தெரியாமல் போகும்படித் தண்டித்தார். சுந்தரர் மிக வும் வருந்தி பகவானை வேண்டிப் பலகாலும் துதித் தார். திருஆரூர் வந்தவுடன் கண்கள் திரும்பவும் பெற்றார்.

சங்கிலியாரைக் கலியாணம் செய்துகொண்டதைக் கேள்வியுற்ற பரவையார் கோபித்திருக்க, சுந்தரரது வருத்தத்தை நீக்கக்கருதி, பகவானே பரவையாரிடம் சென்று சமாதானம் செய்து இருவரையும் சந்தோஷமாய் இருக்கச்செய்தார். திரு ஆரூரில் சிலநாள் இருந்துவிட்டுப் பிறகு சிவஸ்தலங்கள் தோறும் யாத்திரை செய்ய மறுபடியும் புறப்பட்டார். ஒவ்வொரு ஸ்தலத்திலும் பகவானைத் துதித்துப் பாடல்களைப் பாடி வந்தார்.

இவ்விதமாக யாத்திரை செய்துவருகையில் ஓர் ஊரில் ஒருவீட்டில் ஒருபிள்ளைக்கு கலியாண சந்தோஷமாயிருக்க, அடுத்த வீட்டில் ஒரு பிள்ளை இறந்து போனதைக் குறித்து ஒரே அழுகுரலாயிருந்தது. அதைக்கண்ட சுந்தரர் பரிதாபம்கொண்டு பகவானைத் துதித்துப் பிள்ளை பிழைத்து வரும்படி பிரார்த்தித்தார். உடனே பிள்ளையும் பிழைத்து எழுந்திருக்க எல்லாரும் களிப்படைந்தார்கள்.

இவ்விதமாகப் பல இடங்களிலும் ஸ்வாமி தரிசனம் செய்து அவர் இறந்துபோனவுடன் பகவான் திருவருளால் கைலாஸம் அடைந்து பகவானைப் பிரியாமல் என்றும் சுகித்திருந்தார்.

1. i. பித்தா பிறை சூடி பெருமானே யருளாளாய்
எத்தால் மறவாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்
(லூர் அருட்டுறையுள்
அத்தா உனக் காளாய்இனி அல்லேன் எனலாமே.

iv. முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்ற
(மூர்த்தீ
கொடியேன் பல பொய்யே உரைப் பேனைக் குறிக்கொள்நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
(அருட்டுறையுள்
அடிகேள் உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே.

2\. தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையேயென்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கடி
னல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன் [யேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே.

3\. i. பொன்னார் மேனியனே! புலித்தோலை யரைக்கிசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவ
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே [னே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

ii. கண்ணா யேழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்
பண்ணா ரின்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

4\. வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதுஅறஞ் செய்மின்தடங் கண்ணான்மலரோனும்
கீழ்மேலுற நின்றான்திருக் கேதாரமெனீரே.

—தேவாரம்.

## 2. கண்ணப்பநாயனார்

மலைநாட்டில் உடுப்பி என்ற ஊரில் நாகன் என்ற வேடர் தலைவன் இருந்தான். அவனுக்கு சுப்பிரமணி யக் கடவுளருளினால் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குத் திண்ணன் எனப் பெயர் வைத்துப் பிரியமாய் வளர்த்து வந்தான். வில்வித்தை முதலியன கற்றுத் தேர்ச்சியடைந்து வயதுவந்தவுடன் திண்ண னார் காட்டில் வேட்டையாடி வரலாயினார். ஒருநாள் ஒருபன்றி வேடர்கள் கட்டினவலையினின்றுந் தப்பிஓட, திண்ணனார் அதைப்பிடிக்க அதன்பின் ஓடினார். நாணன் காடன் என்ற இரு வேடர்களும் அவருடன் கூட ஓடிவந்தார்கள். வெகுதூரம் ஓடிக் கடைசியில் திண்ண னார் பன்றியைக் கொன்றார். பிறகு அவர்கள் அவ் விறைச்சியைச் சுட்டுத் தின்று இளைப்பாறித் திரும்பிப் போகலாமென்று தங்கினார்கள்.

சமீபத்தில் மலைமேலிருந்த கோவிலைக்கண்டு அக் கடவுளைத்தரிசிக்க ஆவல்கொண்டு திண்ணனார் மலைமேல் ஏறி பகவான் சந்நிதான மடைந்தார். கோவிலினுட் செல்லவே பகவானுடைய கருணைப்பார்வை தன்மேல் பட்டமாத்திரத்தால், இரும்பு தரிசன வேதியால் பொன் ஆவதுபோல, பழையகுணம் எல்லாம் மறைந்து அன் புருவமாய் மாறினார். சிசு அன்னையைக்கண்டு அணைத் தாற்போல ஆனந்த பரவசராய் ஓடிச்சென்று சிவலிங் கத்தைக் கட்டிக் கொண்டார், முத்தமிட்டார், "என் அப்பனே! நீ ஒண்டியாய் இருக்கையே" எனக் கண்ணீர்

விட்டார். மனங் கசிந்து உருக "எனக்கு இந்த ஸ்வாமி அகப்பட்டது என்ன ஆச்சரியம்" எனப் பரவசமாய்க் கீழே விழுந்து எழுந்து தெளிந்து "ஸ்வாமி உம் தலையில் தண்ணீர் ஊற்றிப் பச்சிலைப்பூவையும் போட்டது யாரோ?" என்றார். பக்கத்தில் நின்ற நாணனைக் கேட்டார். அதற்கு நாணன் ஒரு பிராமணர் இவர் முடியிலே நீரை வார்த்து இலையும்பூவும் சூட்டி அன்னம் ஊட்டி எதிரில் நின்று எதேதோ பேசிப்போவதைத் தான் பார்த்திருப்பதாகச் சொன்னான்.

அதைக் கேட்டுத் தானும் அவ்விதமே செய்வதாக உறுதி கொண்டார். 'ஸ்வாமி நீர் பசியாய் இருப்பீரே, உம்முடைய பசிக்கு நான்போய் இறைச்சி கொண்டுவருவேன்' எனச் சொல்லிப்புறப்பட்டார். ஆனால் பகவானை விட்டுப் பிரிந்துவர மனம் இசையவில்லை. ஸ்வாமியண்டையில் வருவார், மறுபடியும் போவார். இப்படியாக வருந்திக் கடைசியில் இறைச்சிகொண்டுவர மலையை விட்டு இறங்கி வந்தார்.

இறைச்சியில் நல்ல பாகங்களை அம்பில் கோர்த்து நெருப்பில் வாட்டி, தன் வாயிலிட்டு ருசிபார்த்து, ருசியில்லாப் பாகங்களைத் துப்பிவிட்டு ருசியானபாகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு திண்ணனார் கோவிலுக்கு ஓடினார். தானும் சாப்பிடாமல் வாயில் போட்டுப்போட்டுத் துப்பிவிட்டுத் தங்களுக்கும் கொடுக்காமல் பைத்தியம் பிடித்தவர்போல் ஓடினதைக்கண்ட நாணனும் காடனும் "என்ன செய்வோம் இரவும் நெருங்கிவிட்டதே" என்று வருந்தி வீட்டிற்குச் சென்றார்கள்.

அவர்கள் போனதைத் திண்ணனார் கவனிக்கவே

யில்லை. பகவான் பசியாய் இருப்பர் நான் காலதாமத மில்லாமல் போகவேணும் என எண்ணி, புஷ்பம் பறித்துத் தலையில் சொருகி வாயில் ஆற்றுநீரை மொண்டு கொண்டு, ஒருகையில் வில்லேந்தி ஒருகையில் ஆகாரம் எடுத்து வேகமாய் ஸ்வாமியண்டை வந்தார். தனது கால் செருப்பால் ஏற்கனவே ஸ்வாமி தலையில் சாத்தியிருந்த பத்திர புஷ்பங்களைக் கீழே தள்ளினர். வாய்நீரை ஸ்வாமி தலையில் உமிழ்ந்து அபிஷேகம் பண்ணினர். தன் தலைப் பூவை ஸ்வாமி முடியின்மேல் சாற்றினர். பிறகு இறைச்சியை மனங்கசிந்து ஊட்டவே பகவான் அன்பனுடைய அன்புக்கு இரங்கி சந்தோஷமாகச் சாப்பிட்டார். அன்று இரவெல்லாம் திண்ணனர் கண்கொட்டாமல் கையில் வில்லேந்தி ஸ்வாமியைத் துஷ்ட மிருகங்கள் அணுகாமல் காவல் புரிந்தார். காலைவேளையில் ஸ்வாமிக்கு இறைச்சிகொண்டுவர வேட்டைக்குப் புறப்பட்டார்.

தினந்தோறும் ஸ்வாமிக்குப்பூஜைசெய்துவரும் சிவபக்தரான சிவகோசரியார் என்ற பிராமணர் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து பூஜைத் திரவியங்களுடன் புறப்பட்டுவந்தார். கோவிலில் ஸ்வாமிகிட்ட எலும்பும் இறைச்சியும் இறைந்து கிடக்கக் கண்டார். இதென்ன! எந்தத் துஷ்டர்கள் இந்த வேலை செய்தார்கள்? பகவானே! இப்படி செய்யப் பார்த்து எப்படி சகித்து இருந்தீர்? எனத் துள்ளிக்குதித்து தவித்துச்சோர்ந்து விழுந்து எழுந்து, கீழே பெருக்கி மெழுகி சுத்தம் செய்து, மறுபடி ஸ்நானம் செய்துவந்து, உருத்திர சமக நமகத்தினல் சுவா

மிக்கு அபிஷேகம் செய்து பத்திர புஷ்பங்களால் அர்ச்சித்து, கைகூப்பித் துதித்துப் பாடிப் பரவசராய் இருந்தார். பிறகு பிரிய மனமில்லாதவராய்ப் பிரிந்து தபோ வனத்துக்குப் போனார்.

வேட்டைக்குப்போன திண்ணனூர் பன்றி மான் முதலிய மிருகங்களைக்கொன்று அவற்றின் இறைச்சி களைச் சுட்டுப் பதம்பார்த்து எடுத்துத் தேனையும் அதில் பிழிந்து எடுத்துக்கொண்டு, வாயில் ஜலமும் தலையில் பூவும் சொருகி, ஸ்வாமியினிடம் வந்தார். முன்போல பூஜை செய்து பகவானிடம், 'இன்று அருமையான இறைச்சி கொண்டுவந்தேன் புசியும்' எனச் சொல்லி அன்புடன் ஊட்டினார். நாணனும் காடனும் வீடுவந்து நடந்த சேதிகளைச் சொல்லக்கேட்ட நாகன் வந்து திண் ணனூரை வீட்டுக்கு வரும்படி எவ்வளவோ மன்றாடி அழைத்தும் வரமறுக்கவே பலனில்லாமல் விட்டுவிட் டுப் போய்விட்டான்.

பிறகு திண்ணனூர் வேட்டை நேரம் போக இராப் பகல் பகவானைப் பிரியாமல் அன்னம் தூக்கம் இரண்டு மின்றி நின்று காவல் புரிந்துக்கொண்டே பக்தியினால் பகவானிடம் ஈடுபட்டவராய்த் தன்னை மறந்து இருந் தார்.

சிவகோசரியார் தினமும் சிவசந்நிதானத்திலே இறைச்சி கிடத்தலைக் காண மனம் நொந்து துயரடைந் தார். திண்ணனூரின் பக்தியைப் பலருக்கும் அறிவித்தற் பொருட்டு, சிவகோசரியாரை வழக்கம்போல பூஜை முடித்துப்போகாமல், ஒருநாள் மறைந்து இருந்து பார்க்கும்படி பகவான் அருளிச்செய்ய, அவ்விதமே

சிவகோசரியாரும் மறைவிலிருந்து கவனித்தார். வழக்கம்போல வந்தத் திண்ணனார் ஸ்வாமி கண்களில் ஒன்றில் ரத்தம் பெருகுவதைக் கண்டார். உடனே கொண்டு வந்தவைகளை எல்லாம் எறிந்தார். ஆஹா என்ன அபசாரம்! யார் உன் கண்ணில் காயப்படுத்தினது! என் அப்பனே ஐயனே, என்று வஸ்திரத்தால் ரத்தத்தை ஒத்தினார், பகவானை வந்து கட்டிக்கொண்டார், இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்தார். தனக்குத்தெரிந்த பச்சிலைகளைக்கொண்டு வந்து பிழிந்தார். என்ன செய்தும் ரத்தம்பெருகுவது குறையவேயில்லை. இவ்விதமாக வருந்துகையில் "ஊனுக்கு ஊனையிடு" என்ற வாக்கியம் ஞாபகத்திற்கு வந்தது. உடனே குதித்தார். கொஞ்சமும் தயங்காமல் தன் ஒரு கண்ணைப்பேர்த்து எடுத்துக் கடவுள் கண்ணில் அப்பினார். ரத்தம் உடனே நின்றுவிட்டதைக் கண்டார். கெக்கெலிகொட்டி நகைத்தார். குதித்து ஆனந்தம்கொண்டு ஆகாரம் ஊட்ட ஆரம்பித்தார். ஆனால் உடனே மறு கண்ணில் ரத்தம் பெருக ஆரம்பித்தது. இதைக்கண்ட திண்ணனார், "இதேது மறு கண்ணில் ரத்தம் வருகிறதே? ஹே! பகவானே! எனக்கு இன்னொரு கண்ணிருக்கிறது. உன் கண்ணுக்கு மருந்து தெரிந்துகொண்டபடியால் இனி எனக்குப் பயமில்லை" எனத்துணிந்து, தன் மறுகண்ணைத் தோண்டி எடுத்தபிறகு கடவுள் கண் இருப்பிடம் தனக்குத் தெரியவேண்டி, தன்கால் விரலை ஸ்வாமியின் கண் இருக்குமிடத்தில் ஊன்றித் தன் மறுகண்ணைத்தோண்ட ஆரம்பித்தார்.

பகவான் மனமிரங்கி திண்ணனது பக்திக்கு

மெச்சி, சிவலிங்கத்திலிருந்து தனது கையை நீட்டி அவனது கைகளைப்பிடித்துக்கொண்டு "கண்ணப்பா! பொறு" எனச் சொல்லிக் காட்சிகொடுத்தருளினார். என்னாளும் தன்னண்டையில் இருந்து களித்திருக்கும் படி வரமளித்தனர். திண்ணனுருக்குக் கண்ணப்பர் என்ற பெயர் ஏற்பட்டது.

இவைகளை நேரில்கண்ட சிவகோசரியார் உளம் புளகாங்கிதமாய்ப் பகவானுடைய கிருபைக்கும் கண்ணப்பனுருடைய பக்திக்கும் சந்தோஷித்துச் சென்றார்.

பகவானிடம் உள்ளன்போடு பக்திசெய்பவர்களைத் தான் பகவான் மெச்சுகிறார். பாசாங்குக்காரர்களை பகவான் நன்றாய் அறிந்து தள்ளிவிடுகிறார்.

## 3. நந்தனார் (திருநாளைப் போவார்)

நந்தனார் சோழமண்டலத்தில் கொள்ளிடக்கரையோரத்தில் ஆதனூர் என்ற கிராமத்தில் பிறந்த புலையர். அவர் ஜாதியில் புலையராயிருப்பினும் சிவனடியார்களில் மகாசிறந்தவர். நிலத்தை உழுது சாகுபடிசெய்து நிலத்து எஜமானனுக்கு நெல்அளந்து, தானும் ஜீவித்து வந்தார். சிவஸ்தலங்களுக்கும் அடிக்கடிபோய் சிவதரிசனம் பண்ணுவார்.

அவர் திருப்புன்கூர் என்ற சிவ ஸ்தலத்திற்குச் சென்றபோது எட்டநின்று கொண்டு "பகவானே! என்னை உம்கிட்டவந்து பணியும் பாக்கியமில்லாத பறையனாகப் பிறப்புவித்தீரே! ஈசா உம்முடைய தரிசனம் இங்கிருந்து பார்க்கவும் தெரியவொட்டாமல் நந்தி

தேவர் நடுவில் மறைத்துக்கொண்டு படுத்திருக்கிறாரே. என்மேல் இரக்கம் காட்டி தரிசனம் காட்டுமையா" எனக்கதறி சிரமேல் கரங்கூப்பி கண்ணீர் ஆறாகப் பெருகப்பெருகத் துதித்தார். பகவானும் கருணை கூர்ந்து நந்தி தேவரை சற்று நகர்ந்து இருக்க ஆக்ஞாபித்து, தரிசனம் கொடுத்து பக்தனை சந்தோஷிப்பித்தார். இப்பவும் அந்தக் கோவிலில் நந்தி நகர்ந்தேதான் இருக்கிறது. நந்தனார் ஆனந்தம் பெருக விழுந்து, நின்று, ஆடினார், பாடினார், குதித்தார்.

அதன் பிறகு ஸ்வாமி பணிவிடைக்குத் தான் கொண்டு வந்திருந்த கோரோசனை, மத்தளத்தோல், யாழ் நரம்புகள், முதலானவைகளை கோவிலாரிடம் ஒப்புவித்தார். அதனுடன் நில்லாமல் அவ்வூரில் கோவிலுக்கு எதிரே குளம் ஒன்று தோண்ட விரும்பி ஒருவராய் இருந்து வெட்ட ஆரம்பித்தார். பகவான் அவர் ஆசையை நிறைவேற்ற விரும்பி தன் குமாரனாகிய விநாயகரை அனுப்பினார். கணபதி ஒரு கூலியாள்போல வந்தார். நந்தனாரிடம் இருந்த இரண்டு மரக்கால் நெல்லைக் கூலியாகப் பெற்று திருக்குளம் வெட்டும் வேலையைப் பூர்த்திசெய்தார்.

நந்தனாருக்குத் தனது ஊருக்குவந்தபின் சிதம்பரம் போக வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. உடனே எஜமானாகிய பிராமணரிடத்தில் தெரிவித்துக் கொண்டார். அவரை அனுப்பிவிட பிராமணர் விரும்பவில்லை. பிராமணர் உத்தரவு கொடுக்காமல் போகவே, நந்தனாருக்கு அதே ஏக்கமாய் சாப்பாடு தூக்கமும் சரிவர இன்றி. எப்போதும் "சிதம்பரம் போகாமலிருப்பேனோ

இந்த ஜன்மத்தை வீணுக்குக் கழிப்பேனே, நானேப்போ காமலிருப்பேனே நான் நாறுமுடலை சும்மா சுமப்பே னே" எனச்சொல்லி பிரேமைமேலிட்டுத் திரிந்தார். அவ ருடன் சேர்ந்த மற்றவர்களோ அவர் செயலைக் கண்டித் தார்கள். ஆனல் நந்தனர் மற்றப் புலையர்களெல்லாரை யும் கூட்டித் திருநீறுபூசி சிவசந்நிதானத்தைச் சுற்றி வந்து கும்பிடச்சொல்லி அவர்களுக்குப் புத்திசொல்லித் தனது வழிக்குத் திருப்பினர். ஆகவே தன்னேடுகூட தனது ஜாதி ஜனங்களையும் சேர்த்து அவர் புனிதமாக்க லாயினர். ஒரு சமயம் நந்தனர் சிதம்பரம் போக வேண்டி உத்தரவு கேட்க, பிராமணர் "அப்பா நந்தா, நீ கையால் நாற்றுநட்டு நீர் ஊற்றினல் நெல் நிரம்பப் பயிராகுமடா, நீ போய்விட்டால் நான் சகிப்பேனே" என்றார். இதைக்கேட்ட நந்தனர் இரவில் கடவுளைத் தியானித்துப் படுத்தார். சிதம்பர நடராஜ பகவான் நந் தனரது கனவில் தோன்றி "நாளை நீ சிதம்பரம் வர லாம். நெல்கதிர்களை விளைவித்து விட்டோம்" எனச் சொல்லி மறைந்தார்.

கண்விழித்துப் பார்த்தார் நந்தனர். உழுதுகொண் டிருந்த கழனிகளில் நெற்கதிர்கள் பழுத்துப் பாரந்தாங் காமல் வணங்கி நிறைந்திருக்கக் கண்டார். பொழுது புல ரவும் பிராமணரைக் கூட்டிவந்து காட்டித் தன்னைச் சிதம்பரம் போகவிடும்படி வேண்டினர். நெற்கதிர் நிரம்பிய வயலைக்கண்ட பிராமணர் ஆச்சரியமடைந் து நந்தனரை வணங்கி, உனக்குப் பகவான் கிருபை உண்டாயிருக்கிறது. நீ சுகமாய்ப் போய்வா, ஆனல்

னர். நந்தனரும் வெகு பக்தியாய் அவரை வணங்கி பக வானைத் துதிக்கும்படி சொல்லி,சிதம்பரம் நோக்கிப்புறப் பட்டு,நடந்து வந்து சேர்ந்தார். கோபுர தரிசனம் கண்ட தும் பரவசராய்,ஊரைச்சுற்றி பிரதக்ஷணமாய் வந்து கூத் தாடிக் கொண்டாடித்தார். உடல் சிலிர்ப்ப மெய்ம்மறந் தார். ஆனல் அவர் உடனே கோவிலுக்குள்போக முடியாமைக்கு மனம் வருந்தி "ஐயோ இந்த ஜன்மம் வேண்டாம்" என அழுது அநேகந் தடவை ஊரைச் சுற்றி சுற்றி வந்தும் உள்ளே நுழையக்கூசியும் அயர் ந்து கால் ஓய்ந்து மெய்ம்மறந்து ஆற்றோரத்தில் படுத்து நித்திரை போனர்.

அன்று ராத்திரி பக்தனுக்கு அருள்செய்ய வேண்டி பகவான் நடராஜர் தில்லை மூவாயிரவர் * சொப்பனத் தில் தோன்றி, தனது பக்தனகிய நந்தனைக் கூட்டி வந்து, தீ வளர்த்து குளிப்பிவைக்க ஆக்ஞாபித்தார். நந்தனரிடம் சொப்பனத்தில் தோன்றி தன் அன்பன் துக்கத்தை ஆற்றினர். கண்விழித்த நந்தனர் 'கன வோ நினைவோ நான் கண்டதும் பொய்யோ' என யோசித்திருந்தார். தனித்தனியே தாங்கள் கண்ட சொப்பனத்தைப்பற்றி தில்லை மூவாயிரவரும் சேர்ந்து கூடிப்பேசி, பகவான் ஆக்கினைக்கு உட்பட்டு நந்தனை ரைத் தேடிவந்து, அவரை அழைத்து, தீமூட்டி குளிக் கச் சொன்னர்கள். நந்தனர் மெய் பரவசராய் அக்கினி

* தில்லை யென்னும் சிதம்பரத்தில் நடராஜக் கடவுளை அருச்சித்து பூசித்து வருபவர் மூவாயிரம் பிராமணர். அவர் களுக்குத் தீக்ஷிதர்கள் என்று பெயர். இக்காலத்தில் அக் குடும்பத்தினர் சுமார் 300 பெயரே உளர்.

யை மூன்றுமுறை வலம் வந்து அத்தீயில் உள்ளன்போடு கூடியவராய்ப் பாய்ந்தார். ஆனால் அவர் ப்ரம்ம தேஜசுடன் கூடியவராய் நீறு உத்திராக்கம் அணிந்த சடாமகுடத்துடன் விளங்கும் மகாமுனிவர் ரூபத்துடன் மறுபடி தீயினின்றும் வெளிவந்தார். இதைக் கண்ணுற்ற யாவரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். நந்தனார் கோவில் உள்ளே சென்று பகவான் பாதத்தைப் போற்றிப் பணிந்து பகவானிடம் ஐக்கியமானார்.

1. தில்லையைக்கண்டேன் தேறித்தெளிந்தேன்
எல்லையில் நின்றேன் இனிப்பிறவேன்காண்
எனக்கினியார் ஈடு கரும்புபோ லினிக்குது பார்வீடு
ஆசாபாசத்தை வேரறவெட்டி யானந்தத்தின் முழுக்
[காட்டி
வைக்குமிது யாருக்குங் கிடையாது இந்தசுகம் பாருக்கு
[ளிணையேது?
சரணமென்றிங்கே வந்தேன்சாமி.

2. தாதெய் தெய்யென்றாடுவார்
அவர்தத்தித் தெய்யென்றாடுவார்
ஆதிபராபரமாகிய சித்து
ஆனந்தங்கொண்டொரு காலையெடுத்துத்—தாதெய்
அண்டசராசர மெங்கும் நடுங்க
ஆதிசேடனார் முடிகள் நெருங்க—தாதெய்
சீலம்பெருகிய முனிவர் கொண்டாட
திங்களுஞ்சூடிய செஞ்சடையாட—தாதெய்

3. செந்தீமேலெழும்போது செம்மலர்மேல் வந்தெழுந்த;
அந்தணன்போற்றென்றினார்; அந்தாதுந்துபி நாதம்
வந்தெழுந்த; திருவிசும்பில் வானவர் கண்மகிழ்ந் தார்த்துப்
பைந்துணர் மந்தாரத்தின் பனிமலர் மாரிகள் பொழிந்தார்.

—நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.

## 4. திருநாவுக்கரசு ஸ்வாமிகள்

திருவாமூர் என்ற ஊரில் புகழனார் என்ற பெயருள்ள வேளாளர் ஒருவரிருந்தார். அவருக்கு திலதவதி என்ற பெண்ணும் மருணீக்கியார் என்ற ஒரு பிள்ளையும் இருந்தனர். சோழராஜாவின் சேனாதிபதியாகிய கலிப்பகை நாயனாருக்கு திலதவதியை மணம் செய்ய நிச்சயித்திருந்தது. அரசன் ஆக்கினைப்படி கலிப்பகை நாயனார் வடதேசத்தில் யுத்தம் செய்வதற்குச் சென்றார். இச்சமயம் புகழனாரும் அவர் மனைவியும் இறந்து போனார்கள். குழந்தைகள் பெற்றோர்களை யிழந்து வலித்து வந்தனர். யுத்தத்திற்குப்போன கலிப்பகை நாயனார் சண்டையில் இறந்து வீரஸொர்க்கம் சேர்ந்து விட்டனர். இதைக் கேள்வியுற்ற திலதவதியார் அவருடன் தானும் இறக்க நிச்சயித்தனள். அவருக்குத் தன்னைக்கொடுப்பதாய் தந்தையார் வாக்களித்திருந்தமையால், 'இனி எனது உயிரை அவருடன் சேர்ப்பேன்' எனக்கூறும் தமக்கையைக் கண்டு, தம்பி "அக்கா உனக்கு முன்னம் நானும் உயிர் விடுவேன்" என்றான். அதைக்கேட்டு தம்பிபால் உள்ள அன்பினால் திலதவதி உயிர் தாங்கி சிவபக்தி மேலிட்டவராய்க் காலம் கழித்து வரலாயினார்.

அவர் அவ்வித மிருக்க, மருணீக்கியார் பலவகை சாஸ்திரங்களைப் படித்து வந்தார். பிறகு சமண மதத்தில் சேர்ந்து அதில் பெருமைபெற்று தருமசேனரெனப் பெயர் பெற்றனர். சிவபக்தி மிகுந்த திலதவதியார் தம்பி வேறு சமயத்தில் சேர்ந்து விட்டதைக் குறித்து மனதில் வருந்தி, அவரைத் திருத்தும்படி தின

காலமும் வேண்டிக் கொண்டிருந்தாள். பகவான் திலகவதியின் கனவில் தோன்றி உன் தம்பிக்கு வயிற்றுவலி உண்டாகி பிறகு சிவபக்தன் ஆவன் எனச் சொல்லி மறைந்தனர். அப்படியே தருமசேனர் வயிற்றுவலியால் மிக வருந்தி, சமணரது மந்திரங்களால் குணமாகாமல் வருந்தி, ஒரு நாள் ராத்திரி தமக்கையாரிடம் வந்து அழுதார். திலகவதியார் இரங்கி, தம்பியுடன் சிவ ஆலயத்தை வலம் வந்து திருநீறு பூசிக்கொண்டு சிவ பெருமானை வேண்டி நின்றனர். பகவான் அருளால் வயிற்றுவலி சுகமடைய இருவரும் சந்தோஷித்தனர். மருணீக்கியார் நல்ல பாடல்களைப் பாடித் துதித்தார். அவருக்கு திருநாவுக்கரசு நாயனர் எனப் பெயர் வந்தது.

பாடலிபுரத்திலிருந்த சமணர்கள் இதைக் கேள்வியுற்றனர். சமண மதத்தினனாகிய அவ்வூர் அரசன் மிகக் கோபங்கொண்டு நாயனரை அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினன்.

சிவனடியாரோ அஞ்சவில்லை. "நாம் யார்க்கும் குடியல்லேம்" என்று சொல்லி வரமறுத்துவிட்டனர். ஆயினும் சிவபக்தருக்கு ஒருவித கஷ்டமும் உண்டாகவில்லை. நெருப்பு சுடவில்லை. விஷமோ ஒன்றும் செய்யவில்லை. அவரைக் கொல்லும்படி விட்ட யானையோ அடங்கிப்போய் விட்டது. கடைசியாகப் பாராங்கல்லைக் கட்டி சமுத்திரத்தில் போட்டார்கள். சிவபக்தரோ நமசிவாய என்னும் நாமத்தையே துதித்துக் கொண்டு பகவானையே உற்ற துணை என நம்பி இருந்தார். அவர் கிருபையினால் கல்

மிதந்தது. அலைகளால் மோதப்பட்டு கரை வந்து சேர்ந்தார். பிறகு திருப்பாதிரிப்புலியூரில் சிவபிரானைத் தரிசித்துத் துதித்துப் பாடினர். இவரது பக்தி மேன்மை தேசமெங்கும் பாவியது. அவ்விடத்திய அரசனுகிய பல்லவராஜன் இவரது குணத்தை யறிந்து தானும் சிவபக்தனுயினன். சிவஸ்தலங்கள் தோரும் சென்று தரிசித்து ஆங்காங்கு பாடல்கள் பாடி மகிழ்ந் தார். சீர்காழியில் திருஞான சம்பந்தரைப் பார்க்க, அவர் 'அப்பரே' என அழைத்ததால் அப்பர் என்ற பெயர் ஏற்பட்டது.

இவ்விதமாகப் பல ஸ்தலங்களுக்குச் சென்று அங் குள்ள சிவபக்தர்களைத்தரிசித்து அவர்களால் பெருமை யடைந்து பகவானைப்பாடி மகிழ்ந்தார். ஒவ்வொரு ஊரிலும் தமது பக்தியின் வலிமையினுல் ஜனங்களுக் குண்டான கஷ்ட நிஷ்டூரங்களைப் போக்கினுர். பிறகு காசியில் விச்வேச்வரரைப் பணிந்து கைலாஸம் செல்ல விரும்பி வடக்கே நேர நடந்தார். வெகுவித கஷ்டங்கள் நேர்ந்தும், தைரியம் விடாமல் எப்படியும் கைலாஸம் செல்ல உறுதி கொண்டு நடந்தார். கால்கள் பலம் குன்றி வலி எடுத்துவிடாமல் நகர்ந்து செல்லத்துவக்கி னுர். இவர் மனதின் உறுதியைக் கண்டு மகிழ்ந்த பகவான் அவரை அங்கு ஒரு குளத்தில் ஸ்நானம் செய் யச் சொன்னுர்.

அப்படியே குளத்தில் மூழ்கின நாயனுர் திருவை யாரில் காவிரியில் வந்து எழுந்தார். எழுந்து பார்க்க கைலாஸத்தையும் பார்வதி சமேதரான பரமசிவனையும் முனிவர்கள் தேவர்கள் கூடம் இருப்பதையும் கண்டு

ஆனந்தித்துக் களித்தார். ஆனால் அந்த ஆனந்தக் காட்சி அடுத்த நிமிஷம் மறைந்து விட்டது. நாயனார் வருந்தி "மாதர் பிறைக் கண்ணியானை" என்று பல பாடல்களைப்பாடித் துதித்து நின்றார்.

பிறகு ஒருசமயம் அவ்வழியாக திருஞான சம்பந்தர் வர, அவர்பல்லக்கைத் தூக்கி அப்பரும் நடந்தார். "அப்பர் எங்குற்றார்" என சம்பந்தர் வினவ, "அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்றிங்குற்றேன்" எனப்பணிந்து சொன்னார். உடனே சம்பந்தர் கீழே இறங்கி அப்பரைப் பணிந்தார். இப்படியாகச் சிவனடியார்கள் ஒருவரை ஒருவர் பணிந்து நின்றனர். பகவானைப் பணிந்தேத்திப் பலநாட் கழித்து அவர் அருளால் கைலாஸமடைந்து சுகம் பெற்றார்.

அப்பர் பாடியபாடல்கள் மிகவும்அருமையானவை, அவைகள் சொற்சுவையும் பொருட் சுவையும் நிரம்பி அன்பு மயமாயிருக்கும். ஆகவே அவருக்கு நாவுக்கரசு என்று பெயர். அவர் பாடிய பாடல்களில் சிலவற்றைப் படியுங்கள்.

1\. i. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக்கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

ii. இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

iii. முன்னெறியாகிய முதல்வன் முக் கணன்
தன்னெறியேசர ணுதல்திண்ணமே
யந்நெறியேசென் றங்கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே.

2. அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை
யருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங்கோனை மற்றைக்
கரியானை நான் முகனைக் கனலைக் காற்றை
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்றக்
பெரியானைப் பெரும் பற்றப் புலியூரானைப்
பேசாதநா ளெல்லாம் பிறவா நாளே.

3. மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் [பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ் சுவடு படாமலையா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

4. அப்பநீ யம்மைநீ யையனுநீ யன்புடையமாமனுமாமியுநீ
ஒப்புடையமாதரு மொண்பொருளுநீயொரு குலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையா யென் னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ இம்மணிநீ இம்முத்துநீ யிறைவநீ யேறூர்ந்த செல்வ நீயே.

—தேவாரம்.

## 5. காரைக்காலம்மையார்

சோழமண்டலத்தில் காரைக்காலிலே தனதத்தன் என்ற வைசியனுக்கு புனிதவதியார் என ஒரு புத்திரி இருந்தார். நாகபட்டணத்திலிருக்கும் நிதிபதி என்பவரின் புத்திரனாகிய பரமதத்தனுக்கு அவளை விவாகம் செய்வித்து தனக்கு வேறுமகப்பேறு இன்மையால் தன் அருகிலேயே வர்த்தகம் செய்திருக்கும்படி பரமதத்தனுக்குப் பொருள் தனதத்தன் அளித்தனன். பரமதத்தன் புனிதவதியாரோடு சுகமாய் இருந்து கொண்டு, விசேஷ வியாபாரம் செய்து பிரபலமாய் வாழ்ந்துவந்தான்.

இப்படியிருக்க ஒரு நாள் மிகவும் அருமையான மாம் பழம் இரண்டு தனக்குக் கிடைத்ததை ஒரு ஆள் மூலம் தனதுமனைவியிடம் பரமதத்தன் அனுப்பினான். புனிதவதியார் சமையல் செய்து கொண்டிருந்தார். அவர் சிவனடியார்களுக்கு உபசரித்து அன்னமிட்டு வருவது வழக்கம். எப்போதும் கடவுளையே சிந்தித்த மனத்துடன் கூடியவராய் இருந்துவந்தார். பகவான் அவளுடைய பக்தியைப் பிறருக்கு உணர்த்த எண்ணி, கிழவேடம் பூண்டுவந்தார். சிவனடியாரைக்கண்ட புனிதவதியார் ஓடோடிவந்து உபசரித்து உட்காரச் சொன்னாள். ஈசனும், "அம்மா எனக்கு மிகவும் பசி களைப்பாய் கண்ணிருண்டு போகுது, அனசமயலைப்போடு" எனக் கேட்டார். உடனே புனிதவதியார் சாதம்மட்டுமே ஆகி இருந்தபடியால் சாதத்துடன் நல்ல தயிரும் கலந்து இட்டார். அதனுடன் உப பதார்த்தம் யாது மில்லாமையால் கணவன் அளித்த பழம் இரண்டில் ஒன்

றை எடுத்துவந்துபோட்டு உபசரித்து அன்னம் அளிக்க உண்டு பகவான் மறைந்துபோனார்.

வழக்கம் போல சாப்பிடவந்ததும் பரமதத்தன் தனக்குப் பரிமாறின மாங்கனியைப் புசித்துத் திருப்திப் படாமல் இன்னொருகனியையும் கொண்டுவரச் சொன்னான். புனிதவதியார் கணவர் ஆசையை அறிந்து கணவரைத் திருப்திசெய்விக்க வேறுமாங்கனி இன்மையால் வருந்தி உள்ளே வந்துநின்று கடவுளைத் தொழுதனர். பகவான் கிருபையினால் தன்கையில் ஒரு மாங்கனி வரக் கண்டுமகிழ்ந்து, அதைக் கொண்டுவந்து கணவனுக்குக் கொடுத்தாள். பரமதத்தன் மாங்கனியைப் புசிக்க, முந்தின கனியிலும் அது ருசியாய் இருக்கக் கண்டு, "இது ஏது, நான் அனுப்பினது இதுவா?" என வினவினான்.

பொய் கூறத் துணியாமலும், கணவன் மேலும் மேலும் வற்புறுத்திக் கேட்டமையாலும், ஒன்றும் சொல்லாமலிருக்கவும் முடியாத நிலைமையில் புனிதவதியார் நடந்த உண்மைகளனைத்தினையும் ஒளியாமல் கூறிவிட்டனர். பரமதத்தனோ நம்பாமல், 'நீ பகவானருளினால் மறுபடி ஒருமாம்பழம் வரவழை பார்ப்போம்' எனக் கேட்டனன். புனிதவதியாரும் பகவானை மனமுருகி சிந்தனைபண்ணி வேண்டினர். பகவான் அவள் வாக்கை மெய்ப்பிக்க வேறொரு மாங்கனி தந்தனர். கையில் மாங்கனி வரக்கண்டு மகிழ்ந்து கணவனிடம் தந்தனள். பரமதத்தன் அத்யாச்சரியமாய் நோக்கவும், மாங்கனி மாயமாய் மறைந்தது.

அன்றுமுதல் அவளை பரமதத்தன் காணவும் [illegible]

கினன். ஆகவே ஒருநாள் மெல்ல அவளை விட்டுப்பிரிந்து வியாபார நிமித்தம் செல்வான்போல, பாண்டிய நாடு சென்று, அவ்விடம் ஒருமனைவியையும் கலியாணம் செய்து கொண்டு திரும்பி வரநினையாமல் இருந்து விட்டான். சிலகாலஞ் சென்றபிறகு அவனுக்கு ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணுக்கு புனிதவதியார் எனத் திருநாமமிட்டு தனது முதல் மனைவியை மனதால் போற்றிவந்தான்.

இவ்விடம் புனிதவதியார் சிலகாலம் கணவர் வரவை எதிர்நோக்கி வராமைகண்டு விசனமாய் இருந்து வந்தனர். ஒருநாள் கணவர் இருப்பிடம் தெரியவந்தது. புனிதவதியாரின் வற்புறுத்தலின் மேல் அவருடைய சுற்றத்தார்கள் அவரை அவர் கணவரிடம் கொண்டு போய் விட்டனர். புனிதவதியாரை மனதில் மனைவியாக மதியாமல் தெய்வீகத்தன்மை கண்டது முதல் தெய்வமாகவே போற்றி வருகிற பரமதத்தன் தனது மற்றோர் மனைவியையும் பெண்ணையும் கூட்டிவந்து புனிதவதியார் பாதத்தில் அவர்களைப் பணியச் செய்து தானும் விழுந்து நமஸ்கரித்து, "இனி உன்னை மனைவியாக வைத்துக்கொள்ள என்மனம் துணியவில்லை. என் செயலுக்கு வருந்தாமல் மன்னித்து இந்தக் குழந்தையையும் இந்த என் மனையாளையும் ஆசிர்வதிப்பாய்" என மன்றாடிக் கேட்டுக் கொண்டான். தனது கணவன் தன்னை ஏற்றுகொள்ள மறுதளித்ததும் தன்னை வணங்கின அநீதிச் செயலும் கண்டு தாளாமல் தனது கணவனுக்கு ஆகாத தனது உருவத்தின் அழகெல்லாம் கெடுக்கக் கொண்டு தனது சுற்றத்தாரை

யும் வெறுத்து, ஆண்டிச்சி வேஷம் கொண்டு கைலாஸத்தை நோக்கி வடக்காகப் பிரயாணமாய் வழிநடக்கலானர். கைலாஸமலையில் (ஹிமய) காலால் நடக்காமல் தலையால் நடக்க முயன்றனர். அவர் பக்திக்கு இரங்கி பரமசிவனும் உமாதேவியாருடன் காட்சிகொடுத்து, மோக்ஷம் அளித்தனர். பகவான் அவளை "அம்மையே! எழுந்திரு" என விளித்தமையால் அவருக்கு 'காரைக்காலம்மை எனப்பெயர். காரைக்காலில் அவருக்கென ஒரு கோவில் கட்டிவைத்து ஜனங்கள் கொண்டாடிவருகிறார்கள். மேலும் மாம்பழத் திருநாள் என இப்பவும் ஒருநாள் உத்சவம் கொண்டாடுவதும் வழக்கம்.

1\. *நாடுநகருந்திரிந்துசென்று நன்னெறிநாடி நயந்தவரை*
*மூடிமுதுபிணத்திட்டமாடே முன்னியபேய்க் கணஞ்*
*[சூழச்சூழக்*
*காடுங்கடலும் மலையுமண்ணும் விண்ணுஞ்சுழல வனல்*
*[கையேந்தி*
*ஆடுமரவப்புயங்க னெங்களப்பனிடந் திருவாலங்காடே.*

2\. i. *கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்போதஞ்சி நெஞ்ச*
*[மென்பாய்*
*தளர்ந்திங்கிருத்தறவிர்த்தி கண்டாய் தளராதுவந்தி*
*வளர்ந்துந்து கங்கையும் வானத்திடை வளர்கோட்டு*
*[வெள்ளை*
*இளந்திங்களும் மெருக்கும் மிருச்சுகுஞ் சென்னியீச*
*னுக்கே.*

ii\. *ஈசனவனல்லாதில்லை யெனநினைந்து*
*கூசிமனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி*
*மறவாதுவாழ்வாரை மண்ணுலகத்தென்றும்*
*பிறவாமைக் காக்கும்பிரான்.*

—காரைக்காலம்மை பாடல்கள்.

# 6. திருஞான சம்பந்த ஸ்வாமிகள்

சோழதேசத்திலே சீர்காழி என்ற ஊரிலே சிவபாத விருதர் என்ற பிராமணோத்தமர் இருந்தார். அவர் மனைவிபெயர் பகவதியார். அவர்களுக்கு ஆளுடைய பிள்ளையார் என ஒரு அருந்தவப் புதல்வன் இருந்தான். ஒருசமயம் குழந்தையைத் தனியேவிட்டு பெற்றோர்கள் வேறு அலுவலாயிருக்கும்போது, அக்குழந்தைக்குச் சிவபக்தி உண்டாகும்படி பார்வதி தேவியார் ஞானப்பாலை ஒரு கிண்ணத்தில் கொடுத்துக் குடிக்கச் செய்து, குழந்தையைச் சந்தோஷிப்பித்து மறைந்து போயினாள். பிதா வந்து குழந்தை வாயில் பாலமுதத்தைக்கண்டு அதட்டி, "யார்தந்தனர்?" என்று கேட்க, குழந்தை இவர்தந்தார் எனக்கோவிலைச் சுட்டிக்காட்டி "தோடுடைய செவியன்" என ஆரம்பித்துப் பாடினார்.

சிறுகுழந்தை இவ்வாறு பாடித்துதிக்கவே, இக்குழந்தைக்குப் பகவானிடத்தில் ஏற்பட்ட பக்தியைக் கண்டு தந்தையும் தாயும் வியந்து, குழந்தையைக் கோவிலுக்குத் தூக்கிச் சென்று தினமும் கடவுளைத் தரிசிப்பித்து வந்தனர். ஆளுடைய பிள்ளையார் என்ற பெயர் போய் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் என்ற திருநாமம் அன்று முதலாக ஏற்பட்டுவிட்டது. ஞானசம்பந்தர் தென்னிந்தியாவில் உள்ள பல க்ஷேத்திரங்களுக்குப் போய் அங்கங்கு ஸ்வாமியைத் தரிசித்துப் பாடல்கள்பாடித் துதித்துவந்தார்.

திரு நீலகண்டயாழ்ப்பாண நாயனார் என்பவர் சம்பந்தர் பாடிய பாடல்களை தனதுயாழில் அமைத்துப் பாட விரும்பிக் கேட்க சம்பந்தரும் இசைந்தனர். இ

வரும் ஆநந்தமாய் பகவானது குணங்களைப்பாடிக் கொண்டேபோய் சிதம்பரத்தில் நடராஜ மூர்த்தியைத் தரிசித்து மகிழ்ந்து, மேலே நடக்கக் கூடாமல் கால் வலிஉண்டாக ஓரிடத்தில் தங்கினார்கள். பாலகனாகிய சம்பந்தருக்கு இரங்கி,பல்லக்கு குடை முதலியவைகளை பகவான் அனுப்பிவைத்தார். அதைக்கண்ட சம்பந்தர் "எந்தை ஈசன் எம்பெருமான்" என்று பாடினார். பிறகு பல்லக்கில் ஏறிக்கொண்டு ஸ்தலங்களுக்குப் பிரயாணம் செய்தார்.

திருப்பாச்சிலாச்சிரமம் என்ற ஒரு பட்டணத்தின் அரசன் சம்பந்தரை அன்புடன் வரவேற்று, உபசரித்து, ஆலயத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கே சவம்போல் உள்ள ஒரு பெண்மணியைக்கண்டு சம்பந்தர் "அவள் யார்?" எனக் கேட்டார். அரசனும் தன்னுடைய மகள் என்று சொல்ல, சம்பந்தர் அன்புகூர்ந்து "துணிவளர் திங்கள்" என்றுபாடி பகவானை வேண்டித் துதிக்க, அந்தப்பெண் சுகமடைந்து எழுந்தாள். அரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி சிலநாள் அவ்வூரில் தங்கியிருந்து மறுபடியும் ஸ்தலங்கள் தோறும் சென்று பகவானைப்பாடி மகிழ்ந்திருந்தார்.

ஒரு ஊரில் குளிர்காச்சலினால் ஜனங்கள் வருந்தக் கண்ட சம்பந்தர் இரங்கி "அவ்வினைக் கிவ்வினை" என்றுபாடி பகவானைத் துதித்து வேண்டினார். உடனே அப்பிணி ஜனங்களை விட்டு நீங்கிவிட்டது. இவ்விதமாக ஒவ்வொருஊரிலும் தன்னாலான உதவியை ஜனங்களுக்குச் செய்துகொண்டே யாத்திரை செய்தார்.

ஒருசமயம் ஒரு மடத்தில் தங்கியிருக்க, சமீபத்

யிருந்த கோவிலில் அழுகுரல் கேட்டது. அங்குச் சென்று பார்க்க தன்னை மணக்க இருந்த புருஷன் பாம்பு கடித்து இறந்து விடவே அதைக் கண்டு சகியாமல் ஒரு கன்னிகை அழுது கொண்டிருப்பதை சம்பந்தர் அறிந்தார். "சடையா யெனுமா" என்ற ஒரு பாடலைப்பாடி பகவானைத் துதித்தார். பகவான் அருளால் இறந்தவனும் பிழைத்து எழுந்து விட்டான். அவ்விடத்திலேயே அவர்கள் இருவருக்கும் கலியாணம் செய்வித்தார்.

பிறகு திருப்புகலூர் செல்ல அங்கே வந்த அப்பருடன் திருவாலூர், திருவம்பர், திருக்கடவூர் முதலிய ஸ்தலங்கள் சென்று பகவானைத் தரிசித்து மகிழ்ந்தார். அந்த நாளில் தேசத்தில் சமண மதத்தினர் அதிகமாயிருந்தனர். பாண்டியதேச அரசனும் சமணர் சொற்படி நடந்துவந்தான். ஆனால் அரசியும் மந்திரியும் சிவபக்தி யுள்ளவர்களாகவே இருந்தபடியால் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, சம்பந்தர் மதுரை வந்து ஒரு மடத்தில் தங்கினார். இதை யறிந்த சமணர்கள் அம்மடத்தில் தீ வைத்து சம்பந்தரைக் கொன்றுவிட முயன்றார்கள். ஆனால் பகவானருளினால் அத்தீயானது சம்பந்தரை யாதும் செய்யாமல் அவ்வூர் அரசனையே போய்ச்சுட ஆரம்பித்தது. வயிற்றில் தீயின் எறிச்சலைப் பொறுக்கமாட்டாமல் பாண்டியன் வருந்தினான். தங்களாலானவரையில் சமணர்கள் மருந்து கொடுத்தும் பாண்டியனது வியாதி நீங்கவில்லை. பிறகு அரசியும் மந்திரியும் சம்பந்தரை அரண்மனைக்கு அழைத்து வந்து அரசனுடைய பிணியை நீக்கும்படி

பிரார்த்தித்தார்கள். அவரும் அப்படியே செய்ய விரும்பி, பகவானைப்பாடி "மந்திரமாவது நீறு" எனத் துதித்து, விபூதி எடுத்துப் பாண்டியன் தேகம் முழுமையும் பூசினார். அரசன் வியாதி நீங்கி குணமடைந்தான். சம்பந்தரை நமஸ்கரித்து, பகவானாகிய சிவபிரானைத் துதித்தான்.

சமணர்கள் தங்கள் பெருமையும் கௌரவமும் குலைந்து போனது கண்டு வெட்கமடைந்து மதுரையை விட்டு ஓடிவிட்டனர். * சம்பந்தரது முயற்சியால் மதுரையில் மீண்டும் சைவ சமயம் செழித்தது. சம்பந்தர் இவ்விதமாக ஸ்தலயாத்திரை செய்து நல்லூர்ப் பெருமணத்திற்குச் சென்றார். அங்கே நம்பியாண்டாரது குமாரத்தியை வேத விதிப்படி சிறப்புடன் விவாகம் செய்துகொண்டார்.

பிறகு பகவானை வணங்கி வேண்ட, சம்பந்தரும் அவர் மனைவியும் கைலாஸத்தை அடைந்து சதாகாலமும் பகவானையே துதித்து மகிழ்ந்திருந்தனர்.

1. i. தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதி [சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந் தேத்தஅருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

---

* சமணர்கள் ஜெயினர்களா யிருக்கலாமென்று கருதப் படுகிறது. மதுரையிலிருந்து அநேக ஜெயினர்கள் மேற்கு ஜில்லாக்களுக்கு (முக்கியமாக தென் கன்னடத்திற்கு) குடியேறினதாகவும் தெரிகிறது.

ii. நீர்பரந்த நிமிர்புன்சடை மேலோர் நிலாவெண்மதி [சூடி
ஏர்பரந்தவினவெள்வளை சோரஎன் உள்ளம் கவர் கள்வ
ஊர்பரந்தஉல கின்முதலாகிய வோர் ஊரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

2. நன்றுடையானைத் தீயதுஇல்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென் உள்ளம் குளிரும்மே.

3. i. மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாய்உமைபங்கன் திருவாலவாயான்திருநீறே.

ii. முத்திதருவதுநீறு முனிவர் அணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர் புகழ்வதுநீறு
பத்தி தருவதுநீறு பரவஇனியதுநீறு
சித்தி தருவதுநீறு திருவாலவாயான் திருநீறே.

—தேவாரம்

## 7. திருமூலநாயனர்

திருக்கைலாஸத்திலே பகவானது பக்தர்களுள் ஒருவர் பூலோகத்தில் உள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்க விரும்பினர். அப்படியே பிரயாணம்செய்து திருவாடுதுறைக்கு வந்தார். அவ்வூரின் அருகே வனத்தில் ஆற்றோரமாய்ப் பசு மந்தைகள் கூட்டமாய் அழுது

கொண்டிருப்பதைக் கண்டார். அம்மந்தைகளை மேய்க்கும் இடையனுகிய மூலன் என்பவன் அன்று அவ்விடம் இறந்து கிடந்தான். பசுக்கள் அவனைச் சூழ்ந்து நின்று அழுதுகொண்டிருக்கக் கண்ட சிவயோகியார், பசுக்களின் துயரை நீக்க எண்ணம் கொண்டு தன் உயிரை மூலனுடைய தேகத்தில் பிரவேசிக்கச்செய்து எழுந்து நின்றார். பசுக்களெல்லாம் களிப்போடு நக்கி முகர்ந்து கனைத்து வாலெடுத்துத் துள்ளி தங்கள் மகிழ்ச்சியைக் காட்டி மேயச்சென்றன. திருமூலநாயனுர் அவைகளுக்கு வேண்டிய மேய்ச்சலும் நீரும் காட்டினர். மாலை வேளையில் அவைகள் வழக்கம்போல ஊரை நோக்கித் திரும்பிச்சென்றன.

இவ்வண்ணம் பசுக்களை ஊருக்குள் அனுப்பி விட்டு மூலனுர் வெளியே நின்றிருந்தார். மூலனுடைய மனைவி அதைக்கண்டு, வழக்கம்போல வீட்டினுள் நுழையாமல் வெளியே நிற்கும் காரணம் அறியாது, வெளியே வந்து அவரைப்பணிந்து அழைத்தாள். திருமூலரோ அவள் அழைப்புக்கு மறுத்து, "நான் இனி வீட்டினுள் வரமுடியாது, உன்னோடு எனக்கு எவ்வித உறவும் கிடையாது" என்று சொன்னுர். பிறகு அந்த ஊரில் ஒரு பொதுமடத்துக்குச்சென்று அங்கு பகவானைத் தியானித்து ஆனந்தத்தில் அமிழ்ந்திருந்தார்.

மூலனுடைய மனைவி சொன்ன இந்தச்செய்தியைக் கேட்ட அவ்வூரார் திருமூலநாயனுரை மடத்தில் வந்து கண்டு, அவர் யோகத்தில் இருப்பதை உணர்ந்து, அவளைச் சமாதானம் செய்தார்கள். சிவயோகத்தில் மூலன் மனம் சென்றுவிட்டபடியால், இனி அவன்

குடும்பத்தில் இருக்கமாட்டான் என்று சொல்லிக் கொண்டு திரும்பிவிட்டார்கள்.

சைவாகமங்களில் பேசப்பட்ட மெய்ப்பொருளை தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்குத் தெளிவாக அறிவிக்கும் பொருட்டு திருமூலர் பாடல்கள் பாட எண்ணினார். திருவாடுதுறையில் கோவிலுக்கு மேற்கில் உள்ள ஒரு அரசமரத்தடியில் உட்கார்ந்து சிவயோகத்தில் இருந்தார். பல வருஷங்கள் அவர் அங்ஙனம் இருந்தார். பிறகு மூவாயிரம் பாடல்களைப் பாடி முடித்துக் கைலாஸத்தைத் திரும்பவும் அடைந்து பகவானைப் பூஜித்துக்கொண்டு சுகமாயிருந்தார். திருமந்திரம் என்ற இந்த நூலிலே ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் நான்கு விஷயங்களும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

1\. i. ஊரெலாங்கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப்பிண மென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே.

ii. காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன்புறப்பட்டுப் போன இக்கூட்டையே.

2\. சத்திய மின்றித் தனி ஞானந்தானின்றி
யொத்தவிடயம் விட்டோரு முணர்வின்றிப்
பத்தியுமின்றிப் பரனுண்மையின்றி ஊண்
பித்தேறுமூடர் பிராமணர் தாம் அன்றே.

3. அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்;
அன்புஞ் சிவமாவது யாரும்அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும்அறிந்தபின்
அன்பேசிவமாய் அமர்ந்திருப்பாரே.

4. ஆன்கன்று தேடியழைக்குமதுபோல்
நான்கன்றாய் நாடி அழைத்தேன் என்னுதனை
வான்கன்றுக்கு அப்பாலாய் நின்றமறைபொருள்
ஊன் கன்றான் ஆடிவந்து உள்புகுந்தானே.

5. புகுந்துநின்றான் எங்கள் புண்ணியமூர்த்தி
புகுந்துநின்றான் எங்கள் போதறிவாளன்
புகுந்துநின்றான் அடியார் தங்கள் நெஞ்சம்
புகுந்துநின்றானையே போற்றுகின்றேனே.

—திருமந்திரம்.

## 8. குலோத்துங்க பாண்டியன் கதை

முன்னொரு காலத்தில் மதுரை நகரில் குலோத்துங்க பாண்டியன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் மநுநீதி தவராமல் குடிகளைப் பரிபாலனம் செய்து வந்தான். பகவானாகிய சோமசுந்தரமூர்த்தியை உண்மை அன்போடு பூஜித்துவந்தான்.

இவ்விதமாயிருக்க ஒரு நாள் திருப்பத்தூரினின்றும் ஒரு பிராமணன் தன் மனைவி குழந்தையுடன் மதுரைக்கு வந்தான். வரும் வழியில் ஒரு பெரிய ஆலமரத்தடியில் மனைவியையும் குழந்தையையும் நிழலில் நிற்கவைத்து, தாகத்திற்கு நீர் கொண்டுவரப்

போனான். அதேமரத்தடியில் மற்றொரு புறம் கையில் வில்லும் அம்பும் உள்ள ஒரு வேடனும் நிழலுக்கு வந்து தங்கினான். அச்சமயம் பலமாகக் காற்றடிக்கவே, மரத்தில் எக்காலத்திலோ மாட்டித்தங்கியிருந்த ஒரு அம்பு காற்றால் தள்ளப்பட்டு பிராமணஸ்திரீயின் மீது விழுந்தது. அம்பு நன்றாய்ப் பாய்ந்துவிடவே அவளும் கதறி விழுந்து இறந்துபோனாள். அக்குழந்தை மட்டும் பிணமாய்விட்ட தன் தாயார் மீது உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது. தண்ணீருடன் வந்த பிராமணன் அதைப்பார்த்து மிகவருந்தி அழுதான். பிறகு அங்குமிங்கும் சுற்றிப் பார்க்க, மரத்தின் இன்னொரு புறத்தில், கையில் வில்லுடன் நிற்கும் வேடனைக் கண்டு அவனைப்பிடித்துக்கொண்டு "ஏன் இவளைக் கொன்றாய்?" என்று வினவினான். உடனே அரசனிடம் அவனை இழுத்து வந்தான்.

அரசனும் வேடனைப் பல முறையும் பல விதமாய் விசாரித்தும், அவன் தனக்கு ஒன்றும் தெரியாதென்று ஒரே விதமாய்ச் சொல்லவே, அரசனும் யாதும் விளங்காமல் தியங்கினான். பிறகு தான் அன்புடன் வணங்கி வரும் பகவானது ஆலயம் சென்று "இந்தச்சங்கடத்திற்கு என் செய்வேன்! ஐயனே! அருள்புரிவாய். வேடன் முகத்தைப் பார்த்தாலோ நிரபராதியாகத் தோன்றுகின்றது. ஆனால் அவனருகிலிருந்த பிராமணன் மனைவி அம்பு தைத்து இறக்கக்காரணம் தெரியவில்லை. நீயேசொல்," என வேண்டிக்கொண்டான். தன் அன்புள்ள பக்தனை அரசனுக்குண்டான துன்பத்தை நீக்க பகவான் "செட்டித்தெருவிலே இன்றிரவு ஒரு வீட்டில்

கலியாணம் நடக்கும். அங்கே நீ பிராமணனுடன் போனால் உண்மை அறிவிப்போம்" என்று அரசனுக்கும் பிராமணனுக்கும் காதில் விழும்படி சொன்னார்.

அன்றிரவு அவ்விருவரும் செட்டித் தெரு சென்று கலியாண வீட்டிற்கு எதிர்வீட்டில் உட்கார்ந்து இருந்தார்கள். சமீபத்தில் இருவர் பேசும் குரல் கேட்டது. "அடே காலா! இன்னும் பத்து நிமஷத்திற்குள் கலியாணப் பிள்ளையுடைய சீவனைக்கொண்டுபோக வேணுமே.! யமனார் உத்தரவாச்சே! எவ்விதம் அவனுக்குப் பிராணன்போகும்படி செய்வது?" என ஒரு குரல் கேட்டது. மற்றொருகுரல்: "ஏண்டா! இது ஒரு பிரமாதமா? இன்றுபகல் பிராமணத்தியின்மேல் பல நாளைக்கு முன் மரத்தில் மாட்டிக் கிடந்த ஒரு அம்பைக் காற்றினால் விழச்செய்து அவளைக் கொல்ல வில்லையா! இப்பவும் மேளம் அடிக்கும் சமயம் இதோ நிற்கும் காளைமாட்டை வெறி கொள்ளும்படி செய்து கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடி மாப்பிள்ளையை முட்டும்படி செய்து அவனைக் கொல்வோம்!" என்று பதில் வந்தது. இவ்வார்த்தைகளை அரசனும் பிராமணனும் கேட்டு அரசன் பிராமணனைப்பார்க்க, பிராமணன் "சரி! இந்தக் கலியாணப்பிள்ளை இவர்கள் சொல்லிய விதமாகவே இறந்தால் என் மனைவி இறந்தவிதமும் நிச்சயம் என ஒப்புக்கொள்ளுகிறேன்" என்றான். சற்று நேரம் சென்ற பிறகு மங்களவாத்தியம் முழங்கியிருந்த கலியாண வீட்டில் அழுகுரல் உண்டாகியது. உடனே அரசனும் பிராமணனும் எழுந்து விசாரிக்கையில் வெறி கொண்டு ஓடிவந்த மாடு மாப்பிள்ளையை முட்டி

யதால் அவன் இறந்தான் எனத் தெரிந்து கொண்டார்கள். அரசனும் திரும்பிவந்து காவலில் வைத்திருந்த வேடனை விடுவித்து அவனுக்கு நல்லவார்த்தைகள் சொல்லிப் பரிசளித்து அனுப்பினன்.

தெய்வபக்தி மிகவும் உள்ள பாண்டிய மகாராஜனும் அன்று தன் நீதிமுறைமைக்குப் பழிச் சொல் ஏற்படாமல் காத்தருளிய பகவானை நாள்தோறும் பூஜித்து, நெடுங்காலம் பாண்டிய நாட்டை அரசாட்சி செய்திருந்தார்.

## 9. மாணிக்க வாசகர்

பாண்டிய நாட்டில் அமாத்தியரென்ற அந்தணர் வகுப்பில் வாதவூரார் என்று ஒருவர் இருந்தார். அவர் சகலகலைகளில் வல்லவராய் இருப்பதைப் பாண்டியராஜன் அறிந்து தனக்கு அவரை மந்திரியாக நியமித்துக்கொண்டார். பிரமராயனென்னும் பேரும் பெற்று அவர் பிரதம மந்திரியா யிருந்துவரும் நாளில் தனக்கு பக்தியையும் ஞானத்தையும் போதிக்கும்படியான ஒரு ஆசிரியரைத் தேடியிருந்தார். அந்த சமயம் அரசன் கீழ் கடற்றுறைக்குப்போய் குதிரைகள் வாங்கிவரும்படி ஏராளமான பணத்தைக் கொடுத்து அனுப்ப, அவரும் பணத்துடன் புறப்பட்டு அதிராம்பட்டணத்தை நோக்கிச் சென்றார்.

இவரது மனோநிலைமையை அறிந்த பகவான் அங்கு ஒரு குருந்தமரத்தடியில் ஒரு ஞான ஆசிரியராக

வேடம்பூண்டு சிவகணங்கள் மாணாக்கர்களாகப் பாடங் கேட்டிருக்க வீற்றிருந்தார். அக்காட்சியைக் கண்ட வாதவூரடிகள் மனங்களித்து ஆனந்த மேலிட்டு குருமூர்த்தியின் திருவடியில் வந்துபணிந்து அடியேனுக்கு உபதேசம் செய்தருள வேண்டுமென வேண்டினார். பகவானும் கருணையுடன் அவருக்கு உபதேசஞ் செய்தார். அவ்வுபதேசத்தைப் பெற்ற வாதவூரார் அன்பு ஒழுக அற்புத பாடல்களைப் பாடத்தொடங்கினார்.

அப்பாடல்கள் மாணிக்கங்கள்போல விலையேறப் பெற்றவையாய் இருந்தமையால் பகவானாகிய குருபிரான் அவருக்கு மாணிக்க வாசகர் என்ற பெயரைக் கொடுத்து அவரை அங்கேயே இருக்கும்படி சொல்லி மறைந்து விட்டார். அவர் மறையவே மாணிக்க வாசகர் பகவானது லீலையைக் கண்ணாரக்கண்ட பாக்யமடைந்தவராய், கையில் உள்ள பணத்தை எல்லாம் தினந்தோறும் தர்ம காரியமாகச் செலவிட்டு, சிவாலயத் திருப்பணி முதலியன செய்து கொண்டு இருந்தார். அக்காலத்தில் அவரால் கட்டப்பட்ட கோவில்தான் ஆவுடையார் கோவில் என்பது. இக்கோவில் பட்டுக் கோட்டைக்குச் சில மைல்களுக்குத் தெற்கேயுள்ளது.

இப்படிப் பணத்தை வாரிச் செலவிடுவதைக் கேள்வியுற்ற பாண்டிய மகாராஜா அவரை உடனே திரும்பி வரும்படி உத்தரவிட்டார். பணமெல்லாம் செலவாய் விட்டமையால் கோவிலில்சென்று பகவானைப் பணிந்து "என் அப்பனே! குதிரை வாங்க வந்த நான் உமது திருப்பணியில் செல்வத்தைச் செலவழித்துவிட்டேனே, இனிப் பாண்டியனிடம் குதிரை கொண்டு போகாமல்

எப்படிப் போவேன்?" எனக்கதறி யழுதார். பகவானும் அசரீரி வாக்காக "குழந்தாய் மாணிக்க வாசகா! எழுந்திரு. பாண்டியனிடம் செல். குதிரை பின்னால் வருவதாகச்சொல், நாம் பார்த்துக்கொள்கிறோம்" என்று சொன்னதைக்கேட்டு, தைரியமாய்ப் புறப்பட்டார். அரசனிடம் வந்து குதிரைகள் வந்து கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டு பகவானையே தியானம் செய்திருந்தார். ஒருவாரத்துக்கு மேலாகியும் குதிரை வாராமல் போகவே, பாண்டியன் கோபங்கொண்டு அவரைப்பிடித்துச் சிறையில் இட உத்தரவுசெய்தான். அவ்வாறே சேவகர்கள் அவரைச் சிறையில் அடைத்து பெருங்கற்களை முதுகில் கட்டியும், கிட்டி கட்டியும், அண்ணாந்தாளிட்டும், கால்களுக்கு விலங்கிட்டும், பல விதமாக வருத்தி, இருண்ட அறையில் அன்றிரவு முடிய அடைத்துவைத்தார்கள். பகவானையே சதா தியானம் செய்துகொண்டு துன்பங்களைப் பொருத்திருந்தார்.

தன் பக்தன் துயரை நீக்க பகவான் எண்ணங்கொண்டார். உடனே காட்டில் இருந்து பல நரிகளை எல்லாம் பரி(குதிரை)களாக மாற்றி, தன்.சிவகணங்களை எல்லாம் சேவகர்களாக்கி, தானும் தலைவனாகி, வேதமாகிய குதிரையில் ஏறிவந்து அரசனிடம் குதிரைகளின் அழகையும் ஓட்டத்தையும் காண்பித்தார். தன்குதிரை ஒன்று தவிர மற்றவைகளை அரசனிடம் ஒப்புவித்தார். அரசனும் மகிழ்ந்து பல பரிசுகள் அளித்தான். அரசன் அளித்த கோடி வஸ்திரத்தைத் தலையில் சுற்றிக் கொண்டு பகவான் தனதாட்களுடன் திரும்பிப்போய்

விட்டார். சிறைச்சாலையிலிருக்கும் மாணிக்கவாசகரை வெளியில் வரவழைத்து அரசன் உபசரித்தான். அன்று ராத்திரி லாயத்தில் விடப்பட்ட புதிய குதிரைகள் நரிகளாக மாறிப்போய் பழைய குதிரைகளையும் கடித்துவிட்டு ஊளையிட்டு ஓட ஆரம்பித்தன.

நரிகள் ஊளையிடுவதைக் கண்ட அரசன் விஷயம் அறிந்துகொண்டு வாதவூரடிகளைப் பிடித்து மறுபடியும் சிறைச்சாலையில் அடைத்துத் தண்டித்தான். அதைகண்ட பகவான் மதுரையில் வைகையாற்றில் வெள்ளம் பிரவாகமாக வரும்படி செய்தார். ஆற்றுவெள்ளம் கரைபுரண்டு ஊரெல்லாம் ஓடிவரவே, அரசன் ஆக்கினையால் ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு ஆள் வீதமாக அநேகர் சேர்ந்து உடைப்பு அடைக்க பிரயாசப்பட்டனர். பிட்டு விற்கும் ஒரு கிழவி தன் வீட்டிலிருந்து அனுப்ப ஆள் இல்லாமையினால் வருந்தி இருந்தாள். பகவான் தானே கூலியாள் வேஷம் பூண்டு, அவளிடம் பிட்டைக்கூலியாகப்பெற்று, வேலைசெய்வதற்கு வந்தார். ஆனால் பிட்டு தின்றுக்கொண்டும், வெற்றிலை மென்றுகொண்டும், வேலையைச்செய்யாமல் அழும்புசெய்திருக்க, அணையைப் பார்வையிடவந்த அரசன் பிட்டுவாணிச்சியின் பாகம் அடைபடாமலிருக்கக் கண்டு, கோபமாய்த்திரும்பி அந்த ஆளை சாதாரணகூலியாளாகக் கருதி பகவானைத் தன்கையிலுள்ள தங்கப் பிரம்பால் ஓரடி அடித்தான். அந்த அடியோ உலகத்திலுள்ள சகல ஜீவர்கள் பேரிலும் விழுந்தது. பாண்டியன் முதுகிலும் விழுந்தது. பகவானும் ஒரு தட்டு மண்ணைக்கொட்டி "அணையை இதோ

அடைத்தேன்" எனச்சொல்லி மறைந்தார். பாண்டியனும் பகவானது திருவிளையாடல் என அறிந்து, கோவிலுக்குச்சென்று அவரை வணங்கித் துதித்தான். பகவத்பக்தனை சிறையிலிருந்து விடுவிக்கும்படி பகவான் உத்தரவிட்டார். கோவிலில் சோமசுந்தரமூர்த்தியினுடைய தலையில் தான் குதிரைத்தலைவனுக்குக் கொடுத்த கோடி வஸ்திரத்தைக் கண்டான். பாண்டியன் உடனே மாணிக்கவாசகரை விடுவித்துத் தன்னை மன்னிக்கும்படி பிரார்த்தித்தான்.

பிறகு மாணிக்கவாசகர் சிவக்ஷேத்திரங்களுக்குச் சென்றார். சிதம்பரம் சென்று ஸ்வாமியைத் தரிசித்து ஆனந்தம் அடைந்து பலபாடல்கள் பாடினார். சோழ நாட்டிற்குச்சென்று அவ்வரசனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, அவனது ஊமைப்பெண்ணைப் பேச வைத்தார். அரசனுக்கும் சிவபக்தியை உபதேசித்து சில நாள் அங்கிருந்தார். மாணிக்கவாசகர் பாடிய பாடல்களை எல்லாம் பகவானே ஒருநாள் ஒரு சிஷ்யனாகவந்து அவரிடம் சொல்லக்கேட்டு, எல்லாப்பாடல்களையும் எழுதி முடித்து கடைசியில் திருச்சிற்றம்பலம் எனக் கையொப்பம் வைத்து மறைந்துபோய்விட்டார். எழுதிய பாடல் புத்தகம் கோவிலில் ஸ்வாமி சந்நிதியில் இருக்கக்கண்டு யாவரும் வியந்து, இதன் பொருள் என்ன என மாணிக்கவாசகரைக் கேட்டார்கள். அவரும் பாட்டுக்களுக்கு எல்லாம் மூலம் இந்த நடராஜப்பெருமானே எனச்சொல்லி பகவானைத்துதிக்க, அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மோக்ஷத்தை யடைந்தார்.

மாணிக்கவாசகர் பாடல்களுக்கு "திருவாசகம்" எனப்பெயர்.

1. பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

2. முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்து சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவார் யார்பெறுவார் அச்சோவே.

3. ஈசனே யென்னெம்மானே யெந்தைபெருமானென் [பிறவி
நாசனே நான்யாது மொன்றல்லாப் பொல்லாநாயா
நீசனேனை யாண்டாய்க்கு நினைக்கமாட்டேன் கண்டாயே
தேசனே யம்பலவனே செய்வதொன்று மறியேனே.

—திருவாசகம்.

# வைஷ்ணவ ஆழ்வார்கள்.

## முகவுரை

பூலோகவாசிகள் பக்திமார்க்கத்தை யறிந்து பகவானை ஆச்ரயித்து அனந்த நிலையையடையுமாறு பகவானது அருளால் பதினொரு ஆழ்வார்களும் ஆண்டாள் ஒருவருமாக இப்பூவுலகில் அவதரித்தார்கள். அவர்கள் பகவானை மனதார சதாகாலமும் பஜித்து அந்த ஆனந்த அனுபவம் உள்ளடங்காமல் பொங்க பாடல்களாகப் பாடியருளினார்கள். அப்பாடல்கள் சுமார் 4000 ஆகும். அவைகளுக்கு நாலாயிரப் பிரபந்தம் என்றுபெயர். அப்பாடல்களில் மனிதர்களாகிய நாம் அறிய வேண்டிய பரமார்த்த ஸ்வரூபத்தைப்பற்றியும், அப்படி அறிந்து கொள்வதற்கு வேண்டிய சாதனத்தைப்பற்றியும் சொல்லப் பட்டிருக்கிறது. அவைகளில் ஸ்ரீ நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி மாத்திரம் சுமார் 1000 பாடல்கள் ஆகும்.

அநேகமாய் எல்லாவைஷ்ணவர்களும் கோவிலில் பகவானை சேவித்து பஜிக்கும்போது நாலாயிரப் பிரபந்தம் பாராயணம் செய்வதற்கு நாலாயிரப் பிரபந்தத்திலிருந்து சில பாசுரங்களை மாத்திரம் முக்யமாகப் பொறுக்கியெடுத்து, அவைகளைப் பாடுவது அவசியம் என்று ஸ்ரீமந்நாதமுனிகள் ஏற்படுத்தினர். பெரியாழ்வார் இயற்றிய திருப்பல்லாண்டு பெருமாள் கோவில்களில் எல்லா சந்நிதிகளிலும் ஓதுவது வழக்கம். மேலும் ஆயிரம் பாடல்களாகிய திருவாய் மொழியிலே சுமார் நூறு பாடல்களை மாத்திரம் 'கோயில் திருவாய் மொழி' யெனப் பொறுக்கிவைத்து அவைகளை மாத்திரம் பாராயணம் செய்வது வழக்கம். வைஷ்ணவ ஆலயங்களில் பகற்பத்து இராப்பத்து உத்சவகாலங்களில் நாலாயிரப் பிரபந்தம் முழுவதும் பாராயணம் செய்யப்படும்.

இப்புத்தகத்தில் ஆங்காங்கு சிலபாடல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் கோயில்திருவாய் மொழி, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி, பெரிய திருமொழி முதலிய பிரபந்தங்களிலிருந்து சில பாடல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடல்கள்தாம் சிறந்தவை என எண்ணுதல் தவறு. ஏனெனில் இனிப்பான சர்க்கரைப்பொம்மையில் இந்தபாகம் தான் இனிப்பாயிருக்கும் எனச் சொல்லுதல் இயலாது. அதில் கொடுக்கப்பட்டிருக்கும் பாசுரங்களை வாசித்து, மனப்பாடம் பண்ணி, ராகத்துடன் பாடுவதனலேற்படும் மனஉத்சாகமும் சந்தோஷமும் இன்னும் மற்றபாடல்களைப் படித்து ஆனந்திக்கும்படி தூண்டும் என்பது நிச்சயம்.

V. N.

# 10. பெரியாழ்வார்

ஸ்ரீவில்லிபுத்தூரில் வேயர் குலத்தில் முகுந்தாசாரியார் என்பவருக்கு ஒரு புத்திரர் பிறந்தார். குழந்தைக்கு விஷ்ணு சித்தர் எனப் பெயரிட்டார்கள். அப்பிள்ளைக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் பக்தி மேலிட்டு அவர் கைங்கர்யத்தில் மிகவும் ஈடுபட்டு வடபெருங்கோயிலுடையானைத் தினமும் வணங்கியிருந்தார். பிறகு தகுந்த வயது வந்தவுடன் ஒரு நந்தவனம் உண்டாக்கி அதில் புஷ்பச் செடிகள் பயிராக்கி, மாலைகள் கட்டி தினமும் பகவானுக்குச் சாற்றி மகிழ்ந்து இருந்தார். அவர் பூமாலைகளை ஏற்று மகிழ்ந்த நம்பெருமாள் அவரைக்கொண்டு பாடல்கள் பாடச்செய்யவேண்டுமென்று எண்ணியிருந்தார்.

இப்படியிருக்க, பாண்டிய குலத்துதித்த வல்லபதேவன் என்ற ஒரு அரசன் ஒரு நாள் இரவில் நகர சோதனைக்குச் சுற்றிவர, ஒரு தெருத் திண்ணைமேல் ஒரு வேதியனைக் கண்டு, நீ யார்? எனக் கேட்டான். அவன் "நான் பிராமணன். கங்காஸ்நானம் பண்ணி வருகிறேன்" என விடைகூற, அரசனும் "உமக்கு ஏதேனும் நீதிதெரியுமோ?" எனக்கேட்டனன். அதற்கு வேதியனும் "மழை காலத்தில் வேண்டிய உணவுகளைக் கோடை காலத்திலும், இராத்திரி வேண்டியவைகளைப் பகலிலும், முதுமையில் வேண்டியவைகளை யௌவனத்திலும், மறுமைக்கு வேண்டியவைகளை இம்மையிலும் முன் யோசனையாகத் தேடிக்கொள்வது அவசியம்" என்ற கருத்துள்ள ஒரு சுலோகம் சொன்னான்.

அரசனும் அதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டே அரண்மனைக்குத் திரும்பிவந்து படுத்துக் கொண்டான். "எனக்கு எல்லா சுகங்களும் இம்மையில் இருக்கின் றன; ஆனால் மறுமைக்கு வேண்டியது என்னவென்று தெரியவில்லையே. இதை அறிய யார் எனக்கு உதவி செய்வார்? மந்திரியிடம் இதைப்பற்றி விசாரிப்போம்" என எண்ணி இருந்தான். மறுநாள் காலையில் மந்திரியை அழைத்து, "மந்திரீ, வித்வான்களையெல்லாம் வரவழை. மனிதனாகப் பிறந்தவன் அடைய வேண்டிய பலன் என்னவென்பதைச் சொல்பவருக்கு இனாமாக ஒரு பொன் முடிப்பைச் சபை மத்தியில் தூக்கிக் கட்டி விடு" என உத்தரவிட்டான்.

மந்திரியும் அவ்வாறே ஏற்பாடு செய்ய, அநேக வித்வான்களும் விடை சொல்லி அப்பரிசுபெற வந்து கூடினார்கள். விஷ்ணுசித்தன் மூலமாக வேதாந்தத் திற்கு மூலப்பொருளை உலகத்தோருக்கு பகிரங்கப் படுத்த விரும்பி பகவான் அவருடைய ஸ்வப்பனத்தில் தோன்றி "ராஜ சபை சென்று பரிசு பெற்றுவா" எனக் கட்டளையிட்டருளினார். விஷ்ணுசித்தர் மெய் சிலிர்க்க, "என் அப்பனே! யான் சென்று அவ்விடம் உள்ள வித்வான்களை வென்று அல்லவா பரிசு பெற வேண்டும்? எனக்கு எதுவும் தெரியாதே" என்று தயங்கி இருக்க, பகவான் நகைத்து "நாம் இருக்கிறோம் நீ போய் வா" எனப் பணித்தார்.

கடவுளிட்ட கட்டளையைச் சிரமேற்றாங்கி விஷ்ணு சித்தர் ராஜ சபைக்கு வந்தார். அவர் வருகையைக் கண்ட அரசனும் எழுந்து மரியாதை செய்து அவரை

ஆசனத்திலிருத்தி வணங்கி உபசரித்தான். ஒன்றுமே தெரியாதவருக்கு இவ்வளவு மரியாதை தருமோ என மற்ற வித்துவான்களும் பொருமையுடன் பார்த்திருந் தனர்.

மந்திரியும் விஷ்ணு சித்தரை வணங்கி "வேதாந்த அர்த்தமான ரஹஸ்யத்தை அருளிச்செய்ய வேண்டும்" எனப் பிரார்த்தித்துக் கேட்க, பகவான் அருளால் அவரும் உடனே "மகாவிஷ்ணுவே சகல வேதத்திற் கும் ஆதிமூலகாரணர்" என்று ஸ்லோகங்கள் சொல்லி யருளினுர். பந்தயமாகக் கட்டி வைத்த பொன் மூட் டையும் ஆழ்வார் சமீபமாகத் தானே சாய்ந்து விழுந் தது. சபையில் உள்ளோர் எல்லோரும் அதிசயித்து, ஆழ்வாரை வணங்கினுர்கள். அவரைப் பட்டத்து யானைமேல் ஏற்றி அரசன் உள்பட வித்வ கோடிகள் யாவரும் வெண்சாமரம் வீச, வீரவசனம் கூறி முன்னே சிலரும் பின்னே சிலருமாகச் செல்ல, ஊரைச் சுற்றி ஊர்வலம் செய்வித்தனர்.

குழந்தையின் ஊர்வலங்கண்டு பெற்ருேர் மகிழ்வது போல, பகவான் ஆகாயத்தில் பிராட்டியாருடன் ப்ர ஸன்னராயினர். யானைமேல் ஏறிவரும் ஆழ்வார், பக வானைக் கண்டு, பக்திமேலிட்டு "திருப்பல்லாண்டு" பாடியருளினுர்.

வைஷ்ணவ ஆழ்வார்களில் முதன்மையானவர் பற்றி விஷ்ணு சித்தருக்குப் பெரியாழ்வார் என்று பெயர். பட்டர் பிரான் என்றும் அவருக்குப் பெயர் உண்டு.

அரசனிடம் விடைபெற்று ஆழ்வார் வில்லிபுத் தூர் திரும்பி வந்து தன் மூட்டையைப் பெருமாள்

சந்நதியில் வைத்துவிட்டு, பழையபடி பூக்கொய்து திருமாலை கட்டி பெருமானுக்குச் சாற்றி மகிழ்ந்திருந் தார். பகவானுடைய கிருஷ்ணாவதாரத்தின் மஹிமை யில் மிகவும் ஈடு பட்டவராய் அந்தக் கிருஷ்ணாவதார மஹிமையை வர்ணித்து பல பாடல்கள் பாடி ஆநந்தித் தார். அப்பாடல்கள் எல்லாம் ஒன்று சேர்த்து பெரி யாழ்வார் திருமொழி எனப்படும். அவைகள் சுமார் ஐந்நூறு பாடல்கள் ஆகும்.

பெரியாழ்வார் பாடிய "திருப்பல்லாண்டு" பாட் டுக்களை, எக்காலமாயினும் பெருமாள் கோவிலில் சேவிக் கும்போதெல்லாம் பாடி ஆநந்திப்பது வைஷ்ணவர்கள் வழக்கம்.

## திருப்பல்லாண்டு

1. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.

2. அடியோமோடும் நின்னோடும்
பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில்
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவலத்துறையும்
சுடர் ஆழியும் பல்லாண்டு
படைபோர்புக்கு முழங்கும்
அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.

3. என்னாளெம்பெருமான் உன்தனக்கடியோ
மென் றெழுத்துப்பட்ட

அந்நாளே அடியோங்களடிக்குடில்
வீடுபெற் றுய்ந்தது காண்
செந்நாள் தோற்றித் திருமதுரையுட்
சிலைகுனித்து ஐந்தலைய
பைந்நாகத் தலைப்பாய்ந்தவனே
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே.

4. பல்லாண்டென்று பவித்திரனைப்
பரமேட்டியைச் சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர்
விட்டுச் சித்தன் விரும்பிய சொல்
நல்லாண்டென்று நவின்றுரைப்பார்
நமோநாராயணாய வென்று
பல்லாண்டும் பரமாத்மானைச் சூழ்ந்திருந்
தேத்துவர் பல்லாண்டே.

## பெரியாழ்வார் திருமொழி 5-ம் பத்து 4-ந் திருமொழி

1 சென்னியோங்கு தண்திருவேங்கட முடையாய்! உலகு
தன்னைவாழ நின்றநம்பீ! தாமோதரா! சதிரா!
என்னையும் என்னுடைமையும் உன்சக்கரப் பொறியொ
[ற்றிக்கொண்டு
நின்னருளே புரிந்திருந்தேன் இனியென்
[திருக்குறிப்பே.

2. பனிக்கடலிற் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து என்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ
தனிக்கடலே! தனிச்சுடரே! தனியுலகே! என்றென்று
உனக்கிடமாயிருக்க என்னையுனக் குரித்தாக்கினையே.

# 10. ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீவில்லிபுத்தூரில் வசித்திருந்த பெரியாழ்வார் ஒரு சமயம் நந்தவனத்தைக் கொத்தித்திருத்திக் கொண்டிருக்கையில், அந்நிலத்தில் ஒரு பெட்டியில் அழகான ஒரு பெண்குழந்தை இருக்கக்கண்டு ஆநந்தித்து, அக்குழந்தையை எடுத்து வளர்த்துவந்தார். உலகத்தில் வசிக்கும் மானிடருக்கு பக்தி மார்க்கத்தைப் போதித்து, அவர்களுக்கு மோக்ஷ சாதனத்தை யருளும் பொருட்டு லக்ஷ்மி பிராட்டியே இவ்வாறு திரு அவதாரங்கொண்டாள்.

சீதாதேவியைக் கண்டு மகிழ்ந்து பெண்ணாக எடுத்து வளர்த்துவந்த ஜனக மகாராஜாவைப்போல, பெரியாழ்வாரும் பெண்மணியை மகா அன்புடன் போற்றி வெகுவாய்ச்சீராட்டி, ஆண்டாள் எனத் திருநாமமிட்டு மக்களில்லாக்குறையை மறந்து ஆனந்தமாயிருந்தார்.

ஸ்ரீ ஆண்டாள் சிறுபிராயமுதல் பகவானையே சிந்தித்துப்போற்றி மகிழ்வாள். பெரியாழ்வாரும் அவளுக்குக் கல்வி கற்பித்து பரம ஞானத்தைப் போதித்தார். அவர் நந்தவனவேலை செய்யும்பொழுதும், மலர் கொய்து மாலை தொடுக்கும்பொழுதும், அவள் உதவியாயிருப்பாள். தன் மனதிலே பகவானையே விவாஹம் செய்துகொள்ளவேண்டும் என விரதம் பூண்டிருந்தாள். வெகு அழகாய் பூமாலை தொடுத்து வைத்துவிட்டு ஒரு சமயம் ஆழ்வார் வெளியே போயிருந்தார். அங்கு வந்த ஆண்டாளுக்கு அந்த மாலையின் அழகைக்கண்ட

வுடன், தான் பகவானுடைய திவ்ய அழகிற்குத் தகுதியாய் இருப்போமா என்ற ஒரு எண்ணம் தோன்றியது. உடனே ஆபரணங்களும் பட்டாடைகளும் அணிந்து அலங்கரித்துக்கொண்டு, பகவானுக்கு வைத்திருந்த பூமாலையை எடுத்துத் தன்கழுத்தில் போட்டுக்கொண்டு தான் பகவான் பக்கத்தில் நிற்பதாக மனதால் பாவித்து, கண்ணாடி யெதிரில் சென்று தன் வடிவைப் பார்த்து மகிழ்ந்து மனம்பூரித்து, தன் மணவாளன் பகவானே என நிச்சயித்து ஆநந்தித்தாள்.

பிறகு புஷ்பமாலையை நலுங்காதபடி கூடையில் வைத்துவிட்டாள். சாயந்திரம் ஆழ்வார் வழக்கப்படி கோவிலில் பெருமாளுக்குக் கொண்டுபோய் புஷ்பமாலை சாத்தினார். ஆண்டாளும்சென்று பெருமாளைக் கண்டு மகிழ்ந்தாள்.

இந்த விதமாகவே, தினமும் புஷ்பமாலைகளைத் தன் உடம்பில் சாத்திக்கொண்டு பார்த்துப் பிறகு பெருமாளுக்கு ஆண்டாள் அனுப்பிவர, பெருமாள் அந்த மாலைகளை அதிமகிழ்ச்சியுடன்ஏற்றுக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் புஷ்பமாலையைச் சூட்டிக்கொண்டு கண்ணாடி எதிரில் நின்று ஆண்டாள் பார்த்துக்கொண்டு நிற்கும் சமயம், பெரியாழ்வார் கண்டு அவளைப்பெரிதும் கோபித்து "பகவானுக்குச் சாத்தும்படி இருந்த புஷ்பத்தை நீ சூட்டிக்கொண்டது மிகவும் அபசாரம்; இனி அப்படி ஆசைகொள்ளாதே" என்று சொன்னார். அன்று பெருமாளுக்குப் புஷ்பம் சாத்துவதற்கில்லாமையால் ஆழ்வார் மனம் வருந்தி நித்திரைசெய்ய, பகவானும் அவர் கனவில் தோன்றி "கோதை சூட்டிப்

பார்த்தனுப்பிய புஷ்பமே என்மனதிற்கு மிகவும் உகந்தவை" எனச்சொல்லி மறைந்தனர். உடனே விழித்தெழுந்த பெரியாழ்வார், கோதையைப் பிராட்டியாகிய மகாலக்ஷ்மியின் அவதாரம் என அறிந்து ஆநந்தித்தார். சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற பெயர் ஆண்டாளுக்கு உண்டாயிற்று.

நாச்சியாரும் பகவானையே தன் கணவனாக மதித்து அவர் சந்நதியில் பல பாடல்கள் பாடி மகிழ்ந்திருந்தார். இப்படி நாட்கள்கழிய ஆண்டாளுக்கு விவாஹ வயது வந்தது. தந்தையாரும் பெண்ணை நோக்கி "உன் பிரிய மணாளன் யார்?" என்றுகேட்டார். நாச்சியாரும் ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளுக்கே தான் மாலை சூட்டப் போவதாய்ச் செப்பினாள். ஆழ்வாரும் இது எவ்வாறு நடைபெறும் என ஏங்கியிருக்க, அன்றிரவு ஸ்வப்பனத்தில் பகவான் ப்ரஸன்னராகி, "உனது மகளை எமது கோயிலில் கொண்டு வந்து கொடு; நாம் ஏற்றுக் கொள்வோம்," எனச் சொல்லி மறைந்தார். ஆழ்வாரும் எழுந்து ஆநந்தமடைந்தார். மேலும், ஸ்ரீரங்கம் கோவில் அர்ச்சகர் முதலிய பரிஜனங்களுக்கும் ஸ்வப்பனத்தில் பகவான் தோன்றி, ஸ்ரீ வில்லிபுத்தூரில் இருக்கும் கோதையை நாம் மணம் செய்ய விரும்பினபடியால் நமது பல்லக்கு, குடை, வெண்சாமரம் முதலிய விருதுகளுடன் நீங்கள் சென்று அவளை அழைத்து வாருங்கள் என ஆக்ஞாபித்தார். பெருமாள் கட்டளைப்படியே மறுநாள் பல்லக்குடன் ஸ்ரீரங்கம் கோவில் ஜனங்கள் பெரியாழ்வார் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அந்த தேசத்து அரசன் இச்செய்திகளைக் கேள்வி

யுற்று கோவிலுக்குச்செல்லும் வழியைப் பந்தலிட்டு புஷ்பங்களால் அலங்கரித்து வைத்தான்.

ஸ்ரீ ஆண்டாளும் மங்கள ஸ்நாநமாடி அழகிய பட்டாடை உடுத்தி ஆபரணங்களணிந்து புஷ்பங்கள் சூடி பல்லக்கில் அமர, ஆழ்வாரும் அரசனும் இருபுறமும் நடந்துவர நாற்புறமும் ஜனங்கள் சூழ மங்களகோஷத்துடனே "ஆண்டாள் வந்தாள்" என் றாரவாரிக்கத் திருவரங்கம் பெரிய கோயிலை யடைந்து ஸ்ரீ ஆண்டாள் பெருமாள் சந்நிதான மடைந்தாள். பெருமாளது திவ்யரூபத்தைக் கண்டவுடன் காந்தத்தைக் கண்ட இரும்புபோல் ஓடி அவருடன் ஒன்று சேர்ந்தனள்.

இந்த ஆச்சரியத்தைக் கண் கொட்டாமல் பெரியாழ்வாரும் அரசனும் மற்ற எல்லா ஜனங்களும் கண்டு அதிசயித்தார்கள். பிறகு அர்ச்சகரிடம் பகவானது திருப்பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள். ஆழ்வாரும் ஸ்ரீ வில்லிபுத்தூர் திரும்பி வந்து பகவத் கைங்கர்யம் செய்திருந்தார்.

## ஸ்ரீ ஆண்டாள் பாடிய திருப்பாவை

1. அன்றிவ்வுலக மளந்தாய்! அடிபோற்றி
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடமுதைத்தாய்! புகழ்போற்றி
கன்றுகுழலா யெறிந்தாய்! கழல்போற்றி
குன்றுகுடையா யெடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப்பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

2. ஒருத்திமக னாய்ப்பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்துவளரத்
தரிக்கிலானாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்னநின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

## நாச்சியார் திருமொழி

1. பட்டிமேய்ந்தோர் காரேறு பலதேவற்கோர் கீழ்க்கன்றாய்
இட்டீறிட்டு விளையாடி இங்கேபோதக் கண்டீரே?
இட்டமான பசுக்களை இனிதுமறித்து நீரூட்டி
விட்டுக்கொண்டு விளையாட விருந்தாவனத்தே
[கண்டோமே

2. பருந்தாட்களிற்றுக் கருள்செய்த பரமன்தன்னை
[பாரின்மேல்
விருந்தாவனத்தே கண்டமை விட்டு சித்தன்கோதை
[சொல்
மருந்தாமென்று தம்மனத்தே வைத்துக்கொண்டு
[வாழ்வார்கள்
பெருந்தாளுடைய பிரானடிக் கீழ்ப்பிரியாது
[என்றுமிருப்பாரே

# 11. குலசேகராழ்வார்

மேற்குக்கரைத் தேசமாகிய சேர ராஜ்யத்தில் கள்ளிக் கோட்டை என்னும் பட்டினத்தில் திடவிதன் என்னும் அரசன் ஆண்டுவந்தார். அவருக்குக் குலசேகரன் என்று ஒரு குமாரர் பிறந்தார். அவ்வரச குமாரனும் நாளடைவில் வாள் வில் வித்தைகளில் தேர்ச்சியடைந்து, சோழபாண்டிய அரசர்களை ஜயித்து, ராஜ்யத்தை விஸ்தாரப் படுத்தினர். திடவித மகாராஜனுக்கு வயதாக, ராஜ்யபாரத்தைக் குலசேகரருக்கு அளித்துத் தான் வனத்திற்குத் தபம் செய்யச் சென்றார்.

குலசேகர மன்னனும் வெகு நீதியாக ராஜ்யம் நடத்திவந்தார். அவருக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறந்தனர். குலசேகர மன்னவனும், இப்பிறப்பில் சந்தோஷமும், மறுபிறப்பில்லாமல் மோக்ஷமும் அடைவதற்கு என்ன சாதனம் என பல நாட்களாக ஆலோசித்து வருந்தி, கடைசியில் ஸ்ரீயப்பதியான மகாவிஷ்ணுவை பஜித்திருப்பதே சிறந்த சாதனமென அறிந்து, சதாகாலமும் பகவந்நாம பஜனை செய்துவந்தார். பகவானது அவதார மகிமைகளைக்கேட்டு ஆனந்தமாயிருந்தார்.

கற்றறிந்த பண்டிதர்களால் ஸ்ரீராமாயணத்தைப் படிக்கச் சொல்லி அவர்கள் அர்த்தம் சொல்லிவரக் கேட்டு மகிழ்வார். ஒரு சமயம் இராமாயணம் படித்த பண்டிதர் காட்டிலிருந்த ஸ்ரீராமன் கரன் தூஷணன் முதலிய அரக்கர்களுடன் யுத்தம் செய்யுநிமித்தம் தான் ஒருவராகவே சென்றார் என்று சொல்லி விவரித்தார்.

முன் நாட்களில் நடந்த ஒருசம்பவத்தை வாசிக்கி றார் என்பதை மறந்து, தற்சமயம் ஸ்ரீராமன் தனியே யுத்தத்துக்குச் செல்வதாகக் குலசேகராழ்வார் எண்ணி உடனே, "அடடா! இச்சமயம் இராமனுக்குத்துணையாக நாம் செல்ல வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டு சேனைகளைக்கூவித் தானும் ஸ்ரீராமனுக்கு உதவியாக யுத்தம் செய்வதற்குப் புறப்பட்டார். இன்னசெய்வ தென்று தெரியாமல் மந்திரிகள் நிற்க, அதிவிவேகி யான புராணபண்டிதர் விஷயம் தெரிந்துகொண்டு சட் டென, "ஸ்ரீராமர் ஜயம் பெற்றுத்திரும்பி வந்து சீதா தேவியின் பயம் தீர்த்தருளினார்," என்று முடித் தார். ராஜனும் சந்தோஷமாய் ஆசனத், தமர்ந்தார். அன்று முதல் புராணபண்டிதர் அரசன் மனோபாவத் தை அறிந்தவராதலின் ராமாயணத்தில் இராமனுக்குக் கஷ்டம் ஏற்படும் இடத்திலெல்லாம் குறுக்கிச் சொல்லி வந்தார். இப்படியிருக்க ஒரு நாள் அந்தப்பண்டிதர் அரண்மனைக்குச் செல்ல முடியாமையால் வேறொரு வரை அனுப்பிவைத்தார். அவரும் "சீதையை ராவணன் கொண்டுபோனான்" என்றவிடத்தில் விஸ்தரித்துச் சொல்லக்கேட்ட மன்னன் பரபரப்புடன் எழுந்து படைகளை வரச்சொல்லி ராவணனுடன் யுத்தம்செய்து சீதாபிராட்டியாரை மீட்டு வர எண்ணங்கொண்டு, தானே முன்னால் சென்று கடலை நீந்திக் கடந்து லங் கைக்குச்செல்லத் தீர்மானித்து கடலில் தடதடஎன இறங்கி நடக்கலானார். அவரது திடசித்தத்தைக் கண்டு ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியுடனும் தம்பிலக்ஷ்மணனுட னும் தரிசனம்தந்து "அன்பனே ராவணனைக் கொன்

றோம். சீதையை மீட்டு விட்டோம். நீ ஊருக்குப்போ வாய்" என்று சொல்லி மறைந்தருளினார். குலசேக ராழ்வாரும் திரும்பினார். இவ்விதமாகக் குலசேகராழ் வார் பகவானது சரித்திரங்களைக் கேட்டு ஆனந்தித்தார். அரசன் அரண்மனையில் பல பாகவதர்களை அழைத்து அவர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பார். இவ் விதம் பல நாட்களா யிருந்துவருகையில் ஸ்ரீரங்கம் சென்று எம்பெருமானைத் தரிசிக்க ஆவல்கொண்டார்.

உடனே ராஜ்யத்தை தன் மகனுக்குக் கொடுத்து விட்டு ஆழ்வார் ஸ்ரீரங்கம் சென்று பெருமாளைத் தரிசி த்துப் பலவாருகப் பாடல் பாடித் துதித்தார். பிறகு வைஷ்ணவ க்ஷேத்திரங்கள் தோறும் சென்று பெரு மாளை சேவித்து பாடல்கள் பாடி மகிழ்ந்தார். இவ் விதமாக யிருந்து தமது அறுபத்து ஏழாவது பிராயத் தில் பரமபத மடைந்தார்.

குலசேகராழ்வார் வடமொழி தென்மொழி இரண் டிலும் பாண்டித்ய முடையவர். அவர் பாடிய தமிழ் பாடல்கள் சுமார் நூறுகும். அவற்றிற்குப் பெரு மாள் திருமொழி எனப்பெயர். ஸ்ரீராமாயண சரித்திர த்தைச் சுருக்கமாகப் அப்பாடல்களில் எழுதி யிருக்கி ருர்.

1. மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! [செம்பொன்சேர்
கன்னிநன் மாமதிள்புடைசூழ் கணபுரத்தென் [கருமணியே
என்னுடைய இன்னமுதே! இராகவனே தாலேலோ.

2. தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே! தயரதன் [தன்
மாமதலாய்! மைதலிதன் மணவாளா! வண்டினங்கள்
காமரங்கள் இசைபாடும் கணபுரத்தென் கருமணியே!
ஏமருவெம் சிலைவலவா! இராகவனே! தாலேலோ.

3. தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே!
காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே!
ஏமருவெம் சிலைவலவா! இராகவனே! தாலேலோ.

## 12. தொண்டரடிப் பொடியாழ்வார்

சோழதேசத்திலே கும்பகோணத்தருகே திருமண்டங்குடி என்னும் ஊரில் ஒரு பிராமணனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அக்குழந்தைக்கு விப்பிர நாராயணன் எனப்பெயரிட்டு சகல சாஸ்திரங்களும் கற்பித்து வந்தார்கள். பகவானிடம் அன்பு கொண்டு விப்பிர நாராயணர் ஸ்ரீரங்கம் சென்று நந்தவனம் வைத்துப் பூப்பறித்து மாலை கட்டி பகவானுக்குச் சாத்தி மகிழ்ந்து வசித்து வந்தார்.

இவ்விதமாயிருக்க தேவதேவி என்ற ஒரு கன்னிகை அவ்வூர் அரசனிடம் பாடல் பாடி சன்மானம் பெற்றுத் திரும்பி வரும்வழியில் இந்த அழகிய நந்தவனத்தைக்கண்டு ஆசை கொண்டு சொந்தக்காரர் யாரென விசாரிக்க உள் நுழைந்தாள்; உள்ளே விப்பிர நாராயணர் பாத்தி கட்டி நீர் பாய்ச்சிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவரை மணம் செய்துகொள்ள

விரும்பினாள். ஆனால் அவரோ கொஞ்சமும் ஆசையில்லாதவராய் நாராயண பஜனைசெய்து கொண்டிருந்தார். இந்த மகா பக்தரை எப்படியாவது மணம் செய்து கொள்வதெனத் தீர்மானித்து, தான் ஒரு வேலைக்காரப் பெண்போல அவருடன் வேலைசெய்து வந்தாள். சில நாட்கழித்து விப்பிர நாராயணரும் அவளை மணம் செய்துகொண்டார். பிறகு இருவரும் சில நாள் சேர்ந்து வசித்து வந்தனர். ஆனால் அவர் கைப்பொருளெல்லாம் செலவான பிறகு தேவதேவி அவரைத் தனியே விட்டுவிட்டுத் தான் ஊருக்குப் போய் விட்டாள். விப்பிர நாராயணர் தேவதேவியினிடம் உள்ள பிரியத்தால் அவளைத் தேடி யலைந்து, அவள் வீட்டையடைந்து வாயிலில் நின்று கொண்டிருந்தார்.

ஸ்ரீ லக்ஷ்மி தேவியும் பெருமாளை நோக்கி, "நமக்குத் தொண்டராகிய இவர் தேவதேவிக்குத் தொண்டனாகி அவள் வீட்டு வாயிலில் காத்து நிற்க நீர் பார்த்து இருக்கலாமா" என்று வினவ, உடனே பகவான் தனது கோவிலிலுள்ள தங்கபாத்திர மொன்றை எடுத்துக் கொண்டு தான் விப்பிரநாராயணன் சிநேகிதன் போல வேஷம் பூண்டு தேவதேவி வீட்டிற்குச் சென்று "இந்தப் பாத்திரத்தை மணவாளனாகிய என் மூலமாய் உனக்கு இனாமாக அனுப்பினார்" என்று சொல்லிக் கொடுத்து வந்தார். உடனே தேவதேவி ஓடிவந்து கதவைத்திறந்து வாயலில் நின்றிருந்த விப்பிரநாராயணரை உள்ளே அழைத்துவந்து மரியாதை செய்ய அவரும் மகிழ்ந்திருந்தார். மறு நாட் காலை கோவிலில் பொற் பாத்திரம் காணுமையால் அர்ச்சகர்கள் அரசனிடஞ்

சொல்ல அரசனும் ஆள்விட்டு துப்பு விசாரித்து இருக்குமிடந்தெரிந்து தேவதேவி முதலான யாவரையும் பிடித்துவரச் செய்தான். தேவதேவியோ தனக்கு விப்பிரநாராயணர் என்பவர் மணவாளன் வசம் அப்பாத்திரத்தை அனுப்பினார் என்றாள். அரசன் தேவதேவிக்குத் தக்க அபராதம் இட்டு விப்பிரரைச் சிறையிலிட்டான்.

அன்றிரவில் பகவான் அரசன் கனவில் தோன்றி நடந்த விஷயங்களை உரைத்து மறைந்தார். அரசன் ஆச்சரியத்துடன் எழுந்து விப்பிரரை உடனேவிடுவித்துவிட்டான். விப்பிரரும் தான் செய்த பாவத்திற்கு அடைந்த தண்டனையை நினைந்து வருந்தினார். பகவானையே சதா காலமும் துதித்து முன்னினும் பதின்மடங்கதிகமாய்ப் பாடியிருந்தார்.

வைஷ்ணவ பக்தர்களுக்குச் சகலவிதமான பணிவிடைகளும் செய்து மகிழ்ந்தார். தன்னை மறந்திருந்தாலும் தன் பக்தர்களிடம் அன்புகொண்டு பணிவிடை செய்யும் தொண்டர்களிடம் கருணையுடைய பகவான் விப்பிரநாராயணனது குணத்தை மெச்சி அவருக்குத் "தொண்டரடிப்பொடி" என நாமம் கொடுத்தனர்.

தொண்டரடிப்பொடியாழ்வாரும் ஸ்ரீரங்கத்திலேயே இருந்து திருவரங்கத்துப் பெருமாளையே சதாகாலமும்பாடித் துதித்து, பெருமாளது கருணையால் வைகுண்டத்தை அடைந்தார்.

## திருப்பள்ளியெழுச்சி

1. கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தணைந்தான்
கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்

மதுவிருந் தொழுகின மாமலரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்து வந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலை கடல்போன் றுளதெங்கும்
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந் தருளாயே.

2. கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
கூர்ந்தது குணதிசை மாருத மிதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொண் டன்னம்
ஈன்பனி நனைந்த தம்மிருஞ் சிறகுதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயி றுறவதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய வானையி னருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந் தருளாயே.

## 13. திருமங்கையாழ்வார்

சோழ தேசத்திலே சீர்காழி என்னும் ஊருக்கருகில் சோழராசனது சேனைத்தலைவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நெடுநாள்கழித்து பகவானது அருளால் ஒரு புத்திரன் பிறந்தான். அப்பிள்ளை நீல நிறமுடைய வராயிருந்ததைப்பற்றி நீலன் எனப் பெயரிட்டார்கள். பாலப்பருவம் நீங்கி வயது வந்தவுடன் நீலன் அரசனிடம் சேனாதிபதியாகி பலபோர்களிலும் சென்று ஜயம் பெற்றுவந்தார். இப்படிப்பகைவர்களை வென்று கொண்டு வந்தது பற்றி அவருக்குப் பரகாலன் எனப்பெயர். அரசனும் பரகாலனுக்கு நிலங்கள் கொடுத்து தன் கீழ் ஓர் சிற்றரசாக்கினன்.

இப்படியிருக்க திருவள்ளக்குளம் என்ற ஊரில் ஒரு வைணவ வைத்யனுக்கு குமுதவல்லி என்ற ஒரு அழகிய பெண்மணி இருந்தாள். பரகாலன் என்னும் மன்னன் அந்தப் பெண்ணைப்பற்றிக் கேள்விப்பட்டு அவளைத் தான் மணம் செய்து கொள்ள விரும்பினார். குமுதவல்லி என்ற அந்த நங்கை, தான் ஒரு வைஷ்ண வனையே மணம் புரியப்போவதாகவும் கலியாணம் ஆன பிறகு ஒரு வருஷகாலம் தினந்தோறும் பதினாயிரம் பாகவதர்களுக்கு தன் கணவன் அன்னமிட வேண்டு மென்றும் சொன்னாள்.

மன்னனும் அவ்விதமே வைஷ்ணவனாகி குமுத வல்லியைக் கலியாணம் செய்து கொண்டார். அவள் விருப்பப்படியே தினந்தோறும் பாகவதாள் ஆராதனை செய்து வந்தார். சில மாதங்கள் சென்றபிறகு கையில் பணமில்லாமையால் அரசனுக்குக் கட்டவேண்டிய பண த்தை யெல்லாம் எடுத்துச் செலவு செய்தார். அரச னும் தனக்குச் சேர வேண்டிய பணத்திற்காகப் பன் முறை ஆட்களை அனுப்ப, இன்று, நாளை என்று சாக்குச் சொல்லி வந்தார். அரசனும் கோபித் துப் பாகாலனை எதிர்த்து யுத்தம் செய்து அவரைப் பிடித்துக் கைவிலங்கிட்டு மூன்றுநாள் அன்ன ஆகார மின்றி சிறையில் இட்டான். பரகாலனும் பக வானைத் துதித்து இருந்தார். அவனுடைய கனவில் பகவான் தோன்றி, காஞ்சி நகரத்திற்கு வரும்படியும் பணச்சுரங்கம் காட்டுவதாகவும் சொல்லியருளினார். பர காலனும் மந்திரிகளிடம் அவ்விதமே தெரிவித்து காஞ்சி மாநகருக்கு அவர்களை இட்டுச்சென்றார். அங்கே

எம்பெருமான் அருளால் நிதிக் குவியலைக்கண்டு சந்தோஷங்கொண்ட பரகாலன் அரசர்க்குச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தி மிகுதியான பணத்தைக்கொண்டு பழையபடி பாகவதர்களுக்கு ததியாராதனம்செய்து பூஜித்து வரலாயினர்.

பாகவதர்கள் ஆராதனை செய்வதில்,கையில் இருந்த பொருள் எல்லாம் சில நாட்களில் செலவாகி விடவே, பொருள் சேகரிக்க வேறு வகையின்றி நான்கு தோழர்களுடன் சாலையில் நின்று போகிறவர் வருவகிறார்களிடம் வழிப் பறித்துப் பணம் கொள்ளையிட்டு பாகவதர்களைப் போஷித்து வந்தார். பெருமாளும் கொள்ளையிட்ட பணம் நல்ல வழிக்கே உபயோகப்படுவது கண்டு பேசாமலிருந்து வந்தார். ஒரு நாள் பிராட்டியும் பகவானும் பல ஆபரணங்களைப் பூண்டு மணப்பெண்ணும் மண மகனுமாக வேடம் பூண்டு பரகாலன் பதுங்கி நிற்கும் சாலையோரமாய்ச் சென்றார்கள். பரகாலர் அவர்களைக்கண்டு அதிமகிழ்ச்சி கொண்டு அவர்கள்மேல் புலி போலப் பாய்ந்து, அவர்களிடமிருந்த நகைகளை எல்லாம் கொள்ளைகொண்டார். பகவானது விரலில் அணிந்த மோதிரத்தை இலகுவாகக் கழற்ற முடியாமல், பரகாலன் கீழே விழுந்து பல்லால் கடித்து இழுத்து எடுத்துக்கொண்டார்.

இவ்விதமாகப் பறித்த ஆபரண மூட்டையைத் தன்னால் தூக்கமுடியாமை கண்டு பரகாலன் "நீ என்ன மாயனோ? என்ன மந்திரம் செய்தாய்?" என வினவ, பெருமாள் புன்னகை புரிந்து "உனக்கும் அந்த மந்திரம் சொல்லித் தருகிறேன்; கிட்டவா" என்று

அவர் காதில் அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்து, தனது திவ்ய ரூப தரிசனம் காட்டி மறைந் தருளினார்.

பகவத் தரிசன பாக்கியமும் உபதேசமும் பெற்றது காரணமாக பரகாலனுக்கு அஞ்ஞானம் விலகி ஞானம் உதயமாயிற்று. பகவான் தன் விரல் மோதிரத்தையும் விடாமல் பற்களால் கழற்றி விட்டதற்கு வியந்து அவரைக் 'கலியன்' என அழைத்தார். ஆகவே அவருக்குக் கலியன் என்ற பெயர் உண்டாயிற்று. குமுதவல்லி நியையும் மங்கையை மணக்க வைஷ்ணவரானமைபற்றி அவருக்குத் திருமங்கை யாழ்வார் என்ற பெயரும் ஏற்பட்டது.

பிறகு பகவானது திவ்யரூபத்தையும் குணங்களையும் அநுபவத்தில் அறிந்து பற்பல கவிகளை இயற்றி ஆநந்தித்தார். பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், பெரிய திருமடல் முதலிய திவ்ய ப்ரபந்தங்களை இயற்றினார்.

பல க்ஷேத்திரங்கள் சென்று பெருமாளைத் தரிசித்துப் பல பாடல்கள் பாடிக் களித்தார். இவ்விதமாக அவர் ஸ்தல யாத்திரை செய்து வருகையில் ஒரு சமயம் சீர்காழியில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரைச் சந்தித்தார். ஆழ்வாருடைய கல்வித் திறமையை வியந்து சம்பந்தர் மகிழ்ந்தார். இப்படியாகப் பல ஸ்தலங்கள் சென்று பிறகு ஸ்ரீரங்கம் அடைந்தார். அங்கொரு நாள் அவர் கனவில் பெருமாள் தோன்றித் தமது கோவில் பிராகாரம் கட்டுதல் முதலிய திருப்பணி செய்யும்படி சொன்னார்.

தன்னிடம் பணமின்மையால் தனது பழைய தோழர்களுடன் நாகப்பட்டணம் சென்று அவ்விடமிருந்து பொருள் கொள்ளையிட்டு வந்து கோவிலைக்கட்டி முடித்தார். திருமங்கையாழ்வார் இவ்விதமாகப் பெருமாளைச் சேவித்துக் குமுதவல்லி யாருடன் பரமானந்த பதத்தை யடைந்தார்.

## பெரிய திருமொழி

1 i. வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோடு
அவர்தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

ii. கற்றிலேன் கலைகள் ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை
பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை
பெருநிலத்தாருயிர்க் கெல்லாம்
செற்றமே வேண்டித்திரிதருவேன் தவிர்ந்தேன்
செல்கதிக் குய்யுமாறெண்ணி
நற்றுணையாகப் பற்றினேனடியேன்
நாராயணாவென்னும் நாமம்.

2 i. எண்திசைகளுமே ழுலகமும் வாங்கிப்
பொன் வயிற்றிற்பெய்து
பண்டோராலி லைப்பள்ளிகொண்டவன்
பான்மதிக்கிடர் தீர்த்தவன்

ஒண்திறலவுண னுரத்து கிர்வைத்தவன்
ஒள்ளெயிற்றொடு
திண்திறலரியா யவன் திருவேங்கடம் அடைநெஞ்சமே

ii. பேசுமின் திருநாமமெட் டெழுத்தும் சொல்லிநின்று
பின்னரும்
பசுவார் தேமை யுய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம்
வாசமாமலர் நாறுவார் பொழில் சூழ்தரும்
உலகுக்கெல்லாம்
தேசமாய்த் திகழும் மலைத்திருவேங்கடம்
அடைநெஞ்சமே !

3 i. தாயேதந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்
நோயேபட் டொழிந்தேன் நுன்னைக்
காண்பதோராசையினல்
வேயேய் பூம் பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக்
கொண்டருளே.

ii. கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்று
இல்லாமையினல்
என்றேனு மிரந்தார்க்கு இனிதாக வுரைத்தறியேன்
குன்றேய் மேகமதிர் குளிர்மாமலை வேங்கடவா !
அன்றே வந்தடைந்தேன் அடியேனை யாட்
கொண்டருளே.

iii. தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துவிட்டேன்
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா !
அரியே ! வந்தடைந்தேன் அடியேனை யாட்கொண்டரு
ளே.

iv. கண்ணா யேழுலகுக்குயிராய எங்கார் வண்ணனை
விண்ணோர் தாம்பரவும் பொழில்வேங்கட வேதியனை
திண்ணார் மாடங்கள்சூழ் திருமங்கையர் கோன்கலியன்
பண்ணார் பாடல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே.

4. பள்ளியிலோதிவந்த தன்சிறுவன்
வாயிலோராயிர நாமம்
ஒள்ளியவாகிப்போத வாங்கதனுக்கு
ஒன்றுமோர் பொறுப்பிலனாகி
பிள்ளையைச்சீறி வெகுண்டு தூண்புடைப்பப்
பிறையெயிற்ற னல்விழிபேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத்
திருவல்லிக்கேணி கண்டேனே.

5. i. புள்ளாயேனமுமாய்ப் புகுந்துஎன்னை யுள்ளங்கொண்ட
கள்வா ! என்றலும் என்கண்கள் நீர்கள் சோர்தருமால்
உள்ளே நின்றுருகிநெஞ்ச முன்னையுள்ளியக்கால்
நள்ளே னுன்னையல்லால் நறையூர்நின்ற நம்பீயோ !

ii. சிறியாய் ஓர்பிள்ளையுமாய் உலகுண்டோராலிலைமேல்
உறைவாய் ! என்நெஞ்சினுள்ளே உறைவாய் !
உறைந்ததுதான்
அறியாதிருந்தறியேன் அடியேன் அணி வண்டுகிண்டும்
நறைவாரும் பொழில்சூழ் நறையூர்நின்ற நம்பீயோ !

6. i. மாற்றமுள ஆகிலும் சொல்லுவன் மக்கள்
தோற்றக்குழி தோற்றுவிப்பாய்கொல்? என்று இன்னம்
ஆற்றங்கரை வாழ்மரம்போல் அஞ்சுகின்றேன்.
நாற்றச்சுவை ஊறொலியாகிய நம்பீ !

ii. அணியார் பொழில்சூழ் அரங்கநகரப்பா !
துணியேனினி நின்னருளல்ல தெனக்கு
மணியே ! மணிமாணிக்கமே ! மதுசூதா !
பணியாய் எனக்குஉய்யும் வகைபரஞ்சோதீ

# 14. நம்மாழ்வார்

தென்னாட்டிலே தாம்பிரபரணி நதிக்கரையில் திருநகரி என்ற ஊரில் வேளாள சாதியிலே காரியார் என்ற ஒருவர் இருந்தார். தனக்கு ஒரு குமாரன் பிறக்கவேண்டுமென அவர் பெருமானைப் பலநாள் பூஜித்து வந்தார். அப்படியே காரியார் மனைவி கருத்தரித்து நல்லதினத்தில் ஒரு புத்திரனை ஈன்றாள். திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும் பகவானே லோக சம்ரக்ஷணார்த்தம் இவ்விதம் திருவவதாரம் செய்தார். அக்குழந்தை உலக நடைக்கு மாறாக ஆகாரம் அழுகையின்றி இருத்தல்கண்ட பெற்றோர்கள் அவரைக்கோயிலில் கொண்டுபோய்க்கிடத்தி "மாறன்" என்ற பெயர் இட்டார்கள். நம் சடகோபன் எனப் பெருமாள் சொல்லியபடியால் அவருக்கு நம்மாழ்வார் என்றும் பெயர் உண்டாயிற்று. பதினாறு வயது மட்டும் கண்விழியாமல் தவநிலையிலேயே மாறன் இருந்தார். உலகைப் பார்க்கப் பிரியமில்லாமல் இப்படி மாறன் கண்ணைமூடித்தியானத்திலிருக்கக் கண்டு, அவருடைய பெற்றோர்கள் பெருமாளுக்கு என்ன அபராதம் செய்தோமோ என வருந்தியிருந்தனர்.

பதினாறு வயதானவுடன் நம்மாழ்வாருக்குப் பகவான் நேரில் ப்ரத்யக்ஷமாகி சகலவித ஞானத்தையும் அளித்து மறைந்தார். அச்சமயம் க்ஷேத்திர யாத்திரை செய்துவந்த மதுரகவியாழ்வார், அவரது திவ்விய ஒளியையும் ஞானத்தையும் கண்டு மகிழ்ந்து, அவரை நமஸ்கரித்து அவரிடம் பல விஷயங்களைக் கற்றுக்

கொண்டார். அச்சமயம் கருடவாகனராய் மகாவிஷ்ணு வானவர் பிராட்டியுடன் ஆழ்வாருக்கு திவ்யரூப தரிசனம் காட்டி யருளினூர். அதனைக் கண்ணுற்று நம்மாழ்வார் மனம் கசிந்து உருகிப் பல பாடல்களைப் பாடத் தொடங்கினூர். இவர் பாடிய பாடல்கள் சுமார் 1400 ஆகும். திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்ற பிரபந்தங் களில் ஸ்ரீமந் நாராயணரது வைபவத்தை அனுபவத்தில் ஆனந்தித்துப் பாடியுள்ளார். ஜீவாத்மாவினது தன்மை யையும், பரமாத்மாவை யடைய உபாயமும், அங்ஙனம் அடைதலின் பயனும் மற்ற சகல விஷயங்களும் பிரபந்த ரூபமாய் வெளியிட்டருளினூர். நமது ஆழ் வார் நாள் முழுவதிலும் நாராயணரையே பாடித் துதித் திருந்து வைகுந்தம் அடைந்தார்.

மற்ற எல்லா ஆழ்வார்களுக்கும் இவரையே முதன் மையாகக் கூறுவதுண்டு. எல்லோராலும் நம்மாழ்வார் என விசேஷமாக சிலாகித்துக்கொள்ளப்பட்டவர். மேலும் பகவானது திரு அவதாரமானபடியினூலும் இவ்வுலகவாழ்க்கையில் சம்பந்தப் படாமல் பகவான ருளாலே ஞானேதயம் அடைந்தபடியினூலும் நம்மாழ் வார் ஆழ்வார்களில் முக்கியமானவர். வைஷ்ணவ சம் பிரதாயங்களையும், அனுஷ்டானங்களையும் ஏற்படுத்திய ஸ்ரீமன் நாதமுனிகள் நம்மாழ்வாரிடத்திலே உபதே சம் பெற்றனர். ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிரப் பிர பந்தங்களையும் நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு உபதே சித்தார்.

# திருவாய் மொழி

## கோயில் திருவாய் மொழி முதற் பாசுரங்கள்

1. உயர்வற வுயர்நலம் உடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

2. வீடுமின் முற்றவும்
வீடுசெய்து உம்முயிர்
வீடுடை யானிடை
வீடுசெய்ம்மினே.

3. கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்
வளரொளிமாயோன் மருவிய கோவில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை
தளர்விலராகில் சார்வது சதிரே.

4. ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்
தெழிகுரலருவித் திருவேங்கடத்து
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே.

5. ஒன்றுந்தேவு முலகு முயிரும் மற்றும் யாதுமில்லா
அன்றுநான்முகன் தன்னொடு தேவருலகொடு
உயிர் படைத்தான்
குன்றம்போல் மணிமாட நீடுதிருக்குரு கூரதனுள்
நின்றவாதிப்பிரான்நிற்க மற்றைத்தெய்வம் நாடுதிரே?

6. ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன் பாயே
நீராயலைந்துகரைய உருக்குகின்ற நெடுமாலே!
சீரார்செந்நெல்கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலந்திகழக்கிடந்தாய்! கண்டேன் எம்மானே.

7. மின்னிடை மடவார்கள் நின்னருள்சூடுவார்
முன்பு நான தஞ்சுவன்
மன்னுடையிலங்கை அரண்காய்ந்த மாயவனே!
உன்னுடைய சுண்டாயம் நானறிவேன்
இனிஅது கொண்டு செய்வதென்
என்னுடையபந்தும் கழலும்தந்து போகு நம்பீ!

8. கங்குலும்பகலும் கண்துயிலறியாள்
கண்ணநீர் கைகளா லிறைக்கும்
சங்குசக்கரங்களென்று கைகூப்பும்
தாமரைக் கண்ணென்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னைவிட்டு? என்னும்
இருநிலம் கைதுழாவிருக்கும்
செங்கயல்பாய் நீர்திருவரங்கத்தாய்!
இவள்திறத்தென் செய்கின்றாயே!

9. நெடுமாற் கடிமை செய்வேன்போல்
அவனைக்கருதவஞ்சித்து
தடுமாற்றற்ற தீக்கதிகள் முற்றுந்
தவிர்ந்த சதிர்நினைந்தால்
கொடுமாவினையேன் அவனடியாரடியே
கூடுமிதுவல்லால்
விடுமாறென்பதென்? அந்தோ!
வியன்மூவுலகு பெறினுமே.

10. மாலை நண்ணித் தொழுதெழுமினோ வினைகெட
காலைமாலை கமலமலரிட்டு நீர்
வேலை மோதும் மதிள் சூழ் திருக்கண்ணபுரத்து
ஆலின்மேலால் அமர்ந்தான் அடியிணைகளே.

11. சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின
ஆழ்கடலலைதிரை கையெடுத்தாடின
ஏழ்பொழிலும் வளமேந்திய என்னப்பன்
வாழ்புகழ் நாரணன் தமரைக் கண்டுகந்தே.

12. முனியே! நான்முகனே!
முக்கண்ணப்பா! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண் கருமாணிக்கமே! என் கள்வா
தனியேனாருயிரே! என்தலை மிசையாய் வந்திட்டு
இனிநான் போகலொட்டேன்
ஒன்றும் மாயஞ் செய்யேலென்னையே.

# முகவுரை

## C. விஷ்ணு பக்தர்கள்

வைஷ்ணவபக்தர்கள் பலர் உளர். மஹாராஷ்டிரதேசத்திலும், வட இந்தியாவிலும் உள்ளபக்தர்களது சரித்திரங்களை "பக்த விஜயம்" என்னும் புத்தகத்தில் வாசிக்கலாம். சுமார் நாற்பது பக்தர்களது சரித்திரங்கள் அப்புத்தகத்தில் உள. இப்புத்தகத்தில் ஐவரது சரித்திரங்கள் மாத்திரம் எழுதப்பட்டிருக்கின்றன. மஹிபதி என்னும் ஒரு மஹாராஷ்டிர பக்தர் "பக்த விஜயம்" என்னும் நூலை மஹாராஷ்டிர பாஷையில் இயற்றினர். அவர் ஆமத்நகர ஜில்லாவில் தாராபதி என்னும் ஊரில் தேசஸ்தபிராமண குடும்பத்தில் பிறந்தவர். சிறுபிராய முதல் பண்டராபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானை ஸ்மரித்து ஆனந்தித்து, வருஷந் தவருமல் பண்டராபுரம் சென்று பகவானைத் தரிசித்து வருவார். ஒரு நாள் இரவு பகவானைத்தரிசித்த சமயம், வைஷ்ணவபக்தர்களது சரித்திரங்களை எழுதி உலகத்தாருக்கு உபகாரம் செய்யும்படி ஆக்ஞை பெற்ருர். அவ்வாறே மராட்டிபாஷையில் "பக்தவிஜயம்" என்னும் நூலை இயற்றினர். மூல கிரந்தத்தை திராவிட பாஷையினர்களாகிய நாம் வாசிக்க முடியாமலிருப்பது பற்றி, சிலர் நமக்குபயோகமாக மொழிபெயர்த்து எழுதியிருக்கிருர்கள். மஹிபதி தேவரின் காலம் சுமார் 1710 முதல் 1780 வரையில் எனக் கருதப் படுகிறது.

அந்தந்ததேசத்திய பக்தர்களாலும் அறிஞர்களாலும் அந்தந்த தேசத்திய ஜனங்களின் குண விசேஷங்களும், தேச சம்பவங்களும் மாறுதலடைகின்றன என்பது பொது விஷயம். தேசமெங்கும் இவ்விதமான பக்தர்கள் அதிகமாவதாலும் அவர்களது பெருமையும் பிரதாபமும் கிராமந்தோறும்

பரவுதலாலும் தேச ஜனங்களுக்கே ஒருவித உத்சாகமும் சக்தியும் உண்டாகிறது என மஹாராஷ்டிர அறிஞராகிய மகா தேவ ரானடே என்பவர் எழுதியிருக்கிறார். மேலும் மஹிபதி தேவர் 'பக்தவிஜயம்' எழுத, அப்புத்தகம் மஹாராஷ்டிர தேசத்தில் அருமையாக யாவரும் படிக்க நேர்ந்த சமயம், சிவாஜி ராஜா மகாராஷ்டிரர்களை ஒருங்கு சேர்த்து மஹாராஷ்டிர ராஜ்யஸ்தாபனம் செய்தார்.

பக்தவிஜயத்தில் சொல்லப்பட்டுள்ள பக்தர்கள் எல்லாரும் மஹாராஷ்டிரம், ஹிந்தி, முதலிய பாஷைகளில் பகவந் நாம கீர்த்தனங்களும் பாடல்களும் பாடியிருக்கிறார்கள். தென்னிந்தியாவில் தேவாரம், திருவாய்மொழி முதலிய பாடல்களை நாம் பாடுவதுபோலவே வடஇந்தியாவிலும் கபீர், துக்காராம் முதலிய பக்தர்களது பாடல்களைப்பாடி ஆனந்திப்பது வழக்கம்.

V. N.

# 15. புண்டரீகன் சரித்திரம்

தக்காணத்தில் பீமாநதிக்கரையில் பண்டராபுரம் என்னும் கிராமம் இருக்கிறது. இவ்விடத்தில் பீமாநதிக்கு சந்திரபாகம் என்று பெயர். ஏனெனில் பிறைச்சந்த்ரன்போல் அந்நதி வளைந்து ஓடுகிறது. அந்த ஊரில் ஜனுதேவர் என்று ஒருவர் வசித்திருந்தார். அவர் மனைவியின் பெயர் சத்யவதி. அவர்களுக்கு நெடுநாள் கழித்து அருமையாக ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்குப் புண்டரீகன் என்று நாமகரணம்செய்து, மிகவும் மேன்மையாய் வளர்த்து வந்தார்கள். பதினாறு பிராயமானவுடன் பிள்ளைக்கு விவாகம்செய்தார்கள். வீட்டிற்கு மருமகள் வந்தது முதல் ஜனுதேவருக்கும் சத்யவதிக்கும் கொடுமைகள் ஆரம்பித்தன. வயது முதிர்ந்த அவர்களை நெல் குத்தவும், மாவு அரைக்கவும், வீடு மெழுகவும் துணி தோய்க்கவும் சொல்லி மகனும் மருமகளும் இரக்கமின்றி வருத்தினார்கள். ஐயோ! பாவம்! அவர்களது கஷ்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. பகவானைத் தியானித்து அவர்கள் சகித்திருந்தனர்.

ஒரு நாள் காசிக்கு யாத்திரை செல்லும் சில பக்தர்களுடன் ஜனுதேவரும் சத்யவதியும் தாங்களும் காசிக்குச் செல்ல யோசித்து, வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போயினர். தாய் தந்தையர் சென்றதை அறிந்த மகனும் மருமகளும் நல்லதாயிற்று என்று சும்மா இருந்தனர். சில நாளானவுடன் புண்டரீகனும் அவன் மனைவியும் தாங்களும் ஸ்தலயாத்திரை செய்ய விரும்பி

சுகமாக வண்டியமர்த்திக் கொண்டு பிரயாணம் செய்தார்கள். ஊரூராய்த் தங்கிப்போகையில் ஓர் இடத்தில் ஓர் இரவு தங்கினார்கள். அவர்கள் இறங்கி இருந்த இடத்திற்கு எதிரிலிருந்த ஒரு மடத்தில் பல தேவ மாதர்கள் அன்றிரவு வந்து வேலைசெய்வதைப் புண்டரீகன் பார்த்தான். அழுக்காடையுடன் வந்த அவர்கள் வேலை முடிந்து செல்லும்போது பரிசுத்தமான பட்டாடைகள் அணிந்திருப்பதைக் கவனித்தான். இந்த ஆச்சரியத்தைக் கண்ட புண்டரீகன் இதன் விபரத்தை அறிய விரும்பி மறுநாள் இரவில் கண் விழித்துக் காத்திருந்தான். முன்னிரவு போலவே, அழுக்காடையுடன் தேவமாதர்கள் வந்து வேலை செய்தார்கள். ஒருவள் வீடு பெருக்கினாள். ஒருவள் பாத்திரம் தேய்த்தாள், ஒருவள் தண்ணீர் நிரப்பினாள். இவ்விதமாக வேலைகள் முடிந்தவுடன் தங்கள் வஸ்திரங்கள் சுத்தமாக, அவர்களும் திரும்பிச் சென்றார்கள். புண்டரீகன் எழுந்து ஓடி வந்து கடைசியாகச் சென்றவளை வழிமறித்து "நீங்கள் யார்? இங்கு வேலை செய்வானேன்" என்று கேட்டான். அதற்கு அவள் "நான் கங்கை நதி, அவள் கிருஷ்ணா, மற்றொருவள் யமுனை என இவ்வாறாக நாங்கள் பல நதி தேவதைகள். எங்களிடம் தினந்தோறும் அநேக மனிதர்கள் ஸ்நாநம்செய்து தங்கள் பாவங்களைக் கழுவி விடுவதால் எங்கள் ஆடைகள் அழுக்கடைகின்றன. ஆனால் பரம பிதுர் பக்தனான இந்தப்புண்யவான் வீட்டை சுத்தி செய்வதால் நாங்கள் சுத்தராகி விடுகிறோம்" எனச் சொல்லிப் போனாள். அவ்வார்த்தைகளைக் கேட்ட புண்டரீகனுக்கு அப்பொழுது தான்

புத்தி வந்தது. தன் பெற்றோரைத் தான் கேவலமாய் நடத்தி விரட்டினதற்கு வருந்தி அவர்களைத் தேடித் திரிந்து அலைந்தான். அதிர்ஷ்ட வசத்தால் அவர்களை அடைந்து, நமஸ்கரித்து வீட்டிற்குத் திரும்பி வரும்படி வேண்டினான். அவர்களை வண்டியில் ஏற்றி ஊருக்கு அழைத்து வந்தான். மகா துர்புத்திரனாய் இருந்த அவன் மகா சற்புத்திரனாகி மாறி விட்டான். அன்று முதல் ஜனுதேவருக்கும் சத்யவதிக்கும் புண்டரீகனும் அவன் மனைவியும் சகலவித உபசாரங்களையும் செய்தார்கள். அவர்களை ஸ்நாநம் செய்வித்து, உடை உடுத்து, புஷ்பங்களாற் பூசித்து, தன் கையால் உணவு உண்பித்து, தாம்பூலம் கொடுத்து, விசிறி, களைப்பாற்றி நின்று அவர்களை உறங்கச் செய்வான். அவனும் அவன் மனைவியும் பிறகு உண்பார்கள். இவ்விதமாக புண்டரீகனின் பிதுர் பக்தியும் பணிவிடையும் உலகெங்கும் பரவியது. பெற்றோர்களும் குமாரனுடைய பழைய அலக்ஷியத்தை மறந்து ஆனந்தமாய் இருந்தார்கள்.

அப்படியிருக்க ஸ்ரீ கிருஷ்ண பகவான் புண்டரீகனுடைய பிதுர் பக்தியை உலகத்தினருக்குக் காட்ட எண்ணினார். ருக்மணி தேவியுடன் அவர் புண்டரீகரின் வீட்டினுள் சென்று அவனைக் கூப்பிட்டார். அச்சமயம் புண்டரீகன் தன் மாதா பிதாக்களுக்கு போஜனம் செய்வித்து, விசிறி, உபசரித்து நின்றிருந்தபடியால், தன் வீட்டுக்கு வந்த அதிதியாகிய பகவானை சற்றே நிற்கும்படி ஒரு செங்கல்லை எடுத்துப் போட்டு விட்டு, உள்ளே தனது வேலையில் கருத்தாய் இருந்தார். சகல ஜீவன்களின் மனதையும் அறிந்த பகவான் தன்னை மரி

யாதை செய்யாமல் புறக்கணித்ததைப்பற்றி நினைக்கவே இல்லை. பெற்றோரிடம் இவ்வளவு பக்தி காட்டும் புண்டரீகனைப்பற்றி மகிழ்ந்திருந்தார்.

பணிவிடைகள் செய்து முடிந்த பிறகு புண்டரீகன் வெளியே வந்து, ஒற்றைக்கல்மீதிருந்த ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் போற்றிப் பணிந்து அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். பகவானும் அன்புடன் அவரை எடுத்துத் தூக்கி ஆசீர்வதித்தார். புண்டரீகன் வேண்டுதலின் பேரில், அந்த ஒற்றைக்கல் செங்கல் மீதே பகவான் எப்போதும் இருப்பதாகச் சொன்னார். அவ்விடத்தில் ஒரு கோவில் கட்டினார் புண்டரீகன். பகவானுக்கு அவ்விடத்தில் விதோபா (அதாவது செங் கல் மேல் நின்றவர்) என்று பெயர் உண்டாயிற்று. அன்று முதல் பண்டராபுரம் சென்று விதோபாவை பக்த கோடிகள் தரிசிக்கலானார்கள். இவ்விதமாக பக்தி செய்து கொண்டிருந்த புண்டரீகன் பகவான் அருளால் சுகமடைந்தார்.

## 16. நாம தேவர்

பண்டராபுரத்தில் தாமாஜி என்ற ஒரு தையல் காரனுக்கு கோமாய் என்று ஒருமனைவி இருந்தாள். அவர்களுக்கு நெடு நாளாய்ப் புத்திரப் பேறு இல்லாமல் ஸ்ரீ கிருஷ்ணபகவானை வேண்டிவந்தனர். ஒருநாள் நதியில் தாமாஜி ஸ்நானம் செய்து நிமிரும் போது கூடையில் குழந்தை ஒன்று மிதந்துவரக் கண்டு அக்குழந்தையை தூக்கிக்கொண்டு பகவானைப்பாடித் துதித்து வீட்டிற்கு

எடுத்துவந்து மனைவியிடம் கொடுத்தார். அக்குழந்தைக்கு நாமதேவர் எனப் பெயரிட்டு அவர்கள் பிரியமாய் வளர்த்து வந்தார்கள். தாமாஜி ஒருசமயம் அயலூருக்குப் போயிருந்தான். ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு நிவேதனம்செய்துவரும் பொருட்டு நாமதேவரை அவர் அன்னை கோவிலுக்கு அனுப்பினாள். நாமதேவர் ஸ்ரீகிருஷ்ணனை உண்ணும்படி வேண்டிக்கொண்டார். விக்ரஹம் பேசவில்லை; நாமதேவரோ, "ஸ்வாமி என்பிதா ஊரிலில்லை, நான் கொண்டுவந்த ஆகாரத்தை இன்றைக்கு நீர் புசிக்க மாட்டேன் என்கிறீரே. நான் என்ன செய்வேன்" என வருந்தி புசிக்கச் சொல்லி அழுதுகேட்டும் பேசாமலிருக்கக்கண்டு, தன் தலையை மோதிக்கொள்ளத் துணிந்தார். உடனே பகவான் பிரசன்னராகி அக்குழந்தையை எடுத்துத் தழுவி, தானும் நாமதேவருமாகப் புசித்தார்கள். நாமதேவரும் சந்தோஷமாய் வெறும் பாத்திரத்தை மாத்திரம் வீட்டில் கொடுக்கத் தாயார் கண்டு கோபித்தாள். அவர் என்னசொல்லியும் அவருடைய வார்த்தைகளை அவள் நம்பாமலிருந்தாள். மறுநாள் தகப்பனார் வந்து சேதியறிந்து அவரையே அன்றும் நிவேதனம் செய்துவர அனுப்பித்தார். மறைந்திருந்து பார்த்தார். முன்னாள் போலவே பகவான் உண்ணுவதைக் கண்டு பரமானந்தம் கொண்டு தன் பிள்ளையைக் கட்டி முத்தியிட்டு அவர் மகிழ்ந்தார்.

நாமதேவருக்கு வயதானவுடன் இராஜாயி என்ற பெண்ணை விவாகம் செய்வித்தார்கள். தினந்தோறும் பக்தர்களை உபசரித்து ஆராதனை செய்து நாமதேவர் இல்லறம் நடத்திவந்தமையால் நாளுக்கு நாள் தரித்

திரமாகி அன்றுடம் சாப்பாட்டிற்கு வெகு கஷ்டப் பட்டார். இதையறிந்த பகவான் ஒருநாள் பெருத்த ஒரு பணமுட்டையை எடுத்துக் கொண்டு நாமதேவர் இல்லாத சமயம் அவர் வீட்டில் கொண்டுபோய் கொடுத்தார். நாமதேவரும் பகவானது லீலையைக் குறித்துச் சந்தோஷித்து பகவந்நாம பஜனை செய்து மகிழ்ந்திருந்தார்.

இப்படியிருக்க, பண்டராபுரத்தின் வழியாக அநேக பக்தர்கள் யாத்திரை செய்தார்கள். ஞானதேவரும் வேறுசிலரும் நாமதேவர் வீட்டில் தங்கிவிட்டுப் புறப்படும்போது நாமதேவரும் அவர்களுடன் சேர்ந்து புண்ணியஸ்தல யாத்திரை செய்யப் புறப்பட்டார். ஊர் ஊராகத்தங்கி காசி, கயா முதலிய ஸ்தலங்களைத்தரிசித்தார். வழியில் நேர்ந்த கஷ்டங்களையும் பிறரால் ஏற்பட்ட உபத்ரவங்களையும் பகவானது கடாட்சத்தால் சுகமாக அனுபவித்து ஆனந்தமாகயிருந்தார். ஒரு சமயம் வனாந்தரம் வழியாகச் செல்கையில் யாத்திரிகர் எல்லோரும் தாகம்மிகுந்து ஒன்றும்கிடைக்காமல் தவித்தார்கள். நாமதேவரோ "பகவான் நமக்குத் தீர்த்தம் கொடுத்து ரக்ஷிப்பார். இல்லையேல் அவர் கிருபையினால் நாம் இறந்து போவோம், நமக்கு என்னகவலை?" என்று ஆனந்தமாக உட்கார்ந்து பகவானைத் துதித்திருந்தார். பகவானும் தனக்கு ஆபத்துநேர்ந்தது போல ஓடிவந்து, ஒரு சுனையுண்டாக்கி அதினின்றும் ஜலம் வழிந்துஓடச்செய்தார். உடனே எல்லோரும் தாகசாந்தி செய்து கொண்டார்கள். இன்னொரு சமயம் ஓர் ஊரில் சிவன்கோவில் கோபுரவாயிலில்

நின்று எல்லாபக்தர்களும் பஜனை செய்தார்கள். அக் கோவில் ஜனங்கள் சிலர் இந்தவிஷ்ணுபக்தர்களை எட் டிப்போகச் சொன்னார்கள். இவர்களும் கோவிலைச் சுற்றிப் பிரதக்ஷணமாய் பஜனை செய்து சென்றார்கள். உடனே கோபுரத்துடன் கூட கோவிலின் உள்ளிருக் கும் சிவரூபமான பகவான் பக்தர்கள் செல்லும் பக் கமாகத் தாமும் திரும்பிக் கொண்டே அவர்கள் பஜனை யைக்கேட்டு இருந்தார். இவ்வாச்சர்யத்தைக் கண்ட அவ்வூர் ஜனங்களெல்லாரும், ரூபமும் நாமமும் பேதப் பட்டிருந்தாலும் பகவான் ஒருவரே என்பதை அறிந்து, தாங்களும் அவர்களுடன் சேர்ந்து பஜனை செய்தார் கள். பிறகு அந்த பக்தர்களை உபசரித்து வணங்கி அவர் களை வழிவிட்டு ஊருக்கு அனுப்பினார்கள்.

நாமதேவர் ஸ்தலயாத்திரை முடிந்து ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ணபக வான் கிழப்பிராமண வடிவங்கொண்டு நதிக்கரையில் ஸ்நாநம் செய்யும் பிராமணர்களிடம் சென்று "நாமதே வர் ஸ்தலயாத்திரை சென்று திரும்பினபடியால் இன்று மடத்தில் பிராமணர்களுக்கு சமாராதனை நடத்துகிறார். நீங்கள் எல்லோரும் வரவேண்டும்" என வேண்டிக் கொண்டார். அப்படியே சகல பிராமணர்களும் மடத் தில் வந்துசேர்ந்தார்கள். ருக்மணிதேவியுடன் கிருஷ்ண பகவான் அவர்கள் எல்லோருக்கும் சம்பிரமமாய் அறு சுவை விருந்து அளித்துத் தாமே இருந்து உபசரித்தார். பிராமணர்கள் தேவாமிருதமான போஜனம் உண்டு தாம்பூலம் அருந்தி வீற்றிருக்க, ஸ்ரீ கிருஷ்ணபகவான் நாமதேவரை அழைத்துவந்து அவருக்கு அன்னம் பரி

மாரித் தானும் சாப்பிட உட்கார்ந்தார். பிறகு நாமதேவர் உண்ணும்போது விளையாட்டாக பகவான் அவர் இலையிலிருந்த பக்ஷணத்தைத் தான் எடுத்துப்புசித்தார். இதைக்கண்ட பிராமணர்கள் எல்லோரும், "நம்மை அழைத்து சமாராதனை செய்வித்த பிராமணன் தையல் காரனாகிய நாமதேவருடன் பந்தி போஜனம் செய்து அவனுடைய எச்சில் அன்னமும் உண்டானே. நாம் எல்லோரும் ஜாதிப் பிரஷ்டரானோமே! பிராயச்சித்தம் என்ன செய்வது" எனப்பேசிக்கொண்டார்கள். இதை யறிந்த பகவான் எழுந்து அவர்களை இருக்கச் சொல்லிப் பிறகு ஒவ்வொருவருக்கும் ஒரு ரத்னம் தக்ஷிணையாகக் கொடுத்தார். அவர்கள் பிரமித்துப் பார்த்திருக்க அச் சமயம் பகவானாகிய கிழவனார் அந்தர்தியானமாய் மறைந்துபோனார். இதைப்பார்த்த அவர்கள் கிடைத் தற்கரிய இந்த போஜனமிட்ட கிழவனாரே பகவான் எனத் தெரிந்து அவரைத் துதித்தார்கள். இந்த பாக் கியம் பெற்ற நாமதேவரை அவர்கள் எல்லோரும் வாழ் த்திச் சென்றனர்.

ஜாதியில் குயவனாகிய கோரகும்பர் என்ற ஒரு பக்தருடைய வீட்டில் ஒருநாள் சமாராதனை நடந்தது. எல்லோரும் போஜனம் செய்திருக்கும்போது ஞான தேவர் கோரகும்பரைப் பார்த்து பரிஹாசமாக "கோர கும்பரே! இவ்விடம் சாப்பிடும் பாண்டங்களில் வெந்தது எது, வேகாதது எது எனச் சற்று பரீக்ஷைபார்த்துச் சொல்லும்" எனக்கேட்டார். உடனே கோரகும்பர் எழுந்து ஒவ்வொருவருடைய தலையையும் தட்டித்தட் டிப்பார்த்து வந்தார். நாமதேவர் தலையில் தட்டிப்பார்த்

தவுடன் "இந்தப்பாண்டம் இன்னும் பதம் ஆகவில்லை" எனச் சொன்னார். இதைக் கேட்ட நாமதேவர் வெட்கி, பக்தர்களின் கோஷ்டியில் தான் இன்னும் பக்தன் என்று சொல்லிக்கொள்ளும் பக்குவ மடையவில்லையே என மிகவும் வருந்தி, ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் ஓட்ட மாய் ஓடிவந்து விழுந்து நமஸ்கரித்துத் தான் பட்ட அவ மானத்தைச் சொல்லி யழுதார். "பரம சிநேகிதனாக நீ இருந்தும் எனக்கு இன்னும் என்ன குறைவு?" எனக் கசிந்து அழுதார். பக்தன் குறையைக் கேட்ட ஸ்ரீ கிருஷ்ணனும் சிரித்துக்கொண்டே "நீ என்னதான் என்னிடம் பிரியமாயிருந்தாலும் உனக்கு ஒரு குரு வேண்டுமல்லவா! அந்தக் குறை ஒரு குறைதானே. நீ ஒரு குருவைத் தேடிக்கொள்" எனச் சொன்னார். நாமதேவர் "ஆஹா! உன்னைவிட வேறு உயர்ந்த குரு யார்! நீயேன் எனக்கு குருவாகக் கூடாது?" என வேண்டினார். ஸ்ரீ கிருஷ்ண பகவான் உடனே "நான் எந்த வேஷத்துடன் வந்தாலும் உன்னால் அறிந்துகொ ள்ளச் சாமர்த்தியம் இருக்குமா?" என, "உன்னை நான் எப்பொழுதும் அறிந்து கொள்வேன்", என நாமதேவர் பதிலுரைத்தார்.

இப்படி யிருக்க, ஒருநாள் பயங்கரமான காட்டு மனிதன் ஒருவன் தெருவில் சென்றான். அவனைக் கண்ட எல்லாரும் பயந்து ஓடினார்கள். நாமதேவரும் நடுங்கி ஓடிக் கோவிலில் ஒளிந்து கொண்டு, பகவானே காப்பாற்றும் என விழுந்து நமஸ்கரித்தார். பிறகு எழு ந்து பார்த்தார். ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹம் நிற்குமிடத் தில் அந்தப்பயங்கரமான காட்டுமனிதன் நின்றுகொண்டு

"என்னை அறிந்துகொள்ள முடியவில்லையே!" எனச் சொல்லிச் சிரித்தார். நாமதேவரும் வெட்கி, "முதல் தடவை யாகையால் ஏமாந்துபோனேன். இன்னொருமுறை பரீட்சித்துப் பாரும்" எனக் கேட்டுக் கொண்டார். இவ்விதமாக பகவான் இன்னும் இரண்டுதடவை வெவ்வேறு வேஷமெடுத்து வந்தும், நாமதேவரால் அறிந்து கொள்ள முடியாமற் போயிற்று. உடனே பகவான் நாமதேவரைப்பார்த்து, "இனி உனக்கு ஒரு குரு வேண்டியது அவசியம். நீ நாகநாதபுரத்தில் உள்ள விசோபகேசர் என்பவரிடம் சென்று உபதேசம் பெற்றுவா" என்று சொல்லியனுப்பினார்.

நாமதேவரும் குருவைத் தேடி நாகநாதபுரம் சென்றார். அவ்விடம் விசோபகேசரைத் தேடிப்பார்த்தார். கோவிலில் சிவலிங்கத்தின்மேல் கால்படும்படியாக ஒருவர் படுத்திருக்கக்கண்டு, அவர்தான் விசோபகேசர் என அறிந்தார். அந்தோ! இதென்ன அநியாயம், ஸ்வாமி தலையில் காலை நீட்டிப் படுத்திருக்கிறாரே, இவரா நமக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவானால் தெரிந்தெடுக்கப் பட்ட குரு, என மனதில் வருத்தப்பட்டார். பிறகு அவரிடம் சென்று நமஸ்கரித்து, "ஐயா! நீங்கள் சிவலிங்கத்தின்மேல் கால் படும்படி படுத்திருக்கலாமா?" என வினவினார். குருமூர்த்தியும் புன்னகைபுரிந்து, "அன்பனே! என் தள்ளாத வயது காலத்தில் கண் தெரியாமல் படுத்துவிட்டேன். என் காலைச் சற்று நகர்த்தி எடுத்துப்போடு" எனச் சொன்னார். அப்படியே நாமதேவர் அவர் காலைத் தூக்கி வேறிடத்தில் வைத்தார். ஆனால் என்ன ஆச்சரியம்! அங்கும் ஒரு

சிவலிங்கம் அவர் காலடியிலேயே நிற்கக்கண்டார். இதேது! இங்கொரு லிங்கம் முளைத்தது, என இன்னொரு இடத்தில் காலைத் தூக்கிவைக்க அங்கும் அப்படியே ஒரு லிங்கமிருந்தது. இப்படி எங்கே காலை வைத்தாலும் சிவலிங்கமா யிருக்கவே நாமதேவர் திகைத்து "குருவே யான் அறியாமல் உங்களைக் கேட்டதற்கு மன்னிக்கவேண்டும்" என நமஸ்கரித்தார். இந்த உலகத்தில் எல்லாவிடத்திலும் சகல ஜீவராசிகளிடத்தும் பகவான் வியாபித்துள்ளவர் என்ற அரிய ஞானத்தை இவ்விதமாக நாமதேவர் அறிந்தார். பிறகு சில நாள் குருவிடம் இருந்து உபதேசம் பெற்றுத் திரும்பித் தன் ஊர்வந்து சேர்ந்தார்.

பிறகு ஒருநாள் ஒரு பக்தருடைய வீட்டில் சமாராதனை நடந்தது. நாமதேவர் முதலியவர் போஜனம் செய்திருந்தார்கள். அச்சமயம் ஒரு அழுக்கு நாய் உட்புகுந்து இலைகளை முகர்ந்து சாப்பிடவந்தது. அநேகர் 'ஐயோ நாய் தொட்டுவிட்டதே' என்று எழுந்தார்கள். சிலர் அந்நாயை அடித்து விரட்டினார்கள். அந்த நாய் நாமதேவர் இலையிலிருந்த அப்பத்தைத் தூக்கிக்கொண்டு ஓடியது. உடனே நாமதேவரும் எழுந்து, "கண்ணே! கண்ணனே! இந்தா வெறும் அப்பம் சாப்பிட்டால் தொண்டையில் சிக்கிக்கொள்ளும். நெய்யையும் கூடச் சேர்த்துக்கொள்" என்று இலையிலிருந்த நெய்யைத் தன் கையில் எடுத்துக்கொண்டு நாயின் பின்னே ஓடினார். இதைக்கண்ட ஜனங்கள் நகைத்து நாமதேவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றிருந்தார்கள். ஆனால் நாமதேவர் நாயிடம் சென்று

நெய்யைக் கொடுத்தார். அந்த நாயோ உடனே கிருஷ்ணபகவானாக மாறி "ஏ நாம! குருவிடம் உபதேசம் பெற்றபடியால் இந்தத்தடவை நீ என்னை அறிந்துகொண்டு விட்டாய்" எனச் சந்தோஷித்துக் கூறி நாமதேவரை இறுகத் தழுவிக்கொண்டு, யாவரும் கண்டு பிரமித்து நிற்க, இருவரும் மறைந்து போனார்கள்.

இவ்விதமாக நாமதேவர் பகவானுடன் ஐக்யமாயினார்.

## 17. கபீர்தாஸர்

காசியில் உள்ள தமால் மொக்கீம் என்ற முகமதியர் கங்கையில் நீராடிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு கூடையில் ஒரு குழந்தை மிதந்துவர, அக்குழந்தையை அவர் எடுத்து மிக அருமையாய் வளர்த்து வந்தார். அக்குழந்தைக்கு கபீர் என்று பெயரிட்டுத் தங்கள் தொழிலாகிய துணி நெய்வதில் பழக்கி வந்தார். முகமதியர் வீட்டில் முகமதியனாக வளர்ந்து வந்த போதிலும், கபீர் சிறுபிராயம் முதலாகவே ராம ஸ்மரணை செய்து கொண்டு தறியண்டை உட்கார்ந்து தன்னை மறந்து ஆனந்தமாயிருப்பர். தறியில் போட்ட வஸ்திரம் முடிவாகாமல் கபீர் இவ்விதமாக ராமஸ்மரணை செய்திருப்பதைக் கண்ட பெற்றோர்கள் கபீரை மிகவும் கண்டித்துத் தண்டிப்பார்கள். இதைக் காணச் சகியாத பகவான் கபீருக்கு உதவியாகத் தாமும் சென்று கபீருடன் தறியில் வேலை செய்வார்.

இவ்விதமாக பகவானும் பக்தனுமாகச் செய்து முடித்த சால்வையைக் கடையில் விற்று வரும்படி கபீரை அவர் பெற்றோர்கள் அனுப்பினார்கள். கபீரோ சால்வையைப் பிரித்து வைத்து ராமஸ்மரணை செய்து கொண்டு வீற்றிருந்தார். வாங்க வருபவர்கள், ஆகா! இந்த வஸ்திரத்திற்கு விலை கொடுக்க நம்மாலாகாது என்று சென்றனர். பொழுது போயிற்று. கபீரது சால்வையும் விற்பனையாகவில்லை. பணமின்றி வீட்டிற்குப் போனால் பெற்றோர்கள் தண்டிப்பார்கள் என கபீர் பயந்து உட்கார்ந்திருந்தார். அப்பொழுது பகவான் ஒரு கிழ பிராமணனாக வந்து 'அப்பா, இந்தக் குளிரில் வயோதிகனான எனக்குப் போர்த்திக் கொள்ள ஒரு வஸ்திரம் கொடு' எனக் கபீரிடம் கெஞ்சினார். உடனே கபீர் அந்த சால்வையில் ஒரு பாதியைக் கிழித்து அவருக்குக் கொடுத்தார். மறுபடியும் பகவான் ஒரு ஏழைப் பக்கிரிவேஷம் தாங்கி கபீரிடம் சென்று "ஏ முட்டாள்! முகமதியனாகிய நீ ராமஜபம் செய்கிறாயே!" என்று கோபிக்க, கபீர் "ஐயா கருணைக் கடலாகிய பகவானை எந்த நாமத்தால் அழைத்தால் என்ன? மல்லிகைப் புஷ்பத்துக்கு எந்தப் பெயரிட்டாலும் அதன் மணம் குறைந்து போகுமோ?" எனக் கூறினார். பக்கிரியும் "அது போகட்டும், எனக்கு உடுக்க ஒரு வஸ்திரம் கொடு" எனக் கேட்டார். கபீரும் உடனே தன்னிடம் மிகுந்திருந்த பாதிச் சால்வையையும் அவரிடம் கொடுத்து விட்டார். அப்பொழுது கபீருக்குண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. சால்வையை விற்காமல் இருந்ததாலல்லவா இப்படி இருவருக்கு உப

யோகமாகக் கொடுக்கும்படியான பாக்யம் தனக்குக் கிட்டிற்று, என மகிழ்ந்து ராமஸ்மரணை செய்து மெய்ம் மறந்து இருந்தார்.

கபட நாடகனாகிய ஸ்ரீ பகவான் ஒரு பிராமண வேஷம் பூண்டு கபீரின் தாயாரிடம் சென்று "கபீர் செய்யும் அக்ரமம் என்ன? விலை மதிக்கத் தகாத சால் வையைப் பலர் பெரும் விலை கொடுத்து வாங்குவதாகச் சொல்லியும் கபீர் மறுத்துவிட்டு அதைக் கிழித்து கிழ வனுக்கும் பக்கிரிக்கும் தானம் செய்து விட்டான்" என்று சொல்லி அவளை அழைத்து வந்து கபீர் இருக்கு மிடத்தைக் காட்டினார். அவள் கோபங்கொண்டு கபீ ரைக் கண்டித்து பிரம்பால் அடித்தாள். கபீரோ ராமஸ் மரணைசெய்து கொண்டே அவ்வடிகளின் வலியைக் கவனியாமலிருந்தார். பகவான் கருணை கொண்டு தன் ஸ்வய ரூபத்தைக் காட்டினார். கையில் வில்லும் தலையில் கிரீடமும்கொண்டு பிரகாசமான ரூபத்துடன் ராமசந்திர மூர்த்தியாக விளங்க, கபீரும் அவர் தாயாரும் ஆனந் தித்து பகவானைத் துதித்தார்கள். பகவானும் கபீரை அணைத்து "அன்பா! எப்பொழுதும் என்னை நினைத்துக் கொண்டேயிரு" என்றுகூறி மறைந்தார். கபீரைக் கட்டியணைத்து முத்தமிட்டு அவர் அன்னையும் "உன்னால் எனக்குக் கிடைத்த பாக்யம் அளவிடக் கூடாதது. இந்த திவ்ய தரிசனமும் பெற்றேன்" என மகிழ்ந்தாள்.

இவ்விதமாக கபீரும் சதா பகவந் நாமஸ்மரணை செய்துகொண்டே காலம் கழித்து வருகையில் தனக்கு ஒரு குரு இல்லாமலிருப்பது ஒரு பெருங் குறையாகும் என்று கருதி விசனித்திருந்தார். பகவான் அருள்

பெற்றுப் பலராலும் புகழப்பெற்ற ராமாநந்தரையே தனக்குக் குருவாக் அடைய வேண்டிச் சென்றார். ஆனால் ராமாநந்தரோ "நீ முகமதியன். உனக்கு நான் எவ்வாறு உபதேசம் செய்வேன்" என்று மறுத்து விட்டார். ஆயினும் தினந்தோறும் ராமாநந்தரை தரிசித்து அவர் ராம பூஜை செய்வதைக் கேட்டு வந்தார். தான் ராமாநந்தரது சீஷன் என்று சொல்லிக் கொள்ளுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டவேண்டுமென்று காத்திருந்தார்.

ஒரு நாள் அதிகாலையில் ராமாநந்தர் ஸ்நாநத்திற்கு செல்லும்வழியில் கபீர் படுத்திருக்க,ராமாநந்தர் போகும் போது அவர் பாதம் கபீர்மேல்பட்டது. உடனே ராமா ராமநந்தர் "ராம!" என்று சொன்னார். கபீரும் குதித்தெழுந்து "தங்கள் பாததூளி பட்டு தந்யனானேன். ராம நாமத்தை எனக்கு உபதேசித்தீர்கள்! என் பாக்யமே பாக்யம்" எனக் களிகொண்டு குதித்தார். ராமாநந்தரும், இந்தக்கபீர் மகாபக்தன், சதாகாலமும் பகவந்நாமம் செய்யும் சத்புருஷன், என்று மகிழ்ந்தார்.

ஆயினும் கபீரை இன்னொருமுறை பரீக்ஷிக்க விரும்பினார். ஒரு நாள் தெருவில் சென்று கொண்டிருந்த கபீர் ஆனந்தமாகப் பாடிக்கொண்டு "ராமாநந்தரைக் குருவாக அடைந்த எனக்கு என்ன குறை" என்று கூறிக்களித்தார். இதைக்கேட்ட ராமாநந்தர் கடுங்கோபம் கொண்டதுபோலப் பாசாங்கு செய்து "நீ எவ்விதம் அப்படிச் சொல்லலாம், உனக்கு எப்பொழுது நான் உபதேசம் செய்தேன்?" எனக்கூவித் தன்கையிலிருந்த தண்டுவினால் அவர் முகத்தில் அடித்தார்.

நெற்றியிலிருந்து ரத்தம் ஒழுக, கபீர் உள்ளம் பூரித்து மகிழ்ந்து "என் அதிர்ஷ்டம் தான் என்ன? பூதேவியும் ஆகாயமும் மற்ற எல்லோரும் ராமாநந்தர் தன் சிஷ்யனை அடித்துப் பாடம் சொல்லிக்கொடுப்பதைப் பார்க்கிறார்கள் !" எனச் சந்தோஷம் பொங்கக்கூவினார். ராமாநந்தரும் கபீரது பக்தியைக்கண்டு மெச்சி, அவரை ஆசீர்வதித்துச் சென்றனர்.

கபீருக்கு ஒருபுத்திரன் உண்டு. அவனுக்குக் கமால் என்று பெயர். தகப்பனுக்கு ஏற்ற குமாரராகிய கமால் சிறுபிராயம் முதலாகவே பகவந்நாம கீர்த்தனங்களைப் பாடி மகிழ்ந்திருப்பார். ஸ்தல யாத்திரை செய்து வரும் பக்தர்கள் பலர் ஒருநாள் இரவு கபீர்வீட்டில் தங்கினார்கள். கபீரும் கமாலும் அவர்களை எதிர் கொண்டழைத்து உபசரித்தார்கள். கபீர் மனைவியோ பக்தர்களுக்கு போஜனத்திற்கு வேண்டிய பதார்த்தங்கள் இல்லையே என வருந்தினாள். இதைக்கண்ட கபீர் பக்கத்து வீடுகளில் கொஞ்சம் தானியம் கடன் கேட்டார். எல்லாரும் கொடுக்கமாட்டோமென்று விட்டனர். கடையில் எங்கேனும் பண்டங்கள் கொடுப்பார்களோ எனக் கபீரும் கமாலும் கடைத்தெருவிற்குச் சென்றார்கள். ஆனால் இரவு நெடுநேரமாகிவிட்டபடியால், கடைகளெல்லாம் முடிவிட்டார்கள். எவ்விதமேனும் பக்தர்களுக்குப் போஜனம் செய்விக்கவேண்டுமே எனக் கபீர் யோசித்துக் கடைசியாக ஒரு கடையில் தமக்கு வேண்டிய பதார்த்தங்களைத் திருடி எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தார். உடனே சுவற்றில் ஒரு சிறு துவாரம் செய்து சிறுபையனாகிய கமாலை உள்ளே தூக்கிவிட்டார்.

கமாலும் உள்ளே சென்று அரிசி, பருப்பு நெய், வெல்லம் முதலிய பண்டங்களை எடுத்துவந்து கபீரிடம் கொடுத்தான். வெளியே வருமுன் கடைக்காரனுக்குத் தெரிவித்துவிடவேண்டுமென்று, கமால் உள்ளே நித்திரையிலிருந்த கடைக்காரனைத் தொட்டு, "ஐயா உமது கடையில் நாங்கள் இருவர் சில பதார்த்தங்களை எடுத்துக் கொண்டோம். விழித்துப்பாரும்" என்று சொல்லி விட்டுக் கமால் துவாரத்தினுள் நுழைந்தான். விழித்துப் பார்த்த கடைக்காரனும் உடனே ஓடிவந்து வெளியே செல்லும் கமாலின் கால்களைப் பிடித்திழுக்க, வெளியேயிருந்து கபீர் தன் மகனின் தலையைப் பிடித்திழுக்க, கமால் வெகு கஷ்டப்பட்டான். உடனே கமால் தன் பிதாவை நோக்கி "அப்பா திருடப்பட்ட பதார்த்தங்கள் என்று தெரியுமாயின் பக்தர்கள் ஒருவேளை சாப்பிடமாட்டார்கள். ஆதலால் இன்னார்தான் திருடியதென்று தெரியாமலிருக்கும் பொருட்டு என் தலையை வெட்டி எடுத்துக்கொண்டு வீடு சென்று போஜனம் தயார் செய்து பக்தர்களுக்கு அளியுங்கள்" என்றார். இதைக்கேட்ட கபீருடைய கண்களில் நீர் பெருகியது. ஆயினும் துக்கத்தை யடக்கிக்கொண்டு, கமால் சிரத்தை வெட்டி யெடுத்துக்கொண்டு பதார்த்தங்களை வீடு கொண்டு சேர்த்தார். விஷயத்தைத் தெரிந்துகொண்ட கபீர் மனைவியும் துக்கம் பொறுக்க முடியாமல் வருந்தினும்,பரபரப்புடன் பக்தர்களுக்குப் போஜனம் பக்குவம் செய்து அமுதளித்தாள். பக்தர்கள் எல்லாரும் அன்றிரவு சிரம பரிகாரம் செய்து மறுநாட் காலையில் பிரயாணம் செய்யப் புறப்பட்டார்கள். கபீரும் அவர்

மனைவியும் அவர்களை வழிவிட்டனுப்பக் கொஞ்சதூரம் பின் சென்றார்கள்.

இது இப்படியிருக்க, கமாலின் உடலைப் பற்றி இழுத்துக்கொண்ட கடைக்காரனும் அவ்வூர் அரசனிடம் சென்று கொள்ளைக்காரர்கள் வந்து கொள்ளையிட்டதாயும், தான் விழித்து அவர்களை விரட்டினதாகவும் அவர்கள் அடிபட்டு ஓடிவிட்டனர் என்றும், ஒருவனைமாத்திரம் தான் பிடித்துக்கொண்டதாயும் சொல்லி யழுதான். அரசனும் துப்பறிய வேண்டி அந்த உடலை சாலையில் கட்டி நிறுத்திவைக்க உத்தரவிட்டான். ஊரெங்கும் இதே பேச்சாயிருந்தது.

கபீர் வீட்டிலிருந்து செல்லும் பக்தர்களும் இந்த விஷயங்களைக் கேட்டுக்கொண்டே சென்றார்கள். அவர்கள் போகும் வழியில் பகவந் நாம சங்கீர்த்தனம் செய்துகொண்டே சென்றார்கள். கமாலின் சமீபத்தில் அவர்கள் செல்லும்பொழுது கைகள் இரண்டும் அந்த பக்தர்களை வணங்கும் விதமாகக் கூப்ப எழுந்தன. ஆஹா! என்ன ஆச்சர்யம்! அதைக்கண்ட பக்தர்கள் வியந்து, கபீரை நோக்கி விசாரித்தனர். கபீரும் முதல்நாள் நடந்த விஷயத்தை ஒளிக்க முடியாமல் சொன்னார். உடனே பக்தர்கள் கமாலின் உடலை எடுத்துக்கொண்டு கபீருடன் அவர் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்கள்.

அங்கே கமாலின் சிரசை எடுத்து அந்த உடலில் ஒட்டவைத்து கருணாநிதியான பக்தப்பிரியனான பகவானை நோக்கி யாவரும் துதிக்க, கமால் உடனே ஜீவன் பெற்று எழுந்தார். கபீரும் கமாலும் பக்தர்களை

நமஸ்கரித்து நிற்க, பக்தர்களும் கபீரை வணங்கி பகவானின் திருவிளையாடலை வியந்து ஆனந்தித்து விடைபெற்றுச் சென்றனர்.

கபீருடைய கீர்த்தி உலக மெங்கும் பரவியது. ஆனால் பொறாமைகொண்ட சிலர் அவரது பெருமையைக் குறைக்க எண்ணினர். இந்தக் கபீர் தன் மகன் கமாலைக் கொன்றது முதல் பக்தர்கள் எல்லாரும் கபீரைத் துதித்து வணங்குகிறார்களே, இது என்ன அநியாயம், என்று சிலர் கோபம் கொண்டு ஒரு யுக்தி செய்தனர். ஹிமாசலம் முதல் கன்னியா குமாரி வரையில் உள்ள ஸ்தலங்களில் வஸித்திருக்கும் பக்தர்கள் எல்லாருக்கும் கபீர் வீட்டில் ஒரு சமாராதனை நடப்பதாகவும் ஒவ்வொருவரும் வரும்படியாகவும் விளம்பரம் செய்தார்கள். இப்படி ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே தினத்தில் வந்துவிடுவதால், அவர்களுக்குச் சௌகரியமாகப் பணிவிடை செய்து உபசரிக்க முடியாமல் கபீர் தவிப்பார். ஒருக்கால் தன்னையே மாய்த்துக்கொள்வார். அல்லது பக்தர்கள் கோபித்து அவரைச் சபித்து விடுவாரென்று அவர்கள் எண்ணினார்கள்.

இந்த விஷயம் தெரிந்தவுடன் பக்தர்களான ரிஷிகள், சந்யாசிகள் அனைவரும் கபீரது பக்தியை மெச்சிக் கொண்டு அவ்வாறே கபீர் வீட்டிற்குக் குறிப்பிட்ட அந்த தினத்தில் வந்து சேர்ந்தனர். நாலாபக்கங்களிலும் வந்து குவிந்த பக்தர்களின் திருக்கூட்டத்தைக் கண்டு கபீர் ஆனந்தித்து, அந்த பாக்கியம் கிட்டியதற்கு உள்ளம் பூரித்து, அவர்களை எதிர்கொண்டு வணங்கி

அழைத்து வந்தார். கொஞ்சமேனும் அவர் கவலைப் படவில்லை.

தன் பக்தனுக் கேற்பட்டதை அறிந்த பகவான் உடனே கபீருக்கு உதவிபுரிய ஓடி வந்தார். தன்னையே பல ஆயிரம் கபீர்களாகச் செய்துகொண்டு ஒவ்வொரு பக்தனுக்கும் வேண்டிய உபசரணை செய்தார். ஒருவருக்கு கபீர் விசிறினார். இன்னொருவரின் பாதத்தை அலம்பினார். இன்னொருவருக்குப் பாக்கு சீவிக் கொடுத்தார். இன்னொருவருக்குச் சந்தனம் பூசினார். இன்னொருவருக்குத் துணி தோய்த்து உலர்த்தினார். இவ்விதமாக ஒவ்வொருவருக்கும் சகல உபசரணைகளையும் ஏககாலத்தில் செய்தார். அவர்களுக்கெல்லாம் அறுசுவையுடன் கூடிய போஜன பதார்த்தங்கள் செய்து அளித்து உபசரித்தார். பக்தர்களும் ஆனந்தமாய் பகவந்நாமஸ்மரணை செய்து கொண்டு பாடல்கள்பாடி ஆடிக் களித்திருந்தனர். பிறகு அவர்கள் கபீரிடம் உத்தரவு பெற்றுத் திரும்பினார்கள். ஒவ்வொருவருடனும் பகவானாகிய கபீர் சென்று வழிவிட்டனுப்பினார். பிறகு பகவான் மறைந்தருளினார்.

இந்த அற்புதத்தைக் கண்ட அந்தப் பொறாமைக்காரர்கள் ஓடிவந்து கபீரண்டை விழுந்து வணங்கித் தாங்கள் அறியாமையினால் செய்த பிழையைப் பொருத்தருளக் கெஞ்சினார்கள். அவர்களை மன்னித்து அவர்களுடன் பகவானுடைய கருணையை வியந்து, தோத்திரம் செய்தார். கபீர் சதா பகவானைப் பாடியவிதமாக ஆனந்தமாயிருந்து மோக்ஷத்தை அடைந்தார். கபீருடைய பாடல்கள் மிகவும் உருக்கமானவை. வட இந்தியாவில்

இவர் பாடல்களை (நாம் தேவாரம் திருவாய்மொழி பாடுவதுபோல) இன்னும் பாடி மகிழ்ந்து பகவானைத் துதித்து வருகிறார்கள்.

கபீர் இறந்துபோன பிறகு அவரது உடல் தமதென்று முகமதியரும் ஹிந்துக்களும் சண்டையிட்டுக் கொண்டனர். இருமதத்தினரும் மகா பக்திமானாகிய கபீர் தத்தம் மதத்தைத் தான் சேர்ந்தவர் என்று சொல்லி பெருமையை அடைய வேண்டுமென விரும்பினர். இப்படி இவர்கள் சச்சரவுசெய்து கொண்டிருக்க, கபீரது சரீரம் இருந்த இடத்தில் காணப்படவில்லை. ஆனால் அந்த இடத்தில் முகமதியருக்கு விருப்பமான பச்சை வர்ணமுள்ள ஒரு சால்வையும் ஹிந்துக்களுக்கு விருப்பமான ஒரு துளசிச் செடியும் இருந்தன. அவற்றைப் பார்த்தவுடன், சச்சரவுசெய்து கொண்டிருந்த முகமதியரும் ஹிந்துக்களும் ஒருவரை ஒருவர் ஆலிங்கனம்செய்து கொண்டு "நாம் சச்சரவுசெய்து கொண்டது என்ன புத்தியீனம்! ஆண்டவனைத் (பகவானைத்) துதித்து ஆனந்திப்பதில் நாம் இருவரும் ஒருவரே" என்றுகூறி மகிழ்ந்து ஒற்றுமைப்பட்டு வாழ்ந்திருந்தனர்.

## 18 மீராபாய்

இராஜபுதனத்தில் உள்ள உதயபூர் ராஜ்யத்தில் மகா உத்தமனான ஒரு அரசன் ஆட்சி செய்துவந்தான். கிருஷ்ணபகவானைத் தினந்தோறும் நியமப்படி பூஜை செய்து ஆராதனை செய்துவந்தான். நெடுநாள் கழித்து அவனுடைய மனைவி ஒரு புத்திரியைப்பெற்றாள். அரசனும் குழந்தையை எடுத்துக் கோவிலுக்குப்போய் கிருஷ்ணபகவானது பாதங்களில் கிடத்தி மகிழ்ந்தான். பிறகு அக்குழந்தைக்கு மீராபாய் எனப்பெயரிட்டார்கள்.

மீராபாய் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்தாள். கிருஷ்ண பகவானைப் பற்றிக் கீர்த்தனங்கள் பாடுவதிலும் அவரது குணவிசேஷங்களைப்பற்றிப் படிப்பதிலுமே அவள் காலம்கழித்து வந்தாள். சதாகாலமும் கிருஷ்ணனையே ஸ்மரித்திருந்தபடியால் கிருஷ்ணபகவான்தான் தனக்கேற்ற கணவன் என அவள் கருதியிருந்தாள்.

அவளது பெற்றோர்கள் அவளுக்கு வயதாகி விட்டதே, தகுந்த கணவனைத் தேடவேண்டுமேயெனக் கவலைகொண்டனர். ஒருநாள் மீராபாய் தன் பிதாவை நோக்கி "தாங்கள் கவலைப்படவேண்டாம் கிருஷ்ணபகவானே எனது கணவன்" என்று சொல்ல அவர் முதலில் கோபித்துக் கொண்டாலும் பிறகு அவளிஷ்டப்படியே கிருஷ்ண விக்ரஹத்தை மீராபாயிடம் ஒப்புவித்தார். மீராபாயும் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து கீர்த்தனங்கள் பாடி கிருஷ்ணவிக்ரஹத்தை மகிழச் செய்வாள். பிறகு வாசனைத் திரவியங்கள் சேர்

த்த எண்ணையிட்டு ஸ்நாநம் செய்வித்து அந்த விக்ரஹத்திற்கு ஆடை ஆபரணங்கள் அணிவித்துப் பலவகையான பதார்த்தங்கள் நைவேத்யம் செய்வாள். பிறகு அப்பதார்த்தங்களை விஷ்ணுபக்தர்களுக்கும் பரதேசிகளுக்கும் இட்டு சந்தோஷிப்பாள்.

இவ்விதமாக இருந்துவரும் நாளையில் அவ்வூர் ஜனங்களில் சிலர் "இது வெகு நன்றாயிருக்கிறது! நாம் செய்தால் அநியாயம், உயர்ந்தவர் செய்தால் பாதகமில்லை. காலாகாலத்தில் மணஞ் செய்வியாமல் தன் பெண்ணை இம்மாதிரி பக்கிரி பரதேசிகளுடன் சிநேகம் செய்திருக்க அரசன் விட்டிருக்கிறானே" என்று பழிச்சொல் பேசினார்கள். இதை அறிந்த அரசனும் மீராபாய் கலியாணம் செய்து கொள்ளவேண்டியது அவசியம் என உத்தரவிட்டான். ஆனால் மீராபாயோ பகவானைத்தவிர வேறொருவரும் தன் கணவராக மாட்டார் எனப் பிடிவாதமாய்ச் சொன்னாள். அரசன் கோபித்து "இப்பேற்பட்ட பெண் நம் குடும்பத்திற்குத் தகுதியல்ல. அவள் இறக்கவேண்டியவளே" என்று விஷங்கலந்த பானகத்தைப் பருகும்படி மீராபாயிடம் கொடுத்தான். மீராபாயின் தாயாரோ வருந்தி அழுதாள். மீராபாயும் "அம்மா! இந்த வாழ்நாள் ஒருகனுப்போல் இருக்கிறது. அக்கனுவிலிருந்து விழித்து எழுந்து பகவானிடம் செல்வதற்கு நாம் சந்தோஷப்படவேண்டும்" என்று அவளுக்குச் சமாதானம் சொன்னாள். பிறகு கிருஷ்ண விக்ரஹத்தைக் கட்டியணைத்து நமஸ்கரித்து "ஐயோ! நான் போனபிறகு உம்மை யார் பூஜை செய்வார்கள்?" என்று வருந்தி

விஷமுள்ள பானகத்தையே பகவானுக்கு நைவேத்யம் செய்துவிட்டு, பிறகு பகவானை ஸ்மரித்துக்கொண்டே தான் அதைக் குடித்துவிட்டாள். உடனே ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்தது. மீராபாயோ யாதொரு கெடுதியுமின்றி பாடிக்கொண்டிருக்க கிருஷ்ணவிக்ரஹமோ வரவரக் கறுத்து பார்க்க முடியாதபடி விகாரமடைந்தது. இதைக்கண்ட அரசன் "ஐயோ முட்டாள் புத்தியினால் கிருஷ்ணபகவானுக்கே விஷமிட்டேனே", எனக் கதறி மீராபாயை நோக்கி "அம்மா நீயே அவர் உருவம் முன்போல் ஆகும்படி செய்யவேண்டும்" என வேண்டினான். மீராபாயும் நெடுநேரம் கிருஷ்ண பகவானைப்பற்றிப் பாடித் துதித்தாள். "உமக்கு விஷத்தினால் என்ன உண்டாகும்? காளிந்தியில் விஷப்பாம்புகளின் மத்தியில் குதித்திரே!" என்றுபலவாறாகப் பிரார்த்தித்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அவ்விக்ரஹமும் கறுப்பு நீங்கி விகாரம் மாறி முன்போலாயது. ஆனால் கழுத்தில் மாத்திரம் அந்த விகாரவர்ணம் அப்படியே நிலையாக இருந்துவிட்டது. மீராபாயின் பக்தியும் பகவானது கருணையும் உலகத்தவருக்கு நன்றாக விளங்கும் பொருட்டு கழுத்தில் அந்த விகாரரூபம் மாறாமல் இருந்ததென்பார். இன்றைக்கும் உதயபூரிலுள்ள கிருஷ்ண விக்ரஹத்தின் கழுத்தில் இந்த விகாரத்தைப் பார்க்கலாம் என்று சொல்லுகிறார்கள். மீராபாயும் ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் துதித்துக் கொண்டேயிருந்து பகவானது அருளால் வைகுண்டபதவியை யடைந்தாள்.

# 19. பானுதாஸர்

கோதாவரி நதிக்கரையில் பைட்டனி (அல்லது பரிஷ்டானபுரம்) என்னும் ஊரில் பிராமண குலத்தில் பானுதாஸர் பிறந்தார். ஐந்து வயதாயிருக்கும்பொழுது அவர் பிதா அவருக்கு வித்யாப்பியாசம் செய்வித்து தினந்தோறும் வேதபாடம் சொல்லிக் கொடுத்துவந்தார். ஒருநாள் வாசிக்கையில் கவனம் செலுத்தாமலிருந்தபடியால் அவரைப் பிதா மிகவும் தண்டிக்க, பானுதாஸர் அதைச் சகியாமல் வீட்டைவிட்டு ஓடிச் சமீபத்திலிருந்த கோவிலில் ஒளிந்துகொண்டார். அங்கிருந்து பகவானை த்யானித்த வண்ணமாயிருக்க, கிருஷ்ணபகவானும் பானுதாஸருக்கு அன்ன ஆகாரமளித்தார். இவ்விதமாக மூன்றுநாட்கள் சென்றன. பானுதாஸரைத் தேடியலைந்த பிதாவும் அவரைக் கோவிலில்கண்டு மகிழ்ந்து பகவானது கருணையை வியந்து பானுதாஸரை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அதுமுதல் பானுதாஸர் பகவந்நாமஸ்மரணை செய்து ஆனந்தமாகக் காலம் கழித்துவந்தார்.

தகுந்த வயது வந்தவுடன் பானுதாஸருக்கு விவாகம் நடந்தது. காலக்கிரமத்தில் அவருக்குக் குழந்தைகளும் ஏற்பட்டன. ஆனால் பணம் சம்பாதிக்காமல் சதா பகவந்நாம ஸ்மரணத்தையே செய்து கொண்டிருப்பதைக் கண்டு அவர் மனைவியும் கோபித்துத் தன் பிதாவிடமிருந்து நூறு ரூபாய் வாங்கி பானுதாஸரிடம் கொடுத்து ஜவுளி வியாபாரம் செய்யச்சொன்னாள். மற்ற வியாபாரிகளும் பானுதாஸரிடம் இரக்கங்

கொண்டு வியாபாரத்திற்கு வேண்டிய உதவி புரிந்தனர். நிஜமான விலையைச் சொல்லாமல் அதிகமாகக் கூறி உனக்கு லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று அவர்கள் பானுதாஸருக்குப் புத்தி கூறினார்கள். ஆனால் பானுதாஸரோ கடையில் உட்கார்ந்து, வருபவருக்கெல்லாம் "விலை இவ்வளவு லாபம் இவ்வளவு, இஷ்டமானால் எடுத்துக்கொள்ளுங்கள். இல்லையானால் வேறு கடைக்குச் செல்லுங்கள்" என்று உண்மையைக் கூறிவிட்டு பகவானை பஜித்த வண்ண மிருந்தார். இதைக்கண்ட மற்ற கடைக்காரர்கள் இந்த பைத்தியக்காரன் ஜீவனம் செய்ய வகை யறியான் என்று பரிகாசம் செய்திருந்தார்கள். ஆனால் நாளாவிருத்தியில் வாங்குவோர்கள் எல்லாரும் பானுதாஸர் கடைக்குச் சென்றார்கள். ஒருவராயினும் மற்ற கடைக்காரர்களிடம் செல்லவில்லை. இதைக் கண்ட கடைக்காரர்கள் "இது என்ன அநியாயம்! இந்த பானுதாஸன் என்னமோ மந்திரம் பண்ணி இவர்களை எல்லாம் மயக்கிவிட்டான். எப்படியாவது இவன் வயிற்றில் மண்ணைப்போட வேண்டும்" எனச் சதியாலோசனை செய்தார்கள். இப்படியிருக்க ஒருநாள் அடுத்த கிராமத்தில் ஒருபாகவதர் ஹரி காலட்சேபம் செய்வதைக் கேட்க விரும்பி பானுதாஸர் தன் கடையைக் கவனித்துக் கொள்ளும்படி மற்றவர்களிடம் சொல்லிவிட்டுச் சென்றார். இதுதான் சமயமென்று மற்ற கடைக்காரர்களும் அவர் கடையில் இருந்த சாமான்களை எடுத்து ஒளித்துவிட்டு அவர் குதிரையையும் அவிழ்த்து விரட்டி விட்டார்கள். பிறகு அவர்கள் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பக்தனுக்கு நேர்ந்த ஆபத்தை யறிந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் ஓடிவந்து, ஒளித்து வைத்திருந்த சாமான்களை மீட்டும் கொண்டுவந்துவைத்துக் குதிரையையும் பிடித்துக்கொண்டுவந்து ஊருக்கு வெளியில் சாலையில் பானுதாஸர் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தார். சில திருடர்கள் திடீரென்று அவர்கள் சாமான்களையும் குதிரைகளையும் கொள்ளைகொண்டு போகும்படி பகவான் கருணைசெய்ய, அவ்விதமே நடந்தது. பகவானை பஜித்துக் கொண்டு திரும்பி வந்த பானுதாஸர் தன் குதிரையை ஒருவன் ஒப்புவிக்க அதைப் பெற்றுக் கொண்டவுடன் அம்மனிதன் மறைந்துபோனான். இது பகவான் விளையாடல் என ஆச்சரியப்பட்டு பானுதாஸர் ஊருக்குவர மற்ற கடைக்காரர்கள் எல்லோரும் கூக்குரலிட்டு அழுதுகொண்டிருக்கக் கண்டார். பானுதாஸரைக் கண்ட அவர்களும் "ஐயோ அநியாயமான காரியம் செய்ததனால் அல்லவா எங்களுக்கு அபராதம் விழுந்தது" எனத் தேம்பித்தேம்பி அழுதார்கள். பானுதாஸரும் விஷயத்தை அறிந்துகொண்டு தன் பொருளை எல்லாம் அவர்கட்கே கொடுத்துவிட்டு தன் குதிரையைப் பிடித்து நின்ற பகவானது திவ்யசரணங்களை எப்பொழுதும் தான் பிடித்துக் கொள்வதாகத் தீர்மானித்து ஒருவிநாடியேனும் வீணாக்காமல் பகவானை பஜனைசெய்து காலம் கழித்தார்.

இப்படியிருக்க ஒருநாள் விஜயநகரத்து அரசனாகிய ராமராயர் பண்டராபுரத்திலிருந்த கிருஷ்ணபகவானைத் தன் நகரத்தில் எழுந்தருளச் செய்து பூஜிக்க ஆசைகொண்டு பகவானை வேண்டிக்கொள்ள,

அவரும் அப்படியே சம்மதித்து "நியாய வரம்பு தவரு மல் நீ நடக்கும் வரையில்தான் விஜயநகரத்தில் இருப் பேன்" என்று சொன்னார். ராமராயரும் பண்டரா புரத்தில் இருந்த கிருஷ்ண விக்ரஹத்தைத் தன் ஊருக்கு எடுத்துப்போய் அங்கே சர்வோபசாரம்செய்து நாள் தவருமல் பூஜை நடப்பித்து வந்தார்.

பண்டராபுரம் ஒளியிழந்த வைரம் போலிருந்தது. அவ்வூர் ஜனங்கள் ஸ்ரீ கிருஷ்ணனைக் காணுது வருந்தி யிருந்தனர். இதை யறிந்த பானுதாஸர் ஸ்ரீ கிருஷ்ண னைத் தான் போய் எடுத்து வருவதாக வாக்களித்து விட்டு விஜயநகரம் சென்ருர். அரசன் அரண்மனையில் சர்வ ஜாக்ரதையாக வைத்திருந்த அறைக்குள் பக வான் அருளால் நுழைந்து, அவரை நோக்கி "ஹே கிருஷ்ண! எங்களை விட்டு ஏன் இங்கு வந்து விட்டீர்? எங்கள் தோத்திரங்களும் பூசைகளும் உங்களுக்கு அலுத்து விட்டனவோ? புண்டரீகனுக்கு பண்டராபுர த்திலிருந்து நீங்குவதில்லை என்று வாக்களித்தீரல்ல வா?" என்று கதறி பகவானை ஆலிங்கனம் செய்து புரண்டு அழுதார். பகவானும் பக்தனது துக்கத்தைக் கண்டு வருந்தி அவனைத் தேற்றித் தன் கழுத்திலிருந்த முத்துமாலையை அவனுக்கணிந்து "நாளை உன்னிடம் வந்துவிடுவேன்" என்று சொல்லியனுப்பினுர்.

பானுதாஸர் வெளியே போனவுடன் ராமராயர் கோவிலுக்குள் நுழைந்து, பகவானைப் பூஜைசெய்ய ஆரம்பித்தார். ஆனுல் முத்து மாலையைக் காணுமல் உடனே காவல்காரரை அழைத்து திருடனைத் தேடிப் பிடித்துவர வேண்டியது எனக் கண்டிப்பான உத்தரவு இட்டார். அவர்கள் நகர் முழுவதும் பரிசோதனை செய்தார்கள். பானுதாஸர் பயமின்றி கழுத்தில் முத்து மாலை அணிந்திருந்ததைக் கண்டு, உடனே அவர்கள் அவரைப்பிடித்து அரசன் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்திஞர்கள். அமர்ந்து விசாரி

யாமல் அவரைக் கழுவிலேற்றும்படி ராயர் அவசர மாக உத்தரவு செய்தார். அவர்களும் பானுதாஸரைக் கழுமரத்திற்கு இழுத்துச் சென்றார்கள். பானுதாஸரோ பயமின்றி "ஹே கிருஷ்ணு! என்னை ஏன் இப்படி வஞ்சித்தீர்? முத்துமாலையை நீரே கொடுத்து என்னை இந்தத் துன்பத்தில் விட்டீரே! எப்படியிருந்தென்ன! உம்மை ஸ்மரித்துக்கொண்டே நான் மரிப்பேன்" என்று கதறினர். பகவானருளால் கழுமரம் கூர்மழுங்கி இலை பூ காயுடன் செழித்த ஒரு மரமாக மாறியது. இந்த அற்புதத்தைக் கண்ட காவல்காரர் உடனே பானு தாஸரை யழைத்துக்கொண்டுபோய் அரசனிடம் விட்டு "ஐயா! இவர் ஒரு மஹா பக்திமான்!" என்று நடந்த தைச் சொன்னார்கள். ராயரும் அவரது அடி தொழுது வணங்கி நின்றார். பிறகு பானுதாஸரும் ராயரும் கிருஷ்ணபகவானிடம் சென்று நமஸ்கரித்தார்கள். பக வான் அரசனை நோக்கி "நீ இன்று நியாயத்தை விசாரி யாமல் தீர்ப்புச் செய்தாய். ஆதலின் நான் இனிமேல் இங்கிருக்க முடியாது" என்று பானுதாஸரைப் பார்க்க அவரும் அந்த கிருஷ்ண விக்ரஹத்தைத் தோளில் எடுத் துக்கொண்டு ஆனந்தமாக பகவானை பஜித்துக்கொண் டே பண்டராபுரத்திற்கு நடந்தார்.

பண்டராபுரத்திலோ பானுதாஸரது வரவை அன்ன ஆகாரமின்றி எதிர்பார்த்த வண்ணமாய் ஜனங் கள் உட்கார்ந்திருந்தார்கள். பகவானை எடுத்துக்கொண்டு அவர் வருவதைக் கண்டவுடன் அவர்கள் குதித்துக் கும்மி யடித்தார்கள். மேளம் கொட்டி வாத்தியங்களை வாசித்தார்கள். பானுதாஸரைக் கட்டி மகிழ்ந்தார்கள்.

இருண்டுபோன பண்டராபுரத்தில் சூர்யோதயம் ஆனது போலிருந்தது. பண்டராபுரத்திற்கு பகவான் வந்த வுடன் இறந்துபோனவன் உயிர் பெற்று எழுந்தது போல பட்டணம் முழுதும சந்தோஷம் அடைந்தது. பானுதாஸரோ பகவானைப் பஜனை செய்துகொண்டே யிருந்து மோக்ஷம் அடைந்தார்.

## 20. தாயுமான ஸ்வாமிகள்

தஞ்சாவூர் ஜில்லாவில் சமுத்திரக்கரை யோரமாக வேதாரண்யம் என்ற ஒரு பெரிய க்ஷேத்திரமிருக்கிறது. அதில் கேடிலியப் பிள்ளை என்று ஒருவர் வசித்துவந் தார். அவர் நிரம்பப்படித்தவர், புத்தி சாமர்த்திய முடை யவர். ஆதலால் அவரைத் திருச்சினுப்பள்ளியில் அரசரா யிருந்த நாயக்கர் தமக்கு முக்கிய உத்தியோகஸ்தராக வைத்துக்கொண்டார். பிள்ளையவர்கள் தமக்கு ஒரு புத்திரன் பிறக்கவேண்டுமென்று தினந்தோறும் கட வுளை வேண்டியிருந்தனர். திருச்சினுப்பள்ளி தாயுமா னேச்வரர் அருளினல் ஒரு ஆண் பிள்ளை பிறக்க, அக்குழந்தைக்கு தாயுமானவர் * எனப் பெயரிட்டார்.

தாயுமானவர் தக்க காலத்தில் வித்யாரம்பம் செய் விக்கப் பெற்று வெகு சீக்கிரம் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினுர். அவருக்குத் தமிழ் சம்ஸ்கிரதம் இரு மொழிகளிலும் பாண்டித்தியம் உண்டு. அவர் கல்வித் திறத்தை அறிந்த அரசன் அவர் தந்தை பிறந்த பிறகு அவருக்குத் தந்தைவேலையையே ஒப்புவித்தான்.

---

* ஒரு ஏழை ஸ்திரீ பிரசவகாலத்தில் தனக்கு உதவி செய்ய தன் மாதா வரவில்லையே என்று வருந்தி "ஏ பகவா னே நீரே தாயும் தந்தையும் ஆனவர்" என்று துதித்திருக்க, இங்கு அவள் தாய்வர முடியாமல் நதியில் வெள்ளம் பிரவாக மாய் ஓடியது. இதை யறிந்த பகவான் தானே தாய் வேஷத் துடன் அவளிடம் வந்து பிரசவகாலத்தில் செய்யவேண்டிய உதவியைச் செய்து, அவள் தாய் வந்தவுடன் பகவானுகிய தாய் மறைந்துபோனுள். இதைக்குறித்தே திருச்சினுப்பள் ளியில் பகவானுக்கு தாயுமானேச்வரர் (மாதுர்பூதேச்வரர்) என்று பெயர்.

அரச சபைக்கு வரும் பல வித்வான்களும் வாதஞ் செய்ய அவர் கேட்டிருப்பர். அவர்கள் தம் மனதுக்கு வேண்டிய உண்மையை அறிவிக்க முடியாமலிருப்பதைக் கண்டு ஏங்கியிருந்தார். ஒருநாள் அவ்வூருக்கு ஒரு பெரியவர் வந்தார். அவர் திருமூல நாயனார் குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கு மௌனகுருஸ்வாமிகள் என்று பெயர். தாயுமானவர் அவர் முகத்தைக்கண்டவுடன் வெகு சந்தோஷமடைந்து அவரிடம் வணங்கி நின்று உபதேசம் செய்யச்சொல்லி வேண்டினர். பிறகு குருஸ்வாமிகள் அவருக்குச் சில விஷயங்கள் போதித்து இன்னும் சிலநாள் லௌகிக வாழ்க்கையிலேயே இருக்கச் சொல்லிவிட்டுச் சென்றனர்.

நாளாக நாளாகத் தாயுமானவருக்கு பக்தி மேலிட்டு ஆத்மஞானம் விருத்தியாகி வந்தது. அரசனும் அவரது பக்தியை அறிந்து லௌகிக விஷயங்களைப்பற்றி அவரைத் தொந்தரவிக்காமலிருந்து வந்தனன். அரசன் இறந்த பிறகு தாயுமானவர் தேவை நகருக்குச் சென்றனர். அங்கே அவருக்கு கனகசபாபதி என்று ஒரு பிள்ளை பிறந்தது.

குருவைவிட்டுப் பிரிந்த தாயுமானவர் அவர் எப்பொழுது திரும்பி வருவாரோ என்று எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் குருஸ்வாமிகள் திரும்பிவந்து தாயுமானவரது பக்தியையும் ஆத்ம ஞானத்தையும் கண்டு வியந்து, அவருக்கு உபதேசம் செய்து யோகம் செய்யலாம் எனக் கூறினர். தாயுமானவரும் துறவறம் பூண்டு நிஷ்டையிலேயே வெகு ஆனந்தமாய்க் காலங் கழிப்பாராயினர்.

அவர் தமது எண்ணங்களையும் தமக்கு நேரிட்ட அனுபவங்களையும் பாட்டுக்கள் ரூபமாகச் சொல்ல, அவரது சிஷ்யர்கள் அவைகளைத் திரட்டி எழுதினர். அவரது தம்பியாகிய அருளைய பிள்ளையவர்கள்தான் முக்கியமாக இப்பாட்டுக்களை எல்லாம் எழுதினர். இராமனாதபுரத்தி னருகிலுள்ள தேவை நகரில், சுமார் கி. பி. 1740-ம் வருஷம் இவர் காலகதி யடைந்தனர்.

தாயுமானவர் பாடிய பாடல்கள் சுமார் ஆயிரம் உள. தமிழ் தெரிந்த யாவரும் தாயுமான ஸ்வாமி பாடல்களை வாசிக்க ஆசைகொள்வர்.

## தாயுமானஸ்வாமி பாடல்கள்:—

1. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
 ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது? தன்னருள் வெளிக்குளே
 அகிலாண்டகோடி எல்லாந்
தங்கும்படிக் கிச்சை வைத்து உயிர்க் குயிராய்த்
 தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது சமயகோடிகளெல்லாம்
 தன்தெய்வம் என்தெய்வமென்று
எங்குந் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது?
 எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்ல ஒரு சித்தாகி இன்பமாய்
 என்றைக்கும் உள்ளதெது மேற்
கங்குல் பகல் அற நின்ற எல்லையுளது எது அது
 கருத்திற் கிசைந்தது அதுவே
கண்டன வெலாம் மோன வுரு வெளியதாகவுங்
 கருதியஞ் சலி செய்குவாம்.

2. தூள்ளுமறியாமனது பலிகொடுத்தேன் கன்ம
துஷ்டதேவதைக ளில்லை
தூரியநிறை சாந்த தேவதையா முனக்கே
தொழும்பனன் பபிஷேக நீர்
உள்ளுறையி லென்ஆவி நைவேத்தியம் பிராணன்
ஓங்கும் மதி தூபதீபம்
ஒருகால மன்றுஇது சதாகால பூசையாய்
ஒப்புவித்தேன் கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்த தேனே சீனியே
திவ்ய ரசம் யாவுந் திரண்டொழுகும் பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளனறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரும் நல்ல உறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

3. எத்தனைவிதங்கள்தான் கற்கினு கேட்கினுமெ என்
இதயமும் ஒடுங்கவில்லை;
யானெனு மகந்தை தான் எள்ளளவு மாறவில்லை.
யாதினும் அபிமானம் என்
சித்தமிசை குடிகொண்டது; ஈகையோடிரக்கம் என்
சென்மத்து நானறிகிலேன்.
சீலமோடு தவவிரதம் ஒருகனவிலாயினும்
தரிசனம் கண்டு மறியேன்.
பொய்த்தமொழி யல்லால் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன்; பிறர் கேட்கவே
போதிப்பதல்லாது, சும்மாவிருந்து அருள்
பொருந்திடாப் பேதை நானே,

அத்தனை குணக்கேடர் கண்டதா கேட்டதா
அவனிமிசை உண்டோ சொலாய்!
அண்டபகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்தமான பரமே.

4. இனியேது எனக்குன் அருள் வருமோ வெனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பர் என்று
எண்ணவோ திடமில்லையே
அநியாய மாயிந்த உடலைநானென்று வரும்
அந்தகற் காளாகவோ
வாடித்திரிந்து நான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதனன்றோ
கனியேனும் வறிய செங்காயேனும் உதிர்சருகு
கந்தமூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினேன் எண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே.

5. ஒன்றாகிப் பலவாகிப் பலவாக்கண்ட
வொளியாகி வெளியாகி உருவுமாகி
நன்றாகித் தீதாகி மற்றுமாகி
நாசமுடன் உற்பத்தி நண்ணுதாகி
இன்றாகி நாளையுமாய் மேலுமான
வெந்தையே எம்மானே என்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதாவாகிக்
கடிதினில் வந்தருள்கூறுங் கருணைவிண்ணே

ii அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரியவான
பொருளனைத்தும் தரும்பொருளே கருணைநீங்காப்
பூரணமாய் நின்ற ஒன்றே!
கருதரிய கருத்தனுட் கருத்தாய்மேவிக்
காலமுந் தேசமும் வகுத்துக்கருவி யாதி
விரிவினையுங் கூட்டி உயிர்த் திரளை யாட்டும் [கேளே.
விழுப்பொருளே யான்சொலும் விண்ணப்பங்

6. கண்ணே கருத்தே யென்கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்தவியப்பே பராபரமே.
பார்த் தவிடமெல்லாம் பரவெளியாய்த் தோன்ற ஒரு
வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே.
ஓயாதோ என்கவலை உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே. [நெஞ்சம்
எண்ணாத எண்ணமெலாம் எண்ணியெண்ணி ஏழை
புண்ணாகச்செய்தது இனிப்போதும் பராபரமே.
எவ்வுயிரு மென்னுயிர்போல் எண்ணி யிரங்கவு நின்
தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே.
வித்தன்றியாதும் விளைவதுண்டோ நின்னருளாம்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே.
எல்லாருமின் புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.
கல்லாதேன் ஆனாலுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத்தொடர்ந்தேன் பராபரமே.

பக்தர்சித்தர்வாழி, பரிபக்குவர்கள்வாழி, செங்கோல்
வைத்தவர்கள்வாழி, குருவாழி பராபரமே.